# கலை மலர்

கோப்பாய்,

அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலை.

மலர் 14 1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்ப் பயிற்சி மாலைகள்

இனிய தமிழில் செந்தமிழில்

ஆக்கப்பட்டவை.

மாணவரது மொழிவளமும்

இலக்கிய நயமுஞ் சிறக்க உதவுபவை

*கல்விமுறைப் புலமையாளரினதும்*

*மொழி வல்லாரினதும் பாராட்டுக்குகந்தவை.*

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபையின்

அங்கீகாரம் பெற்றவை.

*நூலாசிரியை:*

செல்வி. க. சௌ. சந்தனநங்கை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For quality PHOTOGRAPHS



GNANAMS

JAFFNA PHONE: 7067

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*WITH THE BEST COMPLIMENTS*

*FROM*

**P. THANGA RAJ**

(DEALERS IN ALL KINDS OF POLYTHENE)

38, MAIN STREET,

HATTON.

*With the Best Compliments*

*from*

**"RATHNA MALIGAI"**

88, MAIN STREET,

HATTON.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமலர்

வாழிக் கல்மின்

அரசாங்க மகளிர் ஆசிரியர் கலாசாலை

கோப்பாய்

மலர் 14 1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரில்......


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இறை வணக்கம் | 1 |
| 2. | கலைமலர்க் குழுவினர் | 2 |
| 3. | கலாசாலை விரிவுரையாளர்கள் | 3 |
| 4. | மலராசிரியர் உரை | 5 |
| 5. | கலாசாலைக் கீதம் | 6 |
| 6. | ஆசிச்செய்தி; உயர் திரு. தி. மாணிக்கவாசகர் | 7 |
| 7. | அதிபர் ஆசியுரை | 8 |
| 8. | கற்றற் றொழிற்பாட்டினைத் தீர்மானிக்கும் சில காரணிகள் | 9 |
| 9. | "இரானென்ன நிற்கின்ற ஈசன்" | 13 |
| 10. | கோடுகீறும் குழந்தை ஓவியனாக உருவாகலாம் | 16 |
| 11. | இன்றைய கல்வியில் ஆசிரியர் மாணவர் உறவு | 18 |
| 12. | சமூகவியல் கற்பதன் நோக்கம் | 21 |
| 13. | பொருளாதார அபிவிருத்தியும் கல்வியும் | 23 |
| 14. | செவிப்புலன் இழந்தோர்க்குரிய கல்வி முறை | 28 |
| 15. | கிராமிய நடனங்கள் | 30 |
| 16. | காந்தியின் கல்விக் கொள்கைகளும் இன்றைய கல்வி முறைகளும் | 32 |
| 17. | நவீன கணிதத்தில் ஓர் அலகு | 35 |
| 18. | ஈரிதழ்கள் இணையாதுவிட்டால் | 39 |
| 19. | திருவாசகத் தேன் | 41 |
| 20. | சமயமும் வாழ்வும் | 42 |
| 21. | இலக்கியம் என்றால்... | 45 |
| 22. | பாலர் வகுப்பில் வாசிப்புப் பயிற்றல் | 48 |
| 23. | Flash Cards as an aid for Teaching English | 51 |
| 24. | மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் | 54 |
| 25. | நாட்டுப் பாடல்கள் | 56 |
| 26. | வாசித்தல் : அதன் இயல்பு விளக்கம் | 60 |
| 27. | கலைத்திட்டத்தின் உடற்கல்வியின் பங்கு | 66 |
| 28. | இன்றைய ஆரம்ப எண்கணிப்புகள் | 68 |
| 29. | விஞ்ஞானத்தின் தயக்கம் | 72 |
| 30. | சுவைமிகு சுற்றுலா | 75 |
| 31. | கோவையில் உதிர்ந்த முத்து | 79 |
| 32. | பரிசளிப்பு விழா | 80 |
| 33. | கோவையூர் உவந்தளித்த ஆசிரியத் திலகங்கள் | 82 |
| 34. | இவ்வாண்டிலே | 92 |
| 35. | கலாசாலை ஆளுமன்றம் | 95 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்


| | | |
|---|---|---|
| 36. | தமிழ் மன்றம் ... ... ... ... | 97 |
| 37. | இந்து மன்றம் ... ... ... ... | 98 |
| 38. | கிறிஸ்தவ மன்றம் ... ... ... | 99 |
| 39. | விவசாய மன்றம் ... ... ... ... | 101 |
| 40. | கணித—விஞ்ஞான மன்றம் ... ... ... | 102 |
| 41. | மனையியல் மன்றம் ... ... ... | 103 |
| 42. | உடற்பயிற்சி மன்றம் ... .. ... | 104 |
| 43. | நுண்கலை மன்றம் ... ... ... | 105 |
| 44. | English Literary Association ... ... ... | 106 |
| 45. | அருணா இல்லம் ... ... ... ... | 107 |
| 46. | இராதா இல்லம் ... ... ... ... | 108 |
| 47. | சுவர்ணா இல்லம் ... ... ... ... | 109 |
| 48. | வாழ்க பல்லாண்டென வாழ்த்துகிறோம் ... ... | 110 |
| 49. | இல்லப் போட்டிகளும் முடிவுகளும் ... ... | 111 |
| 50. | நினைவு கூருவோம் ... ... ... | 118 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வணக்கம்

அங்கிங் கெனுதபடி எங்கும்ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்டகோடி யெல்லாம்
தங்கும்படிக் கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமனின்றதெது சமய கோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்றதெது
எங்கணும் பெருவழக்கா
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ள தெதுமேல்
கங்குல் பகலறநின்ற வெல்லையுள தெதுஅது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலா மோனவுருவெளிய தாகவுங்
கருதியஞ்சலி செய்குவாம்.

தாயுமான சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமலர்க் குழுவினர்

| | |
|---|---|
| **காப்பாளர் :** | திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி |
| **ஆலோசகர் :** | திரு. சி. குமாரசாமி |
| | திருமதி ம. திருச்சிற்றம்பலம் |
| **மலராசிரியர் :** | திருமதி சி. திருஞானசுந்தரம் |
| **செயலாளர் :** | ,, சௌ. விஞயகமூர்த்தி |
| **பொருளாளர் :** | ,, ஜெ. கனகரத்தினம் |
| **செயற் குழுவினர் :** | திருமதி அ. அல்பிறெட் |
| | ,, தானியேல் பிலோமிஞ |
| | ,, ம. லம்பேட் |
| | ,, ச. தங்கராசா |
| | ,, ப. இரத்தினசிங்கம் |
| | ,, ச. சுந்தரமூர்த்தி |
| | ,, பு. கார்த்திகேயன் |
| | செல்வி பு. சபாரத்தினம் |
| | ,, த. சங்கரப்பிள்ளை |
| | ,, செ. சுப்பையா |
| | ,, நா. செல்வத்துரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலை விரிவுரையாளர்கள்

அதிபர் : திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி, M. A., M. Sc.

விரிவுரையாளர்கள் : திருமதி சு. செல்வத்துரை, B. A., Dip. in Edu.
,, ஜி. கூல், B. Sc. 1st. Class, Hons. (Lond).
,, மி. சிவசுப்பிரதாஸ், B. A. F. R G. S. (Lond)
,, ம. திருச்சிற்றம்பலம், B. A.
செல்வி ஜி. ஆர். செல்லப்பா, 1st Class Eng. Trd.
,, த. முத்தையா, B. Sc.
வித்துவான் சி. குமாரசாமி, B. A.
க. துரைராசா, B. Sc. Dip. in Edu.
திருமதி ஒ. செ. தர்மானந்தன், 1St Class Trd. Specialist ni Home Science
திருமதி லூ. லூ. யேக்கப், Art Teacher Certificate
,, டெ. தருமராஜா, P. T. I.
,, பொ. பத்மநாதன், சங்கீதபூஷணம்
செல்வி. க. சங்கரப்பிள்ளை, Dip. in Dancing
திரு. வி. கு. இராமலிங்கம், நூலகர்
கட்புல செவிப்புல சாதன உதவியாளர்

பகுதிநேர விரிவுரையாளர்கள் :

சங். சகோதரி மேரி டானியெலா (ரே. க.)
திரு. கே. குமாரசிங்கம் (உடல்நலக் கல்வி)

எழுதுவினைஞர் :

செல்வி. இ. கணேசபிள்ளை.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரமாளிகை

நகை வியாபாரிகள்

79. கன்னாதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7036.

141, 143, செட்டித்தெரு,
கொழும்பு.

தொலைபேசி: 36321.



# அன்பளிப்பு

இ. கிருஷ்ணசாமி,
முந்திரிகைத் தோட்டம்,
உரும்பிராய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியர் உரை

அறிவுப் பூங்கொத்தாக ஆண்டுக்கொருமுறை இதழ்கள் விரித்து நறுமணம் பரப்பும் இம்மலர் வழக்கம்போல அறிஞர், ஆசிரிய மாணவியர் என்போரது கைவண்ணம் அணிசெய்ய மலர்கிறது.

கருத்துயர் கட்டுரைகள், அருங்கலை போற்றும் அறிஞர் பலரின் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கிய அரிய உரைகள், கவினுறு கவிதைகள், நவீன கணிதத்தின் நல்லியல்புகள், விந்தைகள் பல செய்யும் விஞ்ஞானக் கருத்துக்கள், கவின் கலைகளின் பெருமையை உணர்த்தும் கருத்தோவியங்கள் இம்மலரைப் பொலிவுடன் திகழச் செய்கின்றன.

இம்மலர் நறுமணம் பரப்ப உறுதுணையாக நின்று ஆக்கமும் ஊக்கமும்அளித்து ஆசிதந்த அன்பும் பண்பும்மிக்க எங்கள் அதிபர், நாடியபோதெல்லாம் நல்லுதவி தந்து வழிகாட்டிய ஆலோசகர்கள், அறிவுயர் பேராசிரியர்கள், வாழ்த்துரை வழங்கிய பெரியோர், இதனைப் பொலிவுறச் செய்யும் கட்டுரைகள் தந்துதவிய அறிஞர்கள், ஞானம்ஸ் புகைப்படத்துறையினர், விளம்பரங்கள் தந்துதவிய பெருந்தகையாளர்கள், அழகுற அச்சேற்றி உதவிய புனித சூசைமாமுனிவர் அச்சகத்தார், ஒத்துழைப்பு நல்கிய கலைமலர்க் குழுவினர் அனைவருக்கும் எம் உளங் கனிந்த நன்றி உரித்தாகுக.

வணக்கம்.

திருமதி. சி. திருஞானசுந்தரம்,
மலராசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலைக் கீதம்

இராகம்: மோகனம் | தாளம்: ஆதி

### பல்லவி

யாழ் நகர் மீதமர் கோப்பாய் மகளிர்
ஆசிரியர் கலாசாலை வாழ்க.

### அநுபல்லவி

அறிவொளி பெருக்கியே வாழ்க
ஆசிரியர் மாணவர் வாழ்க.

### சரணங்கள்

1. அறிவியற் கலையுடன் அழகியற் கலைகள்
அறிந்திடும் பான்மையை அறிவோம்
அருந்தமிழ் அகநூல் அறிவுறு கணிதம்
ஆவன நிறைந்திடப் பயில்வோம். (யாழ்)

2. ஒழுக்கமும் நேர்மையும் உடலுறு பலமும்
உண்மையில் ஓங்கிடப் பயில்வோம்.
ஓரிரண்டாண்டாய் ஓர்ந்திடுங் கலைகள்
உலகினில் ஓங்கிடப் பயில்வோம் (யாழ்)

3. தண்டமிழ் ஓங்கவே தொண்டுகள் புரிந்து
தரணியிற் காப்போம் எம்மானம்
எண்டிசை புகழுவெங் கலாசாலை வாழ்க
இயன்ற நற் பணிகளைப் புரிவோம் (யாழ்)

4. அரசினர் ஆசிரியர் ஆற்று நல்லுதவி
அகிலத்தில் என்றென்றும் மறவோம்
அதிபரும் ஏனைய ஆசிரியர் குழாமும்
ஆண்டவனால் என்றும் வாழ்க. (யாழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அதிபர்



திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடமாநில கல்வி அதிபதி

## உயர்திரு. தி. மாணிக்கவாசகரின்

# ஆசிச்செய்தி

பாடசாலையே ஒரு சமுதாயத்தின் அச்சாணி. அதனை இயக்கும் ஆசிரியர்கள் அப்பாடசாலை அமைந்திருக்கும் கிராமத்தை வழிநடத்த வல்லவர்கள். சமூக வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு. பாடசாலை தம்மோடு தொடர்பற்ற — தனிப்பட்ட ஒரு கூடம் என்ற மனப்பான்மை அகற்றித் தம்முடைய வாழ்வோடு இணைந்த ஒரு நிறுவனம் என நாட்டு மக்கள் எண்ணக் கூடியதாக ஆசிரியர்கள் தொண்டாற்ற வேண்டும். இத் தகைய ஆசிரியர்களை உருவாக்குவதே ஆசிரிய கலாசாலைகளின் தலையாய பணியாகும். கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை இந்நோக்கத்தைச் சிறந்தமுறையில் நிறைவேற்றி வருவது கண்டு மகிழ்கிறேன். இக்கலாசாலையில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டுள்ளேன். பயிற்சிநெறி பெற்றோரின் செயற்றிறன்களை விளக்குவதோடு துறைபோய பல பேரறிஞர்களின் கருத்தோவியங்களையும் தாங்கி வெளிவரும் இக்கலாசாலைச் சஞ்சிகையான கலைமலருக்கு எனது ஆசியுரையை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

தி. மாணிக்கவாசகர்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
சி. இரா/31.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் ஆசியுரை

சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்புப் பெரும்பாலும் ஆசிரியருடைய கையிலேயே தங்கியிருக்கிறது. கல்விப் பணியைச் சிறந்த முறையில் செய்வதற்கு வேண்டிய பயிற்சியை எம் கலாசாலை நீண்டகாலமாக அளித்து வருகின்றது. கல்வியோடு மற்றும் பல கலைகளிலும் ஆசிரியர்கள் பயிற்சிபெற இக்கலாசாலை வாய்ப்பை அளிக்கின்றது என்று கூறுவதில் பெருமையடைகின்றேன். ஆண்டுதோறும் வெளிவரும் இக்கலாசாலைச் சஞ்சிகை இம்முறையும் சிறப்பாக வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். எங்கள் கலாசாலையிலே நடக்கும் சகல நிகழ்ச்சிகளையும் எடுத்துக் காட்டுவதோடு மாணவர் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்த இது ஓர் அரிய சாதனமாக அமைகின்றது.

சிறந்த அறிஞர்களுடைய அறிவுரைகள், ஆசிரியமாணவிகளது கட்டுரைகள் வழமைபோல் இம்முறையும் இடம்பெற்றுள்ளன. கல்வித்துறையில் காலத்துக்குக் காலம் மாற்றம் ஏற்படுவதுபோல் வருடந்தோறும் புதுப்பொலிவுடன் சஞ்சிகை வெளிவருவது போற்றுதற்குரியது. எதிர்காலத்திலும் மென்மேலும் புதிய பல அம்சங்களைக் கொண்டு சுடர்விட்டுப் பிரகாசிக்க வாழ்த்துகின்றேன்.

இங்கு பயிற்சிபெற்று வெளியேறும் மாணவர்கள் இக் கலாசாலையின் குறிக்கோளை என்றும் நிலைநாட்டவேண்டுமென்பதே எனது வேணவா. எதிர்காலத்தில் சிறப்புடனும் வெற்றியுடனும் தமது பணியைச் செய்வதற்கு எனது நல்லாசிகள் உரித்தாகுக.

திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி

அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றற் றெழிற்பாட்டினைத் தீர்மானிக்கும் சில காரணிகள்

தி. வேலாயுதம், B. Sc. Dip. in Edu, M. A.
(விரிவுரையாளர், கல்வித்துறை, பேராதனை வளாகம்)

கற்றல் எவ்வாறு நிகழ்கின்ற தென்பதனைக் கற்றல் கொள்கைகள் விளக்குகின்றன: உளவியல் ஆய்வுகூடங்களில், கட்டுப்படுத்தப்பட்ட நிலைமைகளுக்கு இடையில் உளவியலறிஞர்கள் பரிசோதனைகளை நடத்தி, அவற்றின் பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்டு தம் கொள்கைகளை உருவாக்கி வெளியிட்டார்கள். இதற்காக நடாத்தப்பட்ட பரிசோதனைகளில் பெரும்பாலும் விலங்குகளையே பயன்படுத்தினார்கள். ஆனால், கற்றல் கொள்கைகளை உருவாக்குவதற்கு ஆதாரமாக அமைந்த பரிசோதனை நிலைமைகள் போன்று, சாதாரண வகுப்பறை நிலைமைகள் கட்டுப்படுத்தப்பட்டவையல்ல. உண்மையில் பலதரப்பட்ட உளவியல் சமூகநிலைமைகள், வகுப்புக்கு வகுப்பு, பாடத்திற்குப் பாடம், ஆசிரியருக்கு ஆசிரியர், மாணவருக்கு மாணவர் வேறுபடுகின்றன. இவற்றைத்தவிர உளவிருத்திநிலை, விளங்கும் ஆற்றல், மொழியைப் பயன்படுத்தும் ஆற்றல், பரம்பரை பரம்பரையாகத் தம் அறிவுக் களஞ்சியத்தை அதிகரித்தலும் விரிவாக்குதலும் போன்றவற்றில் விலங்கினங்களிலிருந்து மனிதர் வேறுபடுகின்றனர். எனினும் வகுப்பறையில் கற்றல் சிறந்த முறையில் அமைய உதவும் சில காரணிகளைக் கற்றற் கொள்கைகள் விளக்குகின்றன. இவற்றில் சிலவற்றினையும், வகுப்பறைச் சமூகச் சூழலில் எழும் சில காரணிகளையும் நோக்குவோம்:

ஓர் உயிரியில் இடம்பெறும் நடத்தையைத் திரும்பவும் இடம்பெறச் செய்தலை மீளவலியுறுத்தல் எனலாம். இதற்காக அவ்வுயிரிக்கு, அந் நடத்தையைத் தொடர்ந்து வெகுமதியளிக்க வேண்டும்: உளவியற் பேராசிரியர் ஸ்கின்னர் புறுக்களுக்குத் தானியங்களை வெகுமதியாக வழங்கிச் சில குறிப்பிட்ட நடத்தைகளை மீளவலியுறுத்தினார். இவ்வாறுகச் சிறு மீளவலியுறுத்தல்களைத் தொடர்ச்சியாகவும் தெரிந்தும் அளிப்பதால் சிக்கலான நடத்தைகளைக் கற்கச் செய்யலாமென நிரூபித்தார். இதைப்போன்று மாணவர்கள் கற்பதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளையும், நடத்தைகளையும் மீள வலியுறுத்துவதால் கற்கச்செய்யலாமென ஸ்கின்னர் கருதினார். மாணவர்கள் கற்பதைப் பொறுத்தமட்டில் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை நடத்தைகளை அல்லது தூண்டற் பேற்றினைத் தெரிந்து, தொடர்ச்சியாக மீள வலியுறுத்திக் கற்கச்செய்யலாம். மாணவர்களின் கற்றல் முயற்சிகளை மீளவலியுறுத்தத் தம் தூண்டற்பேறு சரியானது அல்லது பொருத்தமானது என அறிந்துகொள்வதே போதுமானதாகும். ஆனுல் ஒரு வகுப்பிலுள்ள எல்லா மாணவருக்கும் தொடர்ச்சியாகவும், தாமதமின்றியும் அவர்களின் தூண்டற்பேறு சரியானது அல்லது பொருத்தமானதென அறியச் செய்து மீள வலியுறுத்தமுடியாது. இதனுல் ஒவ்வொரு மாணவருக்கும், உடனடியாகவும் கிரமமாகவும் மீளவலியுறுத்த முன்திட்டக் கற்பித்தல்முறையை அறிமுகப்படுத்தினுர் ஸ்கின்னர். இவ்வாறுக மாணவர் பொருத்தமானதும், சரியானதும், விரும்பத்தக்கதுமான விதத்தில் சிந்தித்துச் செயலாற்றும்போது அவற்றினைப் பொருத்தமானவை, சரியானவை அல்லது விரும்பத்தக்கவையெனத் தெரியப்படுத்துவதனுலும், மதிப்பையும் கணிப்பையும் கொடுத்தாலும் கற்றலை வலுவடையச்செய்யலாம். இதற்குமாறுகத் தண்டனையளித்தல், கண்டித்தல், பரிகாசம்செய்தல் போன்றவை கற்றலைப் பாதிக்கின்றன. எனவே வகுப்பறையிலும், வெளியிலும் இம்முறைகளைக் கையாளக்கூடாது: மேலும் இவை ஆசிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர்—மாணவர் தொடர்பையும் பாதிக்கலாம்.

கற்றலுக்கு ஆயத்தநிலை அதிமுக்கியமான தொன்றாகும். இந்நிலை போதிய உடலியல் உளவியல் விருத்தி நிலையினதும் கற்பதற்குரிய விடயத்தின் முக்கியத்துவத்தையும், பொருத்தப்பாட்டையும் எடுத்துணர்த்துவதாலும், கற்பதற்கு அவசியமான சில முன்னிலைகளை ஆக்கிக்கொள்ளுவதனுலும், மாணவர்களைக் கற்பதற்கான ஆயத்த நிலையை அடையச் செய்யலாம். இப்பொறுப்பு ஆசிரியருடையதென பேராசிரியர் "றையிலர்" வற்புறுத்துகிருர். இவற்றினை நோக்குமிடத்து கற்றலும், கற்பித்தலும் ஒன்றையொன்று சார்ந்தவை என்பதும் ஒன்றையொன்று இயக்குகின்றன என்பதும் புலனுகிறது. கற்றலுக்கு வேண்டிய ஆயத்த நிலையை மாணவர்கள் அடைந்தார்களெனில், மாணவர்கள் ஓரளவு தாம் கற்கவேண்டியவற்றைத் தாமே தேர்ந்தெடுக்கவும், கற்பதற்கு வேண்டிய விபரங்களையும் தரவுகளையும் சேகரிக்கும் முறைகளைத் திட்டமிடவும் வழிவகை செய்யலாம். எனவே கற்பித்தற்ருெழிற்பாட்டின்போது எல்லாவற்றையும் ஆசிரியர் சொல்லிக்கொடுப்பதற்குப் பதிலாக மாணவர்கள் கற்பதற்கான சூழ்நிலையை ஆக்கிக்கொடுத்தலே முக்கியமெனும் கருத்தினை வலியுறுத்தல் அவசியமாகிறது.

எப்படிப்பட்ட விடயத்தை அல்லது எவ்வாருன முயற்சியை மாணவர்கள் கற்க முற்படுகிருர்கள் என்பது அவர்கள் கற்பதற்கென எடுத்த முயற்சிகளையும், அதனுல் பெற்ற அனுபவங்களையும் பொறுத்திருக்கும். அவன் முன்னர் மேற்கொண்ட கற்றற்ருெழிற்பாடுகளில் சித்தியடைந்திருந்தால், மேலும் கடினமானதும் சிக்கலானதுமான விடயங்களைக் கற்க முனைவான். ஆனுல் முன்பு மேற்கொண்ட கற்றல் முயற்சிகளில் சித்தியடைந்திராவிட்டால் இதனினும் பார்க்க எளிதானவற்றையும், சிக்கல் குறைந்தவற்றையும் கற்க முற்படுவான். இவ்வாறு ஒருவர் தம் முன்னைய அனுபவங்களின் அடிப்படையில், மேற்கொண்டு கற்றல் முயற்சிகளைத் தெரிந்தெடுத்தலை உளவியலறிஞர் "கே; லியுவின்" "அவா மட்டம்" என்னும் கருத்தைப் பயன்படுத்தி விளக்குகிருர். ஆசிரியர்கள் தம் மாணவருக்கு அவர்களின் ஆற்றலுக்கும், அனுபவங்களுக்கும் அமையக் கற்றல் முயற்சிகளையும், பணிகளையும் கொடுக்கவேண்டும். மேலும், மாணவர்கள் கற்றல் முயற்சிகளைத் தெரிந்தெடுக்கும்போது அவர்கள் கொள்ளும் அவா மட்டம், அவர்களின் ஆளுமைப் பண்புகளையும் பொறுத்திருக்குமென எச். றிமில்விற்று நிரூபித்துள்ளார். எனவே ஆசிரியர்கள் தம் மாணவருக்குக் கற்றல் முயற்சிகளைக் கொடுக்கும்போது அவர்களின் உளத்திறன், முதிர்வு, ஆயத்தநிலை போன்றவற்றுடன், தம் மாணவரின் ஆளுமைப் பண்புகளையும் ஓரளவு அறிந்திருத்தல் கற்பித்தலுக்குப் பெரிதும் உதவும். ஆளுமையை மதிப்பிடுவதற்குச் சில ஆளுமைச் சோதனைகளை உளவியலறிஞர்கள் தயாரித்துள்ளார்கள். இவற்றை ஆசிரியர்கள் பயன்படுத்தலாம். சில சூழற் காரணிகளும், கலாச்சாரக் காரணிகளும், கற்றலின்போது அவா மட்டத்தைத் தீர்மானிக்கின்றன. உதாரணமாகத் தம் குழுவினரது அடைவு நிலை, போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு தம் அவாமட்டத்தை மாணவர்கள் ஆக்கிக்கொள்ளுகிருர்கள் எனப் பேராசிரியர், ஈ. ஏ. பீல் கண்டார். எனவே ஒரு வகுப்பு மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்துக் கற்பிப்பதற்கு இக்கருத்துப் பெரிதும் உதவும். வெவ்வேறு சமூக பொருளாதார நிலைகளிலுள்ள குழுக்கள், அவற்றின் சிறப்பான மொழி வழக்கைக் கொண்டுள்ளன எனவும், இம்மொழி வழக்கு அக்குழுவைச் சேர்ந்த மாணவரின் அடைவைத் தீர்மானிக்கிறது எனவும், தமது ஆய்வுகளில் பி. பேர்ன்ஸ் ஸ்றீனும், அவரின் துணையாராய்ச்சியாளரும் கண்டுள்ளார்கள். எனவே ஆசிரியர் தம் மாணவர்களின் சூழல் நிலைமைகளையும், கலாச்சாரப் பண்பாட்டு முறைகளையும், சமூகப் பொருளாதார நிலையினையும் அறிந்திருத்தல் கற்பித்தலுக்குப் பெரிதும் உதவும்.

மனிதர் உள்ளிணைந்த சிக்கலான விடயங்களைக் கற்கவும், பிரச்சினைகளைத் தீர்க்கவும், அவர்கள் அகக் காட்சியை அமைத்துச் செயலாற்றுகிருர்கள் என உளவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பன்னர் கோகிலர் கருதுகிருர். இதற்கு அவர்களின் முன் அனுபவமும், தேவையாலும் அகக்காட்சியின் அமைப்பை மாற்றியமைத்தலும் உதவுகின்றன. மாணவர் பொருத்தமானதும், பயன்தருவதுமான அகக்காட்சியை ஆக்கிக்கொள்ள ஆசிரியர், ஒரு பிரச்சினையை அல்லது நிலைமையை விளங்கவும், அதன் பல அம்சங்களுக்கிடையில் உள்ள தொடர்புகளை அறியவும், அதனை முழுமையாக நோக்கவும் உதவ வேண்டும். கணித சம்பந்தமான பிரச்சினைகளைத் தெளிவான விளக்கத்தின் அடிப்படையில் அகக்காட்சிகளை அமைத்துத் தீர்க்கும் முறைகளை எம். வேர்த்மயர் என்னும் உளவியலறிஞர் தம் "ஆக்கச் சிந்தனை" என்னும் நூலில் விபரித்துள்ளார்.

மாணவர் புதியனவற்றையும், ஆர்வத்தையும், சிந்தனையையும் தூண்டுவனவற்றையும் தாமாகவே கற்க முற்படுவர். இவை ஊக்கத்தைக் கற்பவரின் புறத்திலிருந்து தோன்ருமல் அவரின் அகத்திலிருந்தெழச் செய்கின்றன. இவ்வகை ஊக்கிகள் புறவூக்கிகளிலும் பார்க்கத் திறம்படவும், தொடர்ச்சியாகவும் கற்றலை ஊக்குவிக்கும். மனிதர் பள்ளிக்கூடக் காலத்தில் மட்டுமல்லாமல் தொடர்ந்தும் வாழ்நாள் முழுவதும் கற்பவராகத் திகழ வேண்டும் என்ற கருத்து இப்போது கல்வி நெறியாளரிடையே நிலவுகிறது. இதற்குப் புறவூக்கிகளிலும் பார்க்க அகவூக்கிகளே பெரிதும் பயன்படும்.

குழந்தையின் உளவிருத்தியின்போது, தம் சுய முயற்சியினுல் தமது உள்ளத்தில் ஒரு "மாதிரியை" உருவாக்குகின்ருர்கள் என்றும் எண்ணக்கருக்கள் விருத்தியாகின்றன என்றும், சுவற்சலாந்து நாட்டு உளவியலறிஞர் "ஜீன் பியாஜே" தம் ஆய்வுகள் மூலம் தெரிவித்துள்ளார். இவ்வுள மாதிரியும், எண்ணக்கருக்களும் கற்றல் நடைபெறுவதற்கான அடிப்படைத் தேவைகளெனலாம். இவ்வெண்ணக்கருக்கள் பிள்ளைகளில் குறிப்பிட்ட வயதை அடிப்படையாகக் கொண்ட பருவங்களை அனுசரித்துக் கிரமமாக விருத்தியாகின்றன எனப் பியாஜே மேலும் நிரூபித்துள்ளார். ஆனுல் இப்பருவங்களின் வயதெல்லைகள் வெவ்வேறு கலாச்சாரங்களிலும், பெறும் அனுபவங்களின் தன்மையையும், செறிவையும் பொறுத்து மாற்றமடையலாம் என்றும், இப்பருவங்களின் வயதெல்லைகளைத் துரிதமாக அடையலாமென்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கற்பிக்கப்பட வேண்டிய அறிவுத் தொகுதியின் அமைப்பை, மாணவரின் உளவிருத்திநிலை, முன் அனுபவங்கள், உளக்கவிவு போன்றவற்றிற்கு அமைய மாற்றியமைத்து எண்ணக் கருக்களை உருவாக்கலாமென்று உளவியற் பேராசிரியர், ஜே. எஸ். புரூனர் கருதுகிருர். எனவே, எண்ணக்கருநிலையைக் கருத்திற் கொள்வதுடன், எண்ணக்கருவாக்கமும், கற்பித்தலில் முக்கிய இடம்பெற வேண்டும்.

பாலர் வகுப்பு மாணவர்கள், தம் மாற்றல் பற்றியும், தம்மைப் பற்றியும் கொண்டிருந்த அபிப்பிராயங்களும், கருத்துக்களும், அவர்களின் பிற்காலக் கல்வி அடைவைத் தீர்மானிக்கின்றன என விற்றன்பர்க்கு, கிலிபோர்ட்டு என்னும் இரு உளவியல் ஆய்வாளர்கள் நிரூபித்தார்கள். மாணவர்கள் தம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் தற்கணிப்பும், மதிப்பீடும் அவர்களின் கல்வியடைவைத் தீர்மானிக்கின்றன என ஜே. டபிள்யூ. ஸ்ரைன்சு தம் ஆய்வுகளின் மூலம் வலியுறுத்தியுள்ளார். இவ்வாருன தற்கணிப்பை மாணவர் கொள்வதற்குப் பெரும்பாலும் ஆசிரியர்களே பொறுப்பாவார்களென அவர் மேலும் கூறுகிருர். எனவே ஆசிரியரின் கற்பித்தல் கற்பதற்குரிய விடயத்தைக் கற்பித்தலுடன் தம் மாணவரில் விரும்பத்தக்க தற்கணிப்பையும், அபிப்பிராயத்தையும், தன்னம்பிக்கையையும் தோற்றுவிக்க வேண்டும். மேலும் ஒரு மாணவனின் ஆற்றல், திறன் போன்றவற்றைப்பற்றி ஆசிரியர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களும், எதிர்பார்ப்புகளும் அவனின் நுண்ணறிவு விருத்தியைத் தீர்மானிக்கின்றன எனப் பல உளவியலாய்வுகளை ஆதாரங்காட்டி ரோசேன்தாலும், ஜேகோப்சனும் எடுத்துரைத்துள்ளார்கள். இவற்றினை நோக்கும் போது ஆசிரியர் கற்பித்தற்ருெழிற் பாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞல், தம் மாணவரில் சிறந்த தற்கணிப்பை யும், தன்னம்பிக்கையும் எழச் செய்வதுடன் மாணவர்களின் ஆற்றலையும், அடைவை யும் பற்றிய தமது கருத்துக்களைச் செவ் வனே ஆக்கிக் கொள்ள வேண்டுமென்ப தும் தெளிவாகிறது.

தனி மாணவன் எவ்வாறு கற்கலாம் என்பதனைக் கற்றல் கொள்கைகள் விளக்கு கின்றன. வகுப்பறையில் மாணவன் ஏனைய மாணவர்களையும், ஆசிரியரையும் கொண்ட சமூக — உளவியற் சூழலிற் கற் கிறான். இச் சூழற்காரணிகளும் எவ்வகை யில் கற்றற்றொழிற்பாட்டுக்கு உதவலாம் என்பதனை இங்கு ஆராய்ந்துள்ளோம். இக்காரணிகளிற் சில பள்ளிக்கூடத்திற் கற் பதை மட்டுமல்லாமல், பின்பும் தொடர்ந் தும் கற்கும் திறனையும், முறையினையும் தீர்மானிக்கவல்லன என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

"பரிமாறப்படுவதை ஏற்றுக்கொள்ளாமல் அது கொண்டுவா இது கொண்டுவா என்று இல்லாததை யெல்லாம் விருந்தாளி கேட்க ஆரம்பிக்கலாமா? வாழ்க்கையில் எத்தனையோ இன்பம் நமக்கு வழங்கப் பட்டிருக்கையில் வழங்கப்படாத வற்றிற்காக வேண்டு வது முறையாகுமா ?"

— எபிக்டெடஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இராவென்ன நிற்கின்ற ஈசன்"

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம்

"அன்பர்கள் நிவேதிக்கும் அன்னத்தை ஆண்டவன் ஏன் புசிப்பதில்லை?"— பெரியார் ஒருவரின் உள்ளத்தில் இவ்வினு திடீரென எழுந்தது. "தன் குழந்தைகளான கோடானுகோடி மக்கள் வயிறுார உண்ணமுடியாமல் துன்புற்றிருக்கும் நிலையில், அவர்களுக்கெல்லாந் தாயும், தந்தையுமாகிய எம்பெருமான் எப்படி உண்பான். அன்பையும் அறிவையும் பெற்று மக்கள் திருந்தி நல்லவர்களாகும்வரை அவன் எப்படித் திருப்தியடைவான்" என அப்பெரியார் தம்மனத்துக்குத் தாமே சமாதானங் கூறிக்கொண்டார்.

உயிர்களுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு மிகமிக நெருக்கமானது. வேத உபநிடதங்களும், சித்தாந்த சாத்திரங்களும் இந்நெருக்கத்தைப் பல உவமைகள் மூலம் காட்டுகின்றன. உடம்புடன் உயிர் கலந்து அதை எப்படி உய்விக்கின்றதோ அதுபோல உயிருடன் கலந்திருந்து அதை உய்விப்பவன்—வாழ்விப்பவன்—இறைவன், உயிர்க்குயிராகிய பரம்பொருளின் உதவியின்றேல் உயிர் வாழமாட்டாது.

"ஊனுயிரால் வாழும் ஒருமைத்தே
ஊனுயிர்
தானுணர்வோ டொன்றுந் தரம்"

என்பது திருவருட்பயன்.

முண்டக உபநிடதத்தில் அழகிய உவமையொன்றுண்டு "ஒருமரத்தில் இரண்டு பறவைகள் சேர்ந்து வாழுகின்றன. அவற்றுள் ஒன்று பெரியது; மற்றது சிறியது. சிறிய பறவையை உண்ணவும் உறங்கவும் செய்து பெரிய பறவை பார்த்துக்கொண்டிருக்கிறது. அது பசி தாகமற்றது: எதையும் தனக்கென அது எடுத்துக்கொள்வதில்லை" என்பது அவ்வுவமை. உடம்பாகிய வீட்டிலே, உயிரும், உயிருக்குயிராகிய பரம்பொருளும் கூடி வாழுகின்ற தன்மையை இது சித்திரிப்பதோடு, பிரபஞ்சத்தில் தான் படைத்த போகப்பொருள்கள் அனைத்தையும் உயிர்கள் அனுபவிக்கும்படி விட்டுவைத்து, சிறிய நுனிப் புல்லைக் கூட எடுத்தனுபவியாத பெருங் கருணையாளன் இறைவன் என்பதையும் விளக்குகிறது.

ஒன்றையும் அனுபவியாத இறைவனுக்கு ஒரேயொரு விருப்பம் மாத்திரம் உண்டு. அது யாதெனில், 'உயிர்கள் போகங்களை நன்கு புசித்துப் பின்னர், பற்று நீங்கித் திருந்தி நன்னிலையை யடையவேண்டும்' என்பதாம். குறைபாடுகள் நிரம்பிய உயிர்களைத் திருத்தியெடுப்பதற்காக அவற்றுக்கு உடம்புகளும், உலகங்களும், கருமங்களைச் செய்யுங் கருவிகளும், போகப் பொருள்களும் கொடுக்கப்படுகின்றன. காத்தல் முதலிய ஏனைய தொழில்களும் செய்யப்படுகின்றன.

"திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை
இடங்கொள் கைலாயா" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருமைத் திருவாக்கு. தம் உள்ளத்தைத் திருந்தச்செய்து, அதிலுள்ள நான், எனது என்னும் இருவகைப் பட்ட செருக்குக்களையும் அகற்றிப் படிப்படியாக அதனுட் புகுந்து அவ்வுள்ளத்தைத் தனதாக்கிக்கொள்ளும் இறைவனின் பெருங்கருணையை அவர் பாடுகின்றார். இந்த அரிய வேலை, சுந்தரமூர்த்தியிடம் மாத்திரமன்று, எல்லா உயிர்களிடமும் நடைபெறுகின்றது.

உயிர்களைத் திருத்தியெடுக்கும் முயற்சி இலகுவானதன்று. மிகக் கடினமானது. "கல்லைப் பிசைந்து கனியாக்கி" என்பார் மணிவாசகர். மண்ணுங் கல்லும் போன்ற சடப்பொருள்களை, அவைகளின் எதிர் முயற்சியில்லாதபடியால், சிற்பியொருவன் தான் நினைத்தபடி உருவாக்க முடியும்.

உயிர்களோ சித்துப் பொருள்கள்; அவற்றை நல்லபடி செய்ய முயலுஞ் சிற்பியாகிய இறைவன், சர்வவல்லமையுடையவனுயிருந்துங்கூட, எளிதிற் பயன்காண முடிவதில்லை. உயிர்கள் வேகந்தணிந்து, பரபரப்பின்றி, அமைதியுடன், தம்மை முற்றுக இறைவனிடம் அர்ப்பணித்துவிடின் காரியம் இலகுவாகும்; சண்டித்தனம்செய்து, இறைவனின் விருப்பத்துக்கு மாறுக அவை நடப்பதால் வீண் காலதாமதம் ஏற்படுகிறது. எவ்வாறிருந்தபோதிலும் பெருங் கருணையாளனுகிய இறைவன் தன் முயற்சியை இடையருது செய்து கொண்டிருக்கிறுன்; உயிர்களின் பிழையை மனதிற் கொண்டு அவற்றை அவன் கைவிடுவதில்லை;

உயிர்களுடன் ஒன்றுயும், வேருயும், உடனுயும் நிற்கும் இறைவன் உயிர்க்குயிராய்த் தம்மை வாழ்விப்பதை அனுபவரீதியாக உணர்பவர்கள் ஞானிகள். இறைவனைக் கற்பனைப் பொருளாகவன்றித் தம் வாழ்முதலாக உணர்வதினுலேயே அவர்கள் இறைவனிடம் காதலாகிக் கசிந்துருகி நிற்கின்றுர்கள். உயிர்வாழ்வுக்கு, இறைவனின் இன்றியமையாமையை உணர்ந்த ஞானிகள் வரிசையில் நம் நால்வர் பெருமக்களும், ஏனைய திருமுறையாசிரியர்களும் அடங்குவரென்பதற்கு, அவர்களின் அருளனுபவ முத்திரை பொறித்த திருப்பாடல்கள் சான்று பகருகின்றன.

உயிர்களிலும், உலகங்களிலும் தன் திருவடிதோயநின்று, அவற்றை இயக்கும் வண்ணம் இறைவன் தானே இயங்குகின்றுன். இறைவனின் இடையருத இம்முயற்சியை அவனது திருநடனமாக, ஆனந்தக் கூத்தாக, அருளாளர்கள் கண்டு அனுபவித்தார்கள்;

பதினெராந் திருமுறையாசிரியருள் ஒருவராகிய காரைக்காலம்மையார் இறைவனின் அற்புத நடனத்தைத் திருவாலங்காடு என்னும் திருப்பதியில் உடனிருந்து அனுபவிக்கும் பாக்கியம் பெற்றவர்; கைலைக்குத் தலையால் நடந்து சென்று அங்கு எம்பெருமானுடைய தரிசனங் கிடைக்கப் பெற்றவர்; "அறவா நீ ஆடும்போது உன்னடியின்கீழ் இருக்க வரந்தர வேண்டும்" என்று கேட்டுப் பெற்றவர்; தனக்கெனத் தாயற்றவனுகிய பெருமான், 'அம்மையே' என அழைக்கும் பேறுபெற்றவர்.

தாய்மை யுணர்ச்சி மிகுந்த அவ்வன்னைக்கு, எம்பெருமானுடைய திருநடனம், உயிர்களின் பொருட்டு அவன் செய்யும் இடையருத் தொழிற்பாடு, ஒருபுறம் உற்சாகத்தையும், ஆனந்த அனுபவத்தையும் கொடுத்த போதிலும், மறுபுறம் துன்ப உணர்வினையும் ஊட்டியிருக்க வேண்டும்; எம்பெருமான் ஒரு கணப்பொழுதும் இருத்தலின்றி, ஓய்வில்லாமல், கால்கடுக்க நின்று ஆடுகின்றுனே; சிறிதும் இளைப்பாறுமல் தொழிற்படுகின்றுனே; இங்ஙனம் அலுப்பும் சலிப்புமின்றி அவன் தொழிற்படுவதற்குக் காரணமென்ன? என அவர் சிந்தித்தார்.

"தன்னைத் தலைவனுகக் கொண்டு வழிபடும் அன்பர்கள் இருக்கிறுர்களே; அவர்களுடைய துன்பதுயரங்கள் தீர்ந்தபாடில்லை; அவர்களுக்கு நல்ல உணவில்லை; போதிய ஆடைகளில்லை; அறிவை வேண்டிய அளவு தேடிக்கொள்ள வாய்ப்பில்லை; இறைவனுகிய தன்னை நிம்மதியாக வணங்கக் கூட வசதியில்லை. அன்பர் அல்லாதவர்களுடைய துயரத்தைவிட அன்பர்களின் துயரம் அதிகமானது. எல்லா வசதிகளையும், வாய்ப்புக்களையும் பயன்படுத்தித் தம் குறைபாடுகளை நீக்கித் திருந்தி, அன்பையும், சுகத்தையும் வளர்க்க வேண்டிய மக்கள் வெறுப்பையும், துன்பத்தையும் வளர்க்கிறுர்கள். இவர்களால் மெய்யன்பர்கள் கூடத் துயரப்பட வேண்டி ஏற்படுகிறது; இந்த நிலையில், தன் குழந்தைகள் துயர் தீராதபொழுது எம்பெருமான் எப்படி நீட்டி நிமிர்ந்து உட்கார்ந்திருப்பான். 'துயர் தீரும்வரை என்னுல் இருக்க முடியாதெனக் கூறுபவன்போல' இறைவன் நிற்கின்றுனென அம்மையார் வருந்தினுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளைப் பெற்ற தந்தைதாயர்கள்கூட அக்குழந்தைகளின் நலத்துக்காக ஓய்வின்றி உழைக்கும் போது, உலகிலுள்ள உயிரனைத்துக்கும் தந்தையும் தாயுமான எம்பெருமான் அவற்றின் துயரம் நீங்கும்வரை எப்படி ஆறியிருக்க முடியும்? அவன் எப்படி உண்பான்? எப்படி உறங்குவான்?" — என்பது அம்மையாரின் ஏக்கம்;

அம்மையாரின் இவ்வேக்கத்தினையும் முற்கூறிய பெரியாரின் விசாரத்தையும், புரிந்து கொள்ளும் அன்பர்கள் அனைவரும், இறைவன் பணிக்குத் தம்மைக் கருவியாக்கிக் கொள்ளுவார்கள்; அப்பணியைத் தாமும் பகிர்ந்து கொள்ளுவார்கள்; தமக்காகவும், பிறருக்காகவும், உடலாலும் உள்ளத்தாலும் கடினமாய் உழைப்பார்கள். மண்வெட்டியுங் கூடையுங் கொண்டு, தெருவீதியில் திருவடி தீண்ட இறைவன் எழுந்தருளி வரும்வரையும் காத்திராமல், சமுதாயத்திற்குச் செய்யவேண்டிய தொண்டுகளையும், அறப்பணிகளையும் தாமே செய்து முடிப்பார்கள்;

பிரானென்று தன்னைப் பன்னாட் பரவித்
தொழுவார் இடர்கண்டு
இரானென்ன நிற்கின்ற ஈசன் கண்டீர்
இனவண்டு கிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க்
கிடந்து பொம்மென்றுரைவாய்
அராநின்றிரைக்குஞ் சடைச் செம்பொன்
நீண்முடி அந்தணனே;

—(காரைக்கால் அம்மையார்
— திருவிரட்டைமணிமாலை)

"கோழைத்தனத்துக்கும் அசட்டுத் துணிச்சலுக்கும் இடையில் இருப்பது வீரம். பணிவுக்கும் கர்வத்துக்கும் இடையில் இருப்பது அடக்கம். துக்கத்துக்கும் சளசளப்புக்கும் இடையில் இருப்பது சத்தியம். இவ்வாறான இடைக் குணங்களெல்லாம் அறிவுக்குப் பொருத்தமானவை; இன்பம் தருபவை."

— அரிஸ்ரோட்டில்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடுகீறும் குழந்தை ஓவியனுக உருவாகலாம்

கலைஞர்களும், கவிஞர்களும் பிறக்கின்றனர்கள். ஆனல், அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் இல்லாது போனல் அவர்களின் ஆற்றல் மழுங்கிவிடக் கூடும். உலகில் தோன்றும் குழந்தைகளில் அநேக குழந்தைகள் கலைஞர்களாகவே பிறந்திருக்கலாம்; அவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கப்படாவிடின், அவர்களும் தங்கள் ஆற்றலை இழந்து விடுவார்கள்; பல பாலர்களின் உள்ளங்களில் கலையார்வம் தேங்கியிருக்கும். ஆனல், போதிய கவனிப்பின்மையால் அவர்கள் கலைத்திறனுக்கு வாய்ப்பே கிடைப்பதில்லை;

குழந்தையின் வரைதல் கருத்தில்லாக் கிறுக்கலில் ஆரம்பிக்கின்றது; வெண்கட்டியோ, அல்லது கரித்துண்டோ பாலர் கரத்தில் அகப்பட்டு விட்டால், அவர்களடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது; தாம் நினைப்பவற்றை யெல்லாம் தாறுமாறுகத் தரையிலும், சுவரிலும் கீறி அதிலுண்டாகும் அடையாளத்தைக் காண்பதில் மகிழ்ச்சியடைவார்கள். குழந்தை தன் கையசைவுக்கும், தரையில் கிறுக்கும் கோடுகட்கும் தொடர்புண்டு என்பதை அறிய மாட்டாது; நாட்கள் செல்லச் செல்லத் தசை நார்களின் இயக்கம் பலமடையக் கிறுக்குதலில் ஒழுங்கும் பயனும் படிப்படியாக விருத்தியடைகின்றது. கோடுகளைக் கட்டுப்படுத்தி வரைய முயல்கின்றது. சில வேளைகளில் வரைந்து கொண்டே கதை சொல்வதுமுண்டு; ''அம்மா கறி சமைக்கின்ற'', "கோழியும் குஞ்சுகளும் நிற்கின்றன," ''இரண்டுபேர் சண்டை பிடிக்கிறர்கள்'' என்றெல்லாம் கூறிக்கொண்டே வரைவார்கள். ஆனல், வரைந்த படத்தில் அம்மாவின் உருவமோ, அல்லது கோழியின் உருவமோ நமது கண்ணில் தென்படாது.

குழந்தைகள் எந்தக் கண் கொண்டு உலகை நோக்குகிறர்களோ, எதை அதிகம் விரும்புகிறர்களோ, அதன் பிரதிபலிப்பையே அவர்கள் வரையும் சித்திரங்களில் காண முடியும். நேரடியான விளக்கமும், உண்மைத் தன்மையும் காணப்படும்; பாடசாலைக்குப் போகுமுன் பிள்ளைகளின் சுயவரைதல் முற்றும் ஞாபகத்திலிருந்து வரைதலாகவே இருக்கும். இந்நிலை அநேகமாகப் பாடசாலை வாழ்க்கையில் ஆரம்ப வருடங்களில் நிலைத்து இருக்கிறது. நாலு வயது தொடக்கம் ஆறு வயதுக்குட்பட்ட பிள்ளைகள் அநேகமாக மனித உருவம் வரைவதில் விருப்பமுடையவர்களாகவே இருப்பர். வீடு மரம் முதலியவற்றை வரையும்போது தம் கண்ணுல் பார்த்ததைவிடத் தம் மனதில் அறிந்தவற்றையே வரைவார்கள். வீடு மூன்று பக்கத்தை உடையதாகவும், வீட்டினுள் இருக்கும் கதிரை, மேசை, வானெலி என்பவற்றைப் பெரிதாகவும் வரைவார்கள். அவர்கள் மனதில் எது நன்கு பதிகின்றது என்பதை வரையும் உருவத்திலிருந்து அறியலாம். மனித உருவம் வரையும்போது முக்கியமெனக் கருதும் பகுதிகளையே வரைவார்கள். சிறுவர் வரையும் படங்கள் எல்லாம் ஈரளவு கொண்டதாகவே இருக்கும். நாளடைவில் மனமும் மூளையும் விருத்தியடைய, கற்பனையும், ஞாபகசக்தியும் கூட விருத்தியடைந்து அவர்கள் வரையும் சித்திரத்தில் தெளிவையும், சிறப்பையும் காண முடியும். கண் பார்வையும், கைத்திறனும் வளர்ச்சியடைவதால், தாம் வரையும் படத்தில் உருவ வித்தியாசங்களைப் புகுத்தும் ஆற்றலைப் பெறுவார்கள். பாலர் வகுப்பு மாணவர் தயக்கமில்லாமல் விரைவாகப் படங்களை வரைந்து முடிக்கும் இயல்புள்ளவர்களாக இருப்பார்கள், தாம் விரும்பிய விடயத்தை வரையச் சந்தர்ப்பம் கொடுத்தால் அழகாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், இயற்கையாகவும் வரைவார்கள்; சூழ்நிலையிற் காணும் உருவங்கள் வரைவதே இவ் வகுப்பினருக்கேற்றதாகும்;

எனவே குழந்தைக்குச் சித்திரம் வரைவதில் இருக்கும் தனியார்வத்தை அறிந்து அதற்கேற்ப அவர்களை வழி நடத்த வேண்டும்; சித்திரம் வரைந்த குழந்தை ஆர்வத்தோடு தன் பெற்ரோரிடமோ, அன்றி ஆசிரியரிடமோ, காண்பிக்கும்போது, அதைப் பார்த்து விட்டு எவ்வித அபிப்பிராயமும் கூருமல் பேசாமலிருந்தால் அக்குழந்தை ஆர்வமிழந்து விடுகின்றது. "ரவி நன்ருகத்தான் வரைந்திருக்கிருய்; ஆனுல் ......" என்று எம் கருத்தைக் கூறுகின்ரேம்; அதாவது எங்கள் நிலைமையில் வைத்துக் குழந்தையின் திறமையை எடைபோடுகின்ரேம்; இது நாம் செய்யும் மிகப் பெரிய தவருகும்; இதனுல் குழந்தையின் கருத்தைச் சிதைக்கின்ரேம்.

நாம் முக்கியமாக ஒரு விடயத்தை மனதிற் கொள்ள வேண்டும். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் வரையும் கோடுகளிலிருந்து அது என்ன என்பதைக் கண்டுபிடிக்க முடியாது; மேலும் குழந்தையின் மீது எம் கருத்தைத் திணிப்பதால் பயனில்லை; அவர்களால் அதைப் புரிந்து கொள்ள முடியாது; அன்புடன் முதுகில் தட்டி அவர்களின் முயற்சியைப் பாராட்டுவதே முறை. ஐந்து வயது தொடக்கம், பத்து வயதுக்குட்பட்ட பிள்ளைகள் வரையும் சித்திரங்களில் தவறுகள் இருப்பதை நாம் காணலாம்; ஆனுல் குழந்தையைப் பொறுத்த வரையில் அதில் தவறிருப்பதாக அது கருதுவதேயில்லை. குழந்தையின் படத்தில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக் காட்டிச் சிரிப்பதோ, தண்டிப்பதோ தவருன செயலாகும்; தன்னுல் எதுவுமே வரைய முடியாது என்ற மனப்பான்மை குழந்தைக்கு ஏற்பட்டால் எதிர் காலத்தில் அப்பாடத்தில் வெறுப்பு ஏற்பட்டுவிடும். மேனுட்டு மனேதத்துவ நிபுணர் ஒருவர் பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் வரையும் ஓவியங்கள் மொழி வடிவானவை எனக் கூறுகின்ருர்; குழந்தைகள் தங்கள் கருத்துக்களைச் சித்திரங்கள் மூலம் விளக்கும் சிறப்பே தனி. எனவே பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகட்கு அதிகமான படங்களை வரைய வாய்ப்பளிக்க வேண்டும்; குழந்தை வரைவதற்கு ஏற்ற வண்ணக் கலவைகள், நிறப் பென்சில்கள், கடதாசிகள், வேறும் தேவையான பொருட்கள் அனைத்தையும் கொடுத்துக் குழந்தை வரையும் படங்களைப் பாராட்டி எங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்து அவர்கள் சித்திரங்களில் எமக்கு அக்கறையும், ஆர்வமும் இருப்பதாகக் காட்டிக் கொள்ள வேண்டும்; குழந்தையை, விரும்பியவாறு எதையும் வரைய விட்டுப் பார்த்து இன்புறுவதே எமது கடமையாகும். சிறுவர் சித்திரங்கள் களங்கமில்லா உள்ளத்தின் உண்மைப் பிரதிபலிப்பாக இருப்பதால் எல்லா மக்களையும் கவர்ந்திழுக்கும் சக்தி வாய்ந்தவை அவர்களின் சித்திரங்களை ரசிப்பதற்குக் கருணையும், விளங்கும் மனப்பான்மையும் வேண்டும்.

ஆகவே, பாலரின் விருப்பு, வெறுப்பு, வளர்ச்சிப் படிகள், அவ்வப் பருவங்களில் கைகளிலும், விரல்களிலும் உள்ள தசைகளின் இயக்கம், ஆற்றல்கள், எண்ணக் கருக்கள், மனேவேகம், பார்வை, கேட்டல், பரிசவுணர்வு ஆதியன செயற்படும் முறைகளைக் கருத்திற் கொண்டு அதற்கேற்பச் சித்திரம் கற்பிக்கப்பட வேண்டும்; இவ்வாறு குழந்தையின் கலையார்வத்தை வளர்த்து வருவோமானுல் கோடு கீறும் குழந்தை காலப்போக்கில் திறன் மிக்க ஓவியனுகத் திகழ்ந்து தன் அருமைத் தாயகத்துக்குச் சிறந்த சேவை புரிவான் என்பது திண்ணம்;

திருமதி மரியம்மா இஸ்ரனிஸ்லாஸ்,
2-ம் வருடம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய கல்வியில் ஆசிரியர் மாணவர் உறவு

கல்வி என்பது வாழ்க்கை. இதற்குக் குறிப்பிட்ட பிராயம் இல்லை. பிறவி முதல் இறக்கும் வரை நடைபெற்றுக் கொண்டே வருகிறது. எனவே, கற்றல் என்பது மனித வாழ்வில் தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சி என்றே கூற முடியும். இது ஒரே வழியை, ஒரே முறையைப் பின்பற்ற வேண்டுமென்ற நிலையற்று, ஒருவனின் ஆளுமைக்கேற்ப வாழ்க்கை முழுவதும் நடைபெறுவதாகும்.

ஒரு குழந்தை கற்கும்பொழுது அவ்விடயத்தில் வெற்றி அல்லது பயன் ஏற்பட்டால் மகிழ்ச்சி அடைகிறான். மீண்டும், மீண்டும் செய்ய வேண்டுமென்று தூண்டப்படுகின்றான். இத்தகைய கல்வி பிறரால் ஊட்டப்படக்கூடிய பொருளன்று, ஒருவன் தேடும் சொத்தென்றே கூற முடியும். இச்சொத்தானது மூலஆசைகள், தேவைகள், இயற்கை உபகரணங்கள், மனஎழுச்சிகள் கொண்டுதான் சேமிக்கப்பட்டதென்றால் மிகையாகாது.

குழந்தைக்குக் கல்வி அளிக்கும்போது, அதனிடம் வெறுப்பு மனப்பான்மையைக் குறைத்து, மகிழ்ச்சி மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டும். இதற்குப் பாடசாலையை ஓர் விளையாட்டுத் திடலாக மாற்றி அமைத்துப் பாலரைப் பயிற்றுவது ஆசிரியர் கடனாகும். மாணவர் விளையாட்டின் மூலம் சுயமான செயல் முறையில் தம் அறிவை, எண்ணக் கருக்களை வெளியிடுவர்.

குழந்தைப் பருவத்தில் ஏற்படும் சிறப்பியல்புகள், அவனின் முதிர்ந்த ஆளுமைக்கு அடிப்படையாக அமைவதனால், ஆரம்பத்திலேயே சிறார்களைப் பெட்டிப் பாம்பு போல அடக்கி, ஒடுக்கி அவர்களின் மனஎழுச்சிக்கு இடம் அளிக்காமல், இயல்பூக்கங்களும் தடுக்கப்பட்டால், எதிர்காலமே சூன்யமாகி விடுகின்றது. ஆகவே, குற்றமில்லாத நெஞ்சுள்ள சிறார்களின் உளச்சார்புகள் பரந்து ஒளிவீசும் வகையில், விளையாட்டு முறையாகச் செயற்றிறன் மூலம், கற்றல் நிகழ ஆவன செய்தல் வேண்டும்;

ஒரு குழந்தையின் இயல்புகள், கவர்ச்சிகள், தேவைகள் பற்றிய அறிவு, ஆசிரியருக்கு இன்றியமையாததாகும். இந்த அடிப்படை அறிவைப் பெற்றுள்ள ஆசிரியர்தாம், குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவ முடியும். இவ்வறிவினை ஆசிரியர்களுக்கு அளிப்பது கல்வி உளவியலின் நோக்கமாகும். பயிற்சிப் பள்ளியோடிணைந்த, தொடக்கப் பள்ளிக் குழந்தைகளது இயல்புகளை ஆசிரியர் — மாணாக்கர் ஒவ்வொருவரும், உளவியல் கண்கொண்டு ஆராய்தல் அவசியம். ஒருவர் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு, அதன் மூலப் பொருள்கள் எவ்விதம் வேண்டப்படுகின்றனவோ, அதேபோன்றுதான் மாணவனைப்பயிற்றும் ஆசிரியருக்கும், அம் மாணவனின் மனோநிலையைப்பற்றிய அறிவு அத்தியாவசியமாக இருக்கிறது.

இன்றைய பாலர் கல்வியில் விளையாட்டு முறையான கல்விக்கே முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. நவீன கல்வி முறையானது, மொன்ரிசூரி அம்மையார், யோன்டுயி போன்ற, கல்விச் சிந்தனையாளரின் கல்விமுறை போன்று உருவாக்கப் பெற்றுள்ளது. மாணவன் சுயாதீனமாகத் தானே விரும்பிக் கற்பதற்கு விளையாட்டு முறை அவசியமாகிறது. போதனை முறையிலும், விளையாட்டு முறையான கல்வி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

குழந்தையின் விளையாட்டு ஓர் கடுமையான தொழிலென்றே கூற முடியும். விளையாட்டானது குழந்தை தானே தேர்ந்தெடுத்து முழுமூச்சுடன் ஈடுபடும் கருவியாகும். விளையாட்டு மூலம் ஒரு பிள்ளை செயலில் ஈடுபடும்பொழுது அது வேலையாகிறது; விளையாட்டைக் கொண்டு குழந்தை தனக்குத் தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச் செல்கிறான்; அவன் ஒன்றைச் செய்கிறேமென்று நினைக்கும்பொழுது வேலையாகி, நினையாதபொழுது அது விளையாட்டாகிச் செயற்றிறன் மூலம் கற்றல் நிகழ்கிறது. ஆகவே வேலையும், விளையாட்டும், இரட்டைக் குழந்தைகளாகப் பாடசாலையில் இடம் பெறவேண்டும்.

இன்று கல்வியுலகில் பல புதிய கற்பித்தல் முறைகள் தோன்றியுள்ளன; பாடத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்ட நிலை மாறி, மாணவனையும், அவனது சூழல் அனுபவம், தேவை என்பவற்றையும் மையமாகக் கொண்ட கல்வி முறையே நடைமுறைக்கு வந்துள்ளது. அன்று ஆசிரியனின் கட்டளைகளை நிறைவேற்றியவன், இன்று விடயத்தைச் சுயமாகவே தேடிக் கண்டுபிடித்து மனதிலே பதியச் செய்து கொள்ளுகிறான்.

ஐம்புலன் வாயிலாகப் பல அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளும் குழந்தைகள், குழுக்களாகச் செயற்படும்பொழுது, ஒன்றையோ, பலவற்றையோ உற்றுநோக்குகின்றனர். அதன் மூலம் பல வினாக்கள் அவர்களின் உள்ளத்தில் உருவாகின்றன. ஏன்? எதற்கு? எப்படி? என்றெல்லாம் வினவுகின்றனர். ஓர் உயிரி தான் வசிக்கும் சூழலிலேயே தனக்குத் தேவையான கல்வியைப் பெறுகின்றான். மாணவனுக்குத் தகுந்த சூழலை ஆக்கிக் கொடுத்தல் ஆசிரியர்க்கு மட்டுமல்ல, பெற்றோர்களின் தலையாய கடனுமாகும். ஆறுவயதில் பள்ளிக்குச் செல்லத் தயாராக இருக்கும் குழந்தைக்குத் தன்னுடைய காரியங்களைச் செய்து கொள்ளுவதற்கும், கற்பிக்கப்பட்டிருந்தால், நல்ல பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளப் பழக்கப்பட்டிருந்தால், மற்றவர்களோடு சேர்ந்து விளையாட, விட்டுக் கொடுக்கக் கற்றிருந்தால், புதிய உலகமாகிய பள்ளியில் நுழைவதற்கு அக்குழந்தை தயாராக இருக்கும்.

பாலர் பாடசாலையானது சுயமாக இயங்கும் ஒரு தொழிற்சாலையாகும். ஆகவே, குழந்தையின் திறமைகள், நடத்தைகள், பிரச்சினைகள், விருப்பங்கள், கவர்ச்சிகள், தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அவனுடைய அனுபவங்களை அமைத்துக் கொடுத்து, அதற்கேற்ற சிறந்த இலட்சியத்தை ஏற்படுத்த ஆசிரியர் உதவக்கூடியவராக இருக்க வேண்டும். இக்கல்வி மாணவனின் பட்டம் பதவியை நோக்கமாகக் கொண்டதாக அமையாது, வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் கழிக்க உதவியாக இருக்கிறது; ஓர் உயிரியிடம் நல்ல குணங்கள் உருவாக்க வேண்டுமென்பதையும் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கையில் நடைபெறும் அன்றாட விடயங்கள், மாற்றங்கள்பற்றி அறிந்திருத்தல் அவசியமாக இருக்கிறது மாணவர்களுக்கிடையே எழும் பிரச்சினைகளுக்கு ஆசிரியர் தகுந்தமுறையில் உதவக்கூடியவராக இருக்கவேண்டும்; புத்தகவிடயத்தைமட்டும் திணிப்பவராக இருக்காமல் மாணவனைச் சிந்திக்க வைக்க வேண்டும்; அவர்கள் தமது சிந்தனையை வெளிப்படுத்த விடவேண்டும் எனவே ஆசிரியர் உயிரியின் அறிவையும், உணர்வையும், செயலையும் ஒன்றுபடுத்தக்கூடியவராக நின்று உதவவேண்டும். சுருங்கக்கூறின் உடலியல் சமூகச் செயற்பாடுகள் கற்பனைத் திறன், ஆக்கத்திறன், அறிவியற்றிறன், ஆன்மீகத் தொழிற்பாடுகளுக்கும் பிள்ளையின் உள்ளத்தையும், உணர்ச்சியையும் எடுத்துச் சொல்லக்கூடிய அனுபவங்களையும் செயல்களையும் கொண்டு, கல்வியை அளிப்பதில் ஆசிரியர் முக்கியம் வேண்டப்படுகின்றனர்.

நவீன கல்வி, தொழிலை அடிப்படையாகக்கொண்டதாக அமைவதனால், தொழிலுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தினால், சமூகத்தைப் பிரிக்கும் மனப்பான்மை அற்றுப்போகின்றது. புதிய கல்வித் திட்டத்தில் மக்கள் வாழுகின்ற சூழலைச் சார்ந்த தொழில்பற்றிய கல்வி முக்கிய இடத்தைப் பெறுகிறது. பிரதேசங்களுக்குரிய தொழிற் கல்வியை மாணவனுக்கு ஆரம்பத்தில் படிப்பிக்கும்போது பிள்ளைக்கும், சமுதாயத்துக்கு மிடையேயுள்ள தொடர்புகள் விரிவெய்தவும், கூர்மையடையவும் ஆசிரியர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். பிள்ளையின் வருங்காலத்தை உருவாக்கும் நிலை இன்றைய ஆசிரியர்கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிற்குச் சிறந்த பிரசையை உருவாக்கக்கூடிய முறையில், புதிய கல்வித்திட்டம் அமைந்திருப்பதனால் ஆசிரியர் அடித்தளத்திலுள்ள பிரச்சினைகளைத் தகர்த்தெறிந்து, புதிய பிரச்சினைகளுக்கு உதவக்கூடியவராகச் செயலாற்ற வேண்டும். இதன்மூலம் மாணவர் பரந்த அடிப்படை அறிவை அடையக்கூடியதாக இருக்கும். பாலர் கல்வியைப் பெறும் மாணவர்களுக்கு விளையாட்டரங்கு எவ்வாறு உதவுகின்றதோ அதேபோன்று உயர் கல்வியைப் பெறும் மாணவருக்கு, நூல் நிலையங்கள், பள்ளிக் கட்டடங்கள், ஆய்வுக்களங்கள், கற்பித்தல் துணைக்கருவிகள் போன்றன யாவும், கல்வியின் முன்னேற்றத்திற்குத் தேவைப்படுகின்றனவாயினும், நல்லாசிரியர்களே இவையனைத்திலும் இன்றியமையாதவர்களாவர்.

ஆசிரியர் மாணவர் உறவு அன்னியோன்னியமாய் இருக்கவேண்டும். தனது மாணாக்கரின் பெற்றோர்களிடத்தும், தான் வாழ்ந்து தொழில்புரியும், சமுதாய உறுப்பினரிடத்தும், சீரிய தொடர்புகளை நல்லாசிரியர் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். வகுப்பறைகளிலே மாணாக்கரிடையே சிலசமயங்களிற் காணப்படும் ஒழுங்கீனமும், கட்டுப்பாடின்மையும், ஆசிரியரது பொறுமையைச் சோதிக்கக்கூடும். இவற்றையெல்லாம் எதிர்த்துநின்று வெற்றிகொள்வதிலேயே, ஆசிரியரது திறமை அடங்கி உள்ளது; தமது வாழ்நாளைக் குழந்தைகளது நல்வாழ்வுக்காகவே அர்ப்பணித்துச் செயற்படும் நல்லாசிரியர்களுக்கு, இது போன்ற சிக்கல்களும், மகிழ்ச்சியையூட்டுவனவாகவே அமையும்;

ஆசிரியர் மாணாக்கரிடம் அன்பும், பணிவும் உள்ளவராகவும், அவர்களுடன் சேர்ந்து செயற்படுவதில் மகிழ்ச்சிகொள்ளக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். பரிவுணர்ச்சி, ஆர்வம், நேர்மை, பட்சபாதமின்மை, நகைச்சுவையுணர்ச்சி போன்ற ஆளுமைப் பண்புகளை ஒவ்வொரு ஆசிரியரும் பெற்றிருந்தாற்றான் தனது தொழிலில் வெற்றிகாண இயலும்; குழந்தையின் உந்தலுக்கேற்ப ஆசிரியர் அவனை ஊக்குவித்தால், ஒரு சிறந்த சமூகப் பிரசையாக அவன் மிளிருவான் என்பது திண்ணம்;

ஆசிரியரின் சீரிய குணங்களைக்கொண்டுதான், குழந்தை உருவாகவேண்டும்; தம்மிடம் கல்விபயிலும் மாணவர்களுடன், நெருங்கிப்பழகி, அவர்களுடைய நடத்தைகளைக் கண்டறிந்து, அவர்களின் அறிவின் தன்மையிலுமுள்ள மாறுபாடுகளைக் கண்டு அவைகளுக்கேற்றவாறு அவர்களைப் பயிற்றவேண்டும்; கற்றல் துறையில் ஆசிரியர் பிள்ளைகளுக்கு ஒரு வழிகாட்டியாய் மிளிரவேண்டும். ஆசிரியர் வகுப்பில், தானொரு ஆசிரியரென்ற எண்ணத்தை மறந்து மாணவனோடு மாணவனாகத் தன்னை ஆக்கிக்கொள்ளும் நிலைக்கு மாறிக்கொள்ள வேண்டும்.

— திருமதி ஞானதீபம் மரியதாஸ்,
2-ம் வருடம்.

---

"குளிர்ந்த சந்திரனைக் கண்டு பொங்கும் கடல் சூரியனைக் கண்டு பொங்காது. அதுபோல இனிய சொல்லைக் கேட்டு உலகம் மகிழுமேயன்றிக் கடுஞ் சொல்லைக் கேட்டல்ல. ஆதலால் நீ இனிய மொழியே பேசு. அதனுல் உலகத்தையே வசப்படுத்தலாம்."

— நாலடியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகவியல் கற்பதன் நோக்கம்

மனிதன் இயற்கையாகவே பிறருடன் ஒன்று சேர்ந்து வாழ விரும்புகின்றான். மக்கள் ஒருவரோடொருவர் நடையுடைபாவனைகளாலும், பழக்கவழக்கங்களாலும் தொடர்பு கொண்டு வாழ்வதைக் காண்கின்றோம். பல்வேறு இடங்களில் பலவகையான நாகரிகத்துடனும், பண்புகளுடனும் மக்கள் வாழ்கின்றார்கள். இவற்றை மனித சமூகங்கள் என்று கூறுவர். இவை ஒன்றுக்கொன்று அவற்றின் சூழ்நிலைக்கேற்ப, பொருளாதார நிலையிலும் சமூகப் பண்பிலும், அரசியல் அமைப்புக்களிலும் வேறுபட்டிருக்கும்; இவ்வாறு வேறுபட்ட பலவகைச் சமூகங்கள் பண்டைக்காலந் தொட்டு என்னென்ன மாறுதல்களையடைந்து இன்றைய முன்னேற்றத்தைப் பெற்றிருக்கின்றன என்று அறிய உதவுவது சமூக அறிவியல் பாடமாகும்.

ஒரு மாணவன் சமூகவியல் கற்பதன் மூலம் தான் அவன் முழுமை மனிதனாகின்றான். தன்னைப் பற்றியும், தன் சூழலைப் பற்றியும் வேறு சமூகங்களைப்பற்றியும் தன் நாட்டைப்பற்றியும் சர்வ தேசத்தைப்பற்றியும் அறிவு பெறும்பொழுது அவன் சமூகத்தின் சிறந்த ஒரு அம்சமாகிறான். ஒரு நாட்டின் பொருளாதாரமும், வளமும், சிறப்பும் அந்நாட்டின் மக்களிடையிலேயே தங்கியுள்ளது. எனவே சிறந்த ஒரு சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கு மாணவர்கள் சமூகவியலைப் படிக்க வேண்டும்.

ஒரு நாட்டின் அரசியலைப்பற்றி ஒரு மாணவன் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அந்நாட்டின் அரசியல் திட்டங்களைப்பற்றி தெரிந்திருக்க வேண்டும்; அவ்வாறு தெரிந்து கொள்வதன் மூலம் தான் அரசியலில் தன் பங்கு என்ன? தனக்கு எத்தகைய உரிமைகள் இருக்கின்றன என்பதை அவன் அறிந்து கொள்ள முடியும்; ஜனநாயகம், பொதுவுடமை, சோசலிசம் என்பவற்றைத் தெரிந்து கொள்வதன் மூலம் அரசியலில் மாணவன் ஓரளவு அறிவைப் பெற்றுக் கொள்கின்றான்.

சமூக வாழ்வில் எழக்கூடிய சிக்கல்களை விஞ்ஞான அடிப்படையில் சிந்தித்துப் பார்த்து ஆராயும் திறன்களை வளர்க்கவும், தன்னம்பிக்கை, பேச்சுவன்மை, சகிப்புத் தன்மை, நேர்மை, கூட்டுறவு, பொது நலம் பேணல், பிறர் கருத்துக்களை மதித்தல், நாட்டின் சட்டதிட்டங்களுக்கும், அரசாங்க நிர்வாகத்திற்கும் மதிப்புக் கொடுத்தல் ஆகிய குணங்களை மாணவர் பெறுவதற்கும் சமூகவியல் ஏதுவாகிறது: நாட்டின் அரசியலைத் தெரிந்து கொள்வதோடு அந்நாட்டின் பொருளாதார அமைப்பைத் தெரிந்து கொள்வதற்கும் சமூகவியலைக் கற்கவேண்டும். பிறநாடுகளிடம் உணவுப் பொருட்களுக்காகக் கையேந்தி நிற்கும் பொருளாதாரமா? அன்றேல் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் பொருளாதாரமா? என்பதைக் கண்டு பொருளாதார நெருக்கடியைத் தெரிந்துகொள்வதற்குச் சமூகவியல் உதவியளிக்கின்றது. இன்று ஈழத்தின் பொருளாதார நெருக்கடி மிக மோசமான நிலையில் இருக்கிறது; கீழ்த்திசை நாடுகளின் நெற்களஞ்சியம் என்று பாராட்டப்படுமளவிற்கு ஈழவழநாடு செந்நெற்கழனிகளுடன் பொன்மயமாகத் திகழ்ந்த பண்டைய நிலைமை மாறி நாழி அரிசிக்கே வெளிநாடுகளின் உதவி நாடி நிற்கின்றோம் நாம். அரிசி தந்துதவும் அந்நியர்களே கைகளை அகல விரித்த பின்னரும் நெருக்கடியைத் தீர்க்க ஆனமட்டும் முயற்சிக்கிறது அரசு. பூந்தோட்டங்களை வைத்து அழகு பார்ப்பவர்கள் இன்று தாமே மண்வெட்டி தூக்கும் காலம் வந்துவிட்டது. ஒவ்வொரு அங்குல நிலத்தையும் உணவு உற்பத்திக்குப் பயன்படுத்த வேண்டிய அவசியம் வந்துள்ளது; இவைகளை மாணவர்கள் நன்கு உணர்வார்களேயானால் எதிர்காலத்திலாவது உணவு நெருக்கடியை ஓரளவு சமாளித்துக்கொள்ளலாம்.

மேலும் ஒரு நாட்டின் மூலவளங்களை அறிவதற்கும் புவியியல் அமைப்பை அறிவதற்கும் சமூகவியல் பேருதவி அளிக்கிறது; ஒரு நாட்டின் இன்ன பகுதிகளில் இன்ன கனிப்பொருட்கள் இருக்கின்றன என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவதன்மூலம் அவற்றின் உதவிகொண்டு நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்க முடியும். நம் முன்னோர்கள் உழைத்ததன் பயனாகப் பல வாழ்க்கை வசதிகளும் சமூக முன்னேற்றமும், நாட்டுச் சுதந்தரமும் கிடைத்துள்ளன என்னும்விபரங்களை மாண வர்கள் உணரச்செய்தல், அத்தகைய பெருமக்களுக்கு நன்றி செலுத்தும் கடமை உணர்ச்சியை உண்டாக்குதல் அவர்கள் தேடித்தந்த சமூக உரிமைகளையும் நாட்டுச் சுதந்திரத்தையும் காப்பாற்றும் பொறுப் பில் மாணவர்கள் இருப்பதைச் சமூகக் கல்வி எடுத்துக்காட்டுகின்றது;

சமூக அறிவியல் பாடம் செய்முறைப் பயிற்சியின்மூலமும் ஆராய்ச்சியின் மூலமும் கற்பிக்கப்படுவதால் வெறும் புத்தகப் படிப் பின் மூலம் பொருளறிவு பெறுவதைவிடச் சிறந்த பயனை அளிக்கிறது. மாணவர்க ளுக்குத் தன்னம்பிக்கையும் சுயமுயற்சியும் ஏற்படுகின்றன. பல நாட்டு மக்களின் தொடர்புகொண்டு, அமைதியான முறை யில் வாழும் பரந்த மனப்பான்மையும் மனித சமூகத்தில் எல்லோரையும் உடன் பிறந்தவர்களாகக் கருதும் எண்ணத்தை யும் உண்டாக்குகின்றது. செயல்முறையில் இப்பாடம் கற்பிக்கப்படுவதால் மாணவர் கள் செயல்களில் ஈடுபடும்பொழுது அவர் களுடைய இயற்கைப் பண்புகளும் ஆற்றல் களும் சிறந்துவளர இடமளிக்கிறது. மாண வர்கள் செயல்களில் ஈடுபடும்பொழுது அவர்களுடைய இயற்கைப் பண்புகளும், ஆற்றல்களும் சிறந்து வளர இடமளிக்கி றது: மாணவர்கள் குழுக்களாகக் கூடிப் பல வேலைகளைச் செய்தால், குழு உணர்ச் சியையும் கூட்டுறவு மனப்பான்மையையும் ஒருங்கே பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

சூழ்நிலைக்கேற்பத் தங்கள் வாழ்க்கையை யும் அதனை நடத்தும் முறைகளையும் மாற்றி ஒழுங்குபடுத்திக்கொள்ளும் ஆற் றலை வளர்க்க இப்பாடம் உதவுகிறது.

ஒருநாட்டின் வரலாற்றைப் படிப்பதன் மூலம் அந்நாட்டின் நடவடிக்கைகளை அறிந்துகொள்ளலாம். அதில் இருந்து பல பாடங்களைக் கற்றுக்கொள்ள ஏதுவாய் இருக்கும். உதாரணமாக, "இஸ்ரேல்" நாட்டின் வரலாற்றைப் படித்தால் அந் நாட்டு மக்களிடம் இருந்து சிறந்த படிப் பினையைப் பெற்றுக் கொள்ளலாம்; இவற்றை எல்லாம் அறிவதற்குச் சமூக வியல் ஒரு கையேடாக அமைந்து விடும்;

இன்றைய மாணவர்கள்தான் நாளைய நாடு காக்கும் தலைவர்கள்; எனவே மாண வர்கள் சமூகவியலைப் படிப்பதன் மூலம் முழு மனிதர்களாகி விடுகிறார்கள். அவர் கள் ஆசிரியர்களாகி உலகத்தைக் கிராம மக்களுக்குக் காட்ட வேண்டும். வாலிபர் கள் வைத்தியர்களாக வேண்டும். நாட்டு மக்களின் உடல் உள்ளம் இரண்டிலும் உள்ள நோய் தீர்க்கும் மருந்தளிக்க வேண் டும். ஆம்! வாலிபர்களுக்கு ஏராளமான வேலை இருக்கின்றது. இவ்வாறான மாணவர் கள் நாட்டில் மலிய வேண்டுமானால் அர சியல், பொருளாதாரம், சமூகம் என்ப வற்றை நன்கு அறிய வேண்டும். அவ்வா றான வாலிபர்கள் இருந்தாற்றான் ஒரு நாட் டின் சிறப்பும் புகழும் குன்றிலிட்ட விளக் காய்த் திகழும்.

திருமதி அ. நல்லையா,
2-ம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தியும் கல்வியும்

சோ. சந்திரசேகரம், B. E. D, Hons.

பொருளாதார அபிவிருத்தி பல காரணிகளின் விளைவாகும். உழைப்பினர்களின் தொகை அதிகரிப்பு, போதிய அளவு மூலதனம், சமுதாயத்தில் காணப்படும் அறிவும் திறன்களும் என்பன அவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று காரணிகளாகும். ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா முதலிய நாடுகளில் பொருளாதாரம் துரிதமாக வளர்ச்சி பெறுவதற்குக் குடித்தொகையின் துரிதமான வளர்ச்சியும் ஒரு காரணமாகும். எனினும் குடித்தொகை வளர்ச்சிக்கேற்ப பொருளாதார வளர்ச்சி ஏற்படாத நாடுகளில், பொருளாதார அபிவிருத்திக்குக் குடித்தொகை அதிகரிப்பு ஓர் இன்றியமையாத காரணி என்று கூறமுடியாதுள்ளது. மேலும், தேசிய வருமானத்திலிருந்து என்ன விகித மூலதனத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதிலும் பொருளாதார அபிவிருத்தி தங்கியுள்ளது என்றும் கூறப்படுகின்றது. முன்னேறிய பொருளாதார அமைப்புகளில் இடம் பெறும், உயர்ந்த வீதமான முதலீட்டைப் பின்தங்கிய பொருளாதார அமைப்புகளில் இடம் பெறும் குறைந்த வீத முதலீட்டுடன் ஒப்பிடும்போது மொத்த உற்பத்தியின் துரிதமான அதிகரிப்புக்கு முதல் பெருக்கமே காரணமாக இருந்தது என்பது புலப்படும்; ஆனால் இது முழுவதாக ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தன்று என்பதைப் பல நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற சான்றுகளும், புள்ளி விபரங்களும் எடுத்துக் காட்டுகின்றன. நோர்வே நாட்டில் உயர்ந்த வீத மூலதனம் பொருளாதாரப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைவாகவே இருந்தது; 1950 இல் ஐக்கிய இராச்சியத்தில் முதலீடு கணிசமான அளவு பெருகியபோதிலும் தேசிய உற்பத்திப் பெருக்கம் குறைவாகவே இருந்தது; எனவே பல பொருளியலாளர்கள் முதலீட்டு அளவு மட்டும் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயித்துவிட முடியாது என்று முடிவு செய்துள்ளார்கள்.

உற்பத்தி முறையில் நவீன கருத்துக்களும், தொழில் நுட்பங்களும் அதிகரிக்கப்படும்போது முழுப் பொருளாதாரமும் முன்னேற முடியும். இவை உயர்கல்வி நிலையங்களிலிருந்தும், ஆராய்ச்சி நிலையங்களிலிருந்துமே பிறக்க முடியும். எனவேதான் பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வி வளர்ச்சி இன்றியமையாத தொன்றுகின்றது. அத்துடன் பல்வேறு வகையான திறன்களையுடைய உழைப்பினர் வர்க்கம் காணப்படுகின்றது. இவ்வாறான திறன்கள் வேலை செய்யும்போது பெற்ற அனுபவத்தின் விளைவு ஆயினும், இதில் பெரும் பகுதி முறையான கல்விப் பயிற்சியின் விளைவு என்றே கொள்ள வேண்டும். உழைப்பாளர்களுக்கு எவ்வளவு விரைவாகத் திறன்களைப் பயிற்ற முடியுமோ, அவ்வளவு விரைவாக அவர்கள் புதிய உற்பத்தி நுட்பங்களைப் பயன்படுத்த முடிகின்றது. அவற்றைக் கொண்டு உற்பத்தி முறைகளை மாற்றிக் கொள்ள முடிகின்றது.

பொருளாதார அபிவிருத்திக்குக் கல்வி மற்றொரு தொண்டினையும் ஆற்றுகின்றது; அதனை நேரடியாகக் காண இயலாவிடினும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகவே விளங்குகின்றது. அதுவே நுகர்ச்சியாளர்களையும், தொழிலாளர்களையும், நிர்வாகிகளையும் இணைக்கும் சிக்கலான தொடர்புகளும், மனப்பான்மைகளுமாகும்; பாடசாலைக்கல்வி பெருவளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கும் மாற்றங்களை ஏற்படுத்துவதில் விருப்பமும் காணப்படுகின்றது; பிற சமுதாயங்களில் ஆழமான பாரம்பரியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமை வாதம் இதற்கு எதிரான மனப் பான்மையை ஏற்படுத்தியுள்ளது: துரித மான மாற்றமே பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடியது. வளர்ச்சியை ஏற்படுத்தத் தற்போது நிலவும் மனப்பான்மைகள் மாற்றப்படல் வேண்டும்:

பொருளாதார வளர்ச்சியில் கல்வி கொள்ளும் பங்கினை அளக்க வெவ்வேறு காலப்பகுதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அதனை அளக்கும் பிரச்சினைக்குத் திருப்திகரமான தீர்வு இன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஐக்கிய அமெரிக்காவில் அத்தகைய அளக்கும் முறையொன்று கையாளப்பட்டது. அதன்படி பல்வேறு மக்கள் தொகுதியினரால் பெறப்படும் பல்வேறுபட்ட வருமானங்கள், அவர்கள் தேசிய பொருளாதாரத்துக்குப் பல்வேறு வகையில் ஆற்றிய தொண்டினை எடுத்துக்காட்டுகின்றன. அவர்கள் பெறுகின்ற வருமான வேறுபாடுகள் அவர்களுடைய திறன்களிலுள்ள வேறுபாடுகளையும், திறன்களிலுள்ள வேறுபாடுகள் அவர்கள் பெற்றுள்ள முறையான, முறையற்ற கல்விச் சித்தியில் உள்ள வேறுபாடுகளையும் எடுத்துக்காட்டுகின்றன. உண்மையில் கல்வித் தகுதிக்கும், வருமானங்களுக்குமிடையில் கூடிய இணைப்பு உண்டு. கல்விக்கு ஏற்பட்ட செலவினை மனிதனின் அறிவு வளர்ச்சிக்குச் செய்யப்பட்ட செலவாகக் கொண்டால், அதனை மூலதனப்பொருள் ஒன்றை உருவாக்கச் செலவு செய்த தொகை எனவும் கொள்ளலாம்: ஒரு குறிப்பிட்ட அளவு கல்வி பயின்றவர்களும், குறைந்த அளவு கல்விப் பயிற்சி உடையவர்களும் வாழ்நாள் முழுவதும் பெறுகின்ற வருமானத்தில் உள்ள வேறுபாடு, ஏற்கனவே கல்வியில் செய்யப்பட்ட முதலீட்டுக்குக் கிடைத்த விளைவு வீதம் என்று கொள்ளலாம். அதன்பின் கல்வியின்மீது இடப்பட்ட மூலதனம், அதே அளவான மூலதனம் வேறு தொழில்களில் இடப்பட்டிருந்தால் பெற்றிருக்கக் கூடிய விளைவினைவிட அதிகமான விளைவினைப் பெற்றதா என்பதைக் கணித்துக் கொள்ளலாம்:

ஆனால் இவ்வாறான வழிமுறையில் குறைபாடுகள் உண்டு. கல்வி பொருளாதாரப் பயனை மட்டும் உடையதன்று. பண்பாட்டை மேம்படுத்துவதிலும் அதற்கு முக்கிய பங்குண்டு; அப்பங்கினை அளந்து கூற முடியாது. கல்வியின் இப்பண்பாட்டு முக்கியத்துவத்தை இவ்வழிமுறை கருத்திற் கொள்ளத் தவறுகின்றது. கல்வி சமுதாய உறுப்பினர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைவதை இம்மதிப்பீடு எடுத்துக் காட்டுவதில்லை. சமுதாயத்தின் பாரம்பரியமான கலைகளையும், அறிவுச் செல்வத்தையும் புதிய தலைமுறையினருக்கு வழங்குவதிலும் கல்வி பெருந் தொண்டாற்றுகின்றது: இவ்வாறான கல்வியின் மேன்மையான பெறுபேறுகளையும், விழுமியங்களையும், பயன்களையும் கணித முறையில் அளந்து கூற முடியாது.

கல்வியின் மீதான முதலீட்டின் விளைவுகளை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட இம்முறை விளைவு வீதமுறை (Rate of Return) எனப்படும். இவ்விளைவு வீத முறை இரண்டு வகைப்படும்: முதலாவது, ஒரு தனியாள் கல்விக்கெனச் செய்த செலவை, அக்கல்வியால் ஏற்பட்ட பயனுடன் அல்லது விளைவுடன் ஒப்பிட்டு, அத் தனியாளின் கல்வி மீதான முதலீட்டினால் ஏற்பட்ட விளைவு என்ன என்பதை மதிப்பிடுவதாகும். இவ்விளைவு வீதம் தனியாள் விளைவுவீதம் எனப்படும். இரண்டாவதாக, கல்வியின் மீதான முழுச் செலவையும் சமூகத்தின் முதலீடாகக் கொண்டு அதனைச் சமூகம் பெறும் பயன்களுடன் ஒப்பிட்டுச் சமூக விளைவு வீதத்தைக் கணித்தல் ஆகும்; சில அறிஞர்கள் கல்வியின் மீதான அரசாங்கச் செலவுபற்றிய கொள்கையைத் தீர்மானிப்பதில் கல்வியின் சமூக விளைவுதான் முக்கிய பங்குகொள்ள வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்;

பொருளாதார அபிவிருத்தியில் கல்வியின் மீதான முதலீடு ஏற்படுத்தும் விளைவுகளைக் கண்டறிய உதவும் மற்றொரு முறை இணைப்பு முறையாகும். (Correlation Approach) நாட்டின் பொருளாதாரப் பணிகள் பற்றிய ஒரு சுட்டெண்ணும் (index) கல்விப் பணிகள் பற்றிய ஒரு சுட்டெண்ணும் தயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்கப்பட்டு, இவை இரண்டுக்குமுள்ள இணைப்புப்பற்றிப் பரிசீலனை செய்வதே இம் முறையாகும். எடுத்துக் காட்டாக, பாடசாலைகளில் மாணவர் சேர்வுதொகையின் விகிதமும் (enrolment ratio), நாட்டின் தலைவருமான வீதமும் (per capita income) ஒப்பிடப்பட்டன. இவ்வாறான பரிசீலனையில் இரண்டு அம்சங்களுக்குமிடையில் இணைப்பு இருப்பது தெளிவாகத் தெரிந்த போதிலும், அவ்விணைப்புக்கான காரணங்கள் என்ன என்பதுபற்றித் திட்டமாக முடிவு செய்ய முடியவில்லை. இணைப்பு சாதகமாக இருப்பின் (positive correlation) கல்வியின் மீதான செலவும், கல்வியின் விரிவும் மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பதற்கு உதவுகின்றது என்பதை, அல்லது மொத்த தேசிய உற்பத்தி அதிகரிக்கும்போது நாடு கல்வியில் அதிகமாகச் செலவிடுகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. எனினும் இவ்வாறான எளிமையான 'கல்வி—மொத்த தேசிய உற்பத்திபற்றிய இணைப்பு' பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில் கல்வியின் பங்கு என்ன அளவான வளர்ச்சிக்குப் பொறுப்பாக இருந்தது என்பதைக் காட்ட மாட்டாது. 19-ம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் கல்வியின் மீதான முதலீடு அதிகரிக்காத நிலையில் அங்கு பெரும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. இந்நாட்டைப் பொறுத்த வரையில், இணைப்பு முறை உண்மையான நிலையை எடுத்துக் காட்டவில்லை. எனினும் இவ்வாறான ஒப்பீட்டுப் பரிசீலனைகள் பல்வேறு நாடுகள் கையாண்ட கொள்கைகளும் முயற்சிகளும் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தின என்பதை விளங்கிக் கொள்ளவும் எதிர்காலத்தில் சில குறிப்பிட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு எத்தகைய அபிவிருத்தி முறைகளைக் கையாள வேண்டும் என்பதை உணர்த்துவதற்கும் பேருதவி புரிகின்றன. கல்வித்துறையில் ஏற்படும் ஒரு குறிப்பிட்ட அளவான விரிவு அதற்குச் சமமான விளைவுகளைக் கல்வித்துறையில் ஏற்படுத்த வேண்டுமாயின், அவ்வாறான விரிவுக்கான முயற்சிகளும், கொள்கைகளும் குறிப்பிடத்தக்க சமமான செயற்றிறன் வாய்ந்தனவாக விளங்குதல் வேண்டும்.

கல்வியில் இடப்படும் முதலீடு ஏற்படுத்தும் பொருளாதார விளைவுகள் பற்றிய மதிப்பீட்டைச் செய்யப் பயன்படுத்தப்படும் மூன்றாவது முறை 'மீதிமுறை' (Residual Approach) ஆகும். அதன்படி, பொருளியலாளர்கள் ஓர் அளவான உற்பத்தி வெளியீட்டிற்குப் பொறுப்பான உள்ளீடுகளைக் (in put) கணக்கீடு செய்து நிரைப்படுத்துவர். ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பொருளாதார உற்பத்தி வெளியீட்டில் (out put) ஏற்பட்ட அதிகரிப்பை மதிப்பிட்டு, ஒவ்வொரு உள்ளீடும் அவ்வெளியீட்டு அளவை உற்பத்தி செய்ததில் கொண்ட பங்கு பற்றிக் கணக்கீடு செய்வர். இவ்வாறான ஆய்வில், சில காரணிகள் வெளியீட்டில் பங்குகொண்ட போதிலும் அக்காரணிகள் எத்தகைய உள்ளீடுகள் என்பதைக் கண்டு கொள்ள இயலாதிருக்கும். இவை ''குறித்துக் கூற முடியாத உள்ளீடுகள்'' எனப்படும். இவ்வாறான குறித்துக் கூற முடியாத உள்ளீடுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவை கல்வியும் அறிவுத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களுமாகும். இவ்வாறான 'மீதிமுறை'யின் குறைபாடு, மீதியான உற்பத்தி வெளியீட்டிற்கு காரணமாக அமையும் பல காரணிகளுள் ஒன்றாகவே 'பாடசாலைக் கல்வி' அமைவதாகும். அனுபவக் கல்வி, உடல் நலம், தொழில்நுட்ப மாற்றங்கள் முதலிய வேறு காரணிகளும் மீதியான உற்பத்தி வெளியீட்டிற்குப் பொறுப்பாக அமைகின்றன. பாடசாலைக் கல்வி தனித்து எந்த அளவான உற்பத்தி வெளியீட்டிற்குப் பொறுப்பாக இருந்தது என்பதைப் பிரித்தறிவதற்கான வழிமுறைகள் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. பிறகாரணிகளைவிடப் பாடசாலைக் கல்வியே மீதியான உற்பத்தி வெளியீட்டிற்குக் கூடிய அளவு பொறுப்பாக இருக்கின்றது என்னும் கருத்தை நிறுவ முடியுமாயின் கல்வித் துறைக்குக் கூடிய முதலீட்டை ஒதுக்குமாறு கோருவதற்கு இடமுண்டு.

இவ்வாறான 'முறைகள்' கல்வி பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றும் தொண்டைப்பற்றிய திருப்திகரமான விளக்கத்தைத் தராவிடினும் கல்வி, தனியாளுக்கும், நாட்டிற்கும் நன்மை பயக்கும் முறையில் பொருளாதாரத்துறையில் நல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவுகளையும், பயன்களையும் ஏற்படுத்து வதை நன்கு உணர்த்துகின்றன.

இன்று பொதுவுடைமை நாடுகளிலும், இந்தியா, இலங்கை போன்ற அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளிலும் கல்வித் திட்டங்கள் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுடனும், தேவைகளுடனும் இணைக்கப்பட்ட முறையில் அமைக்கப்படு கின்றன. கல்வித் திட்டத்தைப் பொருளா தாரத் திட்டத்துடன் இணைப்பதில் மனித சக்தி அணுகு முறை (man power approach) பயன்படுத்தப்படுகின்றது. இவ்வணுகு முறைக்கு அடிப்படையாக உள்ள கருத்து, பொருளாதார உற்பத்தி துரிதமாக அதிக ரிக்க வேண்டும் என்பதாகும். பொருளா தார உற்பத்தி பெருகுவதற்குச் சில அடிப் படையான அறிவும், ஆற்றலும், திறன்க ளும் உடைய உழைப்புச் சக்தி அல்லது தொழிலாளர் தேவைப்படுகின்றனர். இவர் களைக் கல்வி நிறுவனங்களே வழங்க முடி யும் என்பதாற்றான் கல்விக்கும் பொருளா தாரத்துக்குமிடையே தொடர்பு ஏற்படு கின்றது. ஒரு நாட்டிற்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குத் தேவையான ஆற்றல்கள், திறன்களின் அளவு என்ன என்பது பற்றி முடிவு செய்து அவற்றைக் கொண்ட மனித சக்தியைக் கல்வித்திட்டம் உருவாக்க வேண்டும் என்பதை இவ்வணுகுமுறை குறிக்கின்றது. அவ்வாறான கல்வித்திட்டம் குறிப்பிட்ட ஆற்றல்களையும், திறன்களை யும் உடைய தேவைப்பட்ட தொகையான ஆட்களைக் குறிப்பிட்ட காலத்துக்குள் பயிற்றும் நோக்குடையதாக விளங்கும். இவ்வாறான மனித சக்தித் தேவை பற்றிய மதிப்பீடுகளைத் தொழில் வழங்குவோர்கள் தாம் கடந்த காலத்தில் பயன்படுத்திய மனித சக்திபற்றிய அனுபவத்தின் அடிப் படையிலும் குடித்தொகைப் பெருக்கம் பற்றிய தகவல்களின் அடிப்படையிலும் செய்து கொள்வர். அவர்களிடமிருந்து தகவல்களைத் திரட்டி முழுநாட்டுக்குமான மனித சக்தித் தேவை பற்றி மதிப்பீடு செய்யலாம். அபிவிருத்தி நடைபெற்ற முன்னைய காலப்பகுதியில் பயன்படுத்தப் பட்ட மனிதசக்தியின் அளவினை எடுத்துக் காட்டாகக் கொண்டும் திட்டமிடலாம். எனினும் விஞ்ஞான ஆராய்ச்சியின் காரண மாகப் புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாவ தற்கு வழியுண்டாகையால் இவ்வாறான மனித சக்தி பற்றிய மதிப்பீடுகள் மாற்றத் துக்குரியனவாக விளங்கும்.

மனித சக்தித் தேவைகளை நிறைவேற் றும் வகையில் திட்டமிடப்படும் எந்தக் கல்வித் திட்டமும் பின்வரும் இரண்டு நிபந் தனைகளை நிறைவு செய்தால் மட்டுமே பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் வெற்றிகரமானதாக அமைய முடியும். I. பயிற்சி பெற்றவர்களை வேலைக்கு அமர்த் துவதால் ஏற்படும் பொருளாதார நன்மை கள், (அ) அவர்களைப் பயிற்றுவதற்கான செலவுக்கும், (ஆ) அப்பணத்தைப் பொரு ளாதார அமைப்பின் வேறு துறைகளில் முதலீடு செய்திருந்தால் கிடைக்கக்கூடிய நன்மைகளுக்கும் மேலதிகமானதாய் அமைய வேண்டும். II. கல்வியின் மீதான முதலீடு எல்லாக் கல்வி நிலைகளிலும் ஓரள வுக்கு நியாயமான முறையில் பகிரப்பட்டி ருத்தல் வேண்டும். கல்வி நிலைகள் என்பது ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை, தொழில், தொழில் நுட்பம் ஆகியவற்றைக் குறிக்கும்.

ஓர் அபிவிருத்தியடைகின்ற பொருளா தார அமைப்பின் மனித சக்தித் தேவை களைப்பற்றிக் கணித்துக் கூறுவது கடின மானதும் சிக்கலானதுமாகும். முதலாவ தாகத் தேசிய பொருளாதாரத்தின் பல் வேறு துறைகள்பற்றியும் தற்போதுள்ள மனித சக்தியின் நிலைமை பற்றியும் நம்பத் தகுந்த புள்ளி விபரங்கள் பல நாடுகளில் தயாரிக்கப்படவில்லை. எனவே குறுகிய கால, நீண்ட காலத்திட்டங்களுக்கான மனித சக்திபற்றிய கணிப்புகளைச் சரிவரச் செய்ய முடியாதுள்ளது. இரண்டாவதாக, சமூக, பொருளாதார இலக்குகளை அளவை யடிப்படையில் தெளிவாகக் கொடுக்கும் நீண்டகால சமூக வளர்ச்சித் திட்டங்கள் வரையப்படுவதில்லை. இவ்வாறான திட்டங் கள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களிலும் இவை சமூக பொருளாதார ஆற்றல்கள் பற்றிய சரியான மதிப்பீட்டை அடிப்படை யாகக் கொண்டிருப்பதில்லை. நீண்டகால சமூகவளர்ச்சித் திட்டங்கள் வரையப்ப டாத நிலையில் வருங்கால மனித சக்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளை அறிந்துகொள்ள முடியாதுள்ளது; மூன்றாவதாக, வருங்காலத் தேவைகளைக் கணித்து, இலக்குகளை நிச்சயிப்பதற்கு இப்போது பயன்படுத்தப்படும் முறைகள் குறைபாடுடையனவாகக் காணப்படுகின்றன. அத்துடன் பொருளாதார சமூக அபிவிருத்தியின் நீண்டகாலப் போக்குகளை முன்கூட்டியே கண்டுகொள்வது மிகவும் கடினமாகும்; நான்காவதாக, தொழில் நுட்பவியல் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து செல்லும்போது, குறிப்பிட்ட தொழில்களுக்கான கல்வித்தகுதிகளும், பயிற்சிமுறைகளும் அதற்கேற்ப மாற்றப்பட வேண்டியுள்ளன. எனவே இன்ன தொழிலுக்கு இன்ன கல்வித்தகுதிதான் இருத்தல் வேண்டும் என்ற நெகிழ்ச்சியற்ற கோட்பாட்டை மனித சக்தி அணுகுமுறையின்படி கடைப்பிடிக்க வேண்டியிருப்பது மற்றொரு குறைபாடாகும்; அடுத்து ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு திட்டத்தை வரைய ஆரம்பித்து, திட்டம் ஆயத்தமானவுடன் சூழ்நிலை மாறிவிடக் கூடும்.

மனிதசக்தி அணுகுமுறையைக் கொண்டு கல்வித்திட்டத்தை வரையும்போது கல்வியின் பிறபயன்கள் கருத்திற் கொள்ளப்படுவதில்லை. பண்பாட்டு வளர்ச்சிக்கும், தனியாள் ஆளுமை வளர்ச்சிக்கும், சமுதாயத்தின் அறிவாற்றல் பெருக்கத்துக்கும் கல்வித்திட்டத்தில் இடமளிக்கப்படுவதில்லை; எவ்வாறாயினும் இன்று எல்லா நாடுகளினதும் முதலாவது குறிக்கோள் பொருளாதார வளர்ச்சியாதலால் ''கல்வியின்பயன் கல்விப் பேறே'' என்ற கோட்பாட்டை விடுத்து கல்வி, பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான மனித சாதனத்தைப் பயிற்றும் வகையில் மனித சாதனத்தின் மீதான முதலீடாக விளங்குதல் வேண்டும் என்று கருதப்படுகின்றது.

> ''ஒரு நாட்டில் வேறுபட்ட இயல்புடைய மக்கள் வசிக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் ஒருமைப்படுத்துவதற்குக் கல்வி முறைதான் ஏற்ற சாதனம். இதைவிடுத்துச் சட்டத்தின் மூலமோ, பழக்க வழக்கங்கள் மூலமோ ஒருமைப்பாட்டைச் சாதித்து விடலாமென்று நினைப்பது அறிவீனம்''
>
> — '' அரிஸ்டாட்டில் ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவிப்புலன் இழந்தோர்க்குரிய கல்வி முறை

செவிப்புலன் இழந்த பிள்ளை கல்வியறிவு பெறும் நேரம் கட்புலன் தொழிற்படும் எல்லா நேரமுமாகும். எனவே இவற்றுக்குரிய வழிவகைகளை அமைத்துக் கொடுக்கக் கையாளப்படும் முறைகளிற் சில:

1. கூட்டாகச் சேர்ந்து கடமைகளைச் செய்தல்.
2. புலன் தொழிற்பாட்டுப் பயிற்சி;
3. கேட்கும் பயிற்சி;
4. உதட்டு வாசிப்பு;
5. உதட்டு வாசிப்பு மூலம் சொற்கள் கற்றல்;
6. பேச்சு, எழுத்து என்பவற்றின் மூலம் மொழித்தொடர்புகள் கற்றல் என்பனவாகும்;

ஆரம்ப வகுப்பு முதல் இறுதி வகுப்பு வரை பேச்சும், உதட்டு வாசிப்பும் சிறப்புப் பயிற்சிப் பாடமாகக் கற்பிக்கப் படுகிறது. வகுப்பறைகளிலுள்ள முகம் பார்க்கும் கண்ணாடிகள், பேச்சு — உதட்டு வாசிப்புப் பயிற்சிகளை அளிக்கப் பெருந்துணை புரிகின்றன. இப்பாடங்களை ஆசிரியர் பயிற்றுவிக்கும் போது தாமும் பிள்ளையும் கண்ணாடியைப் பார்க்கும் நிலையிலிருந்து பயிற்றவேண்டும். ஒலி உள்ளுறுப்பு அசைவுகளைப் பிள்ளை கண்ணாடியில் பார்த்துத் தானும் அதுபோல் ஒலியுடன் உறுப்புக்களைச் சரியான நிலையில் வைத்து ஒலிக்க ஆரம்பிக்கிறது. ஒலித்தலுக்குரிய உள்ளுறுப்பு உதட்டு அசைவுகளைப் பார்க்கக் கூடியதாகக் கண்ணாடியின் முன் அந்த எழுத்தை அல்லது சொல்லைப் பல முறை தொடர்ந்தொலிப்பதால் அதற்கான அசைவுகளைக் கற்றுக்கொள்ளக் கண்ணாடி வழி செய்கிறது. ஒலிக்கும்போது காற்று வெளிச் செல்லும். வேறுபாடுகள் அதிர்வுகள் முதலியவற்றைக் கண்ணால் பார்த்து அறியமுடியாது. இவ்வகையான ஒலிகளை ஒலிக்கும்போது பிள்ளையின் ஒலியுறுப்புக்களில் அதிர்வுகள் ஏற்படவேண்டிய இடங்களில் ஆசிரியர் தம் உள்ளங்கையை வைத்தும் அதே ஒலிகட்கான அதிர்வுகள் ஏற்படும் இடங்களைப் பிள்ளை உணர்ந்து ஒலிப்பதற்காகப் பிள்ளையின் உள்ளங்கையை ஆசிரியர் தமது ஒலி அதிர்விடங்களில் வைத்தும் ஒலிக்கப் பழக்குகிறார். இதனால் பிள்ளை ஒலிகட்கான அதிர்வுகளையுணர்ந்து திருத்தமான ஒலியை ஒலிக்கக் கற்றுக் கொள்ளுகிறது; ஓரளவு கேள்விச் சக்தியுள்ளவர்களுக்குச் செவிப்புலனியக்கக் கருவியின் மூலம் பேச்சுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்படியானவர்கள் கையடக்க அளவான கேளுதவிச் சிறு கருவிகளைத் தம் காதிற் பொருத்தி எந்நேரமும் ஓரளவு ஒலியுணர்வைப் பெற்றுத் தொழிற்படுகிறார்கள். இதனால் இவர்கள் ஓரளவு திருத்தமான பேச்சைப் பேசக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து ஒலிவடிவ அசைவுகட்குரிய வரிவடிவங்கள் எழுத்துக்கள் இன்னதென்று அறிமுகம் செய்யப்படுகிறது.

பிள்ளைகள் பேசுவதற்குமுன் அவர்கள் பேசவேண்டிய பொருள்களின் பெயர்களையோ சொற்களையோ அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். செவிப்புலனிழந்த பிள்ளை தனது சூழலிலும் புறம்பான இடங்களிலும், உயிருள்ளனவும், உயிரற்றனவுமான எல்லாப் பொருள்களையும் கண்டிருக்கலாம். ஆனால் அவற்றின் பெயர்களைச் செவிப்புலன்மூலம் கேட்டிருக்க முடியாததனால் பொருள்கட்குரிய பெயர்களை அறியாதவர்களாக இருக்கிறார்கள்; மொழியாக்க வளர்ச்சிக்குப் பல்வேறு வகைப்பட்ட பெயர், வினை, இடை, உரிச் சொற்களை அதிகமாக அறிந்திருக்க வேண்டியது அவசியம். சாதாரண குழந்தை தனது மொழி வளர்ச்சிக்கான இவ்வகைப்பட்ட பெருந்தொகைச் சொற்களைச் செவிப்புலன் மூலம் தன்னியல்பாகப் பெற்றுக் கொள்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு தேவையானபோது புதிய புதிய சொற்களையும் தேடி அதன்மூலம் பேச்சிலும் முன்னேற்றமடைந்து மொழியறிவிலும் பரந்த வளர்ச்சியடைகிறது. மொழி வளர்ச்சிக்குரிய சொற்களைச் செவிப்புலனிழந்தவர்களும் பெற்றுற்றுன் அவர்கள் தமது மொழிவளர்ச்சியில் முன்னேற்றம் அடையலாம். இதற்காக இவர்கட்குச் சொற்பெருக்கம் என்ற பாடமும் கற்பிக்கப் படுகிறது. இயற்கைப் பொருள்கள் மாதிரி உருவங்கள் கவர்ச்சிகரமான படங்கள் என்பவற்றின் மூலம் அவற்றுக்கான சொற்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன. அடுத்து அவற்றுக்கான சொல்லட்டைகளைத் தயாரித்து பொருட்கள், படங்கட்குரிய சொல்லட்டைகளைப் பொருத்தியும், படிப்பதனுல் இலகுவாகப் பொருள்களையும், சொற்களையும் தெரிந்து கொள்கிருர்கள். இவற்றுக்கான சொற்களைத் தாய்மொழி மூலம் ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதனுல் அவரின் உதட்டசைவைப் பார்த்துச் சரியானபடி சொற்களைச் சொல்லப் பழகுகிருர்கள். ஆசிரியரின் வாயிலிருந்து வரும் சொற்களின் ஒலிகளைப் பிள்ளை தம் காதினுல் கேட்க முடியாவிட்டாலும் ஒலிகட்கான உதட்டு அசைவுகளைத் தம் கண்களால் பார்த்தறிந்து அதற்கேற்பச் செயற்படுகின்றது. இதுவே உதட்டு வாசிப்பு. உதட்டு வாசிப்பு என்பது ஒரு பேச்சை வாசிக்கும் கலையாகும்.

பேச்சு, உதட்டுவாசிப்பு, சொற்பெருக்கம், எழுத்து ஆகியவைகளைத் தொடர்புறுத்திக் கற்றபின் தமது எண்ணங்களைச் சொற்களுக்குச் சொற்கள் தொடர்புபடுத்திச் சிறு வசனங்கள் மூலம் பேசியும், எழுதியும் வெளியிடுகிருர்கள்.

திருமதி ந. செல்வகுமாரன்,
1-ம் வருடம்

---

"அன்பு தழைக்கும் இடத்திற்றுன் அறம் தழைக்கும். அறம் தழைக்கும் இடத்திற்றுன் ஆண்டவனும் இருப்பான். இதை அறியாது இருட்டறைகளிலே ஆண்டவனைத் தேடி அலைபவர்கள் முட்டாள்கள்."

— தாகூர்.

# கிராமிய நடனங்கள்

நவ நாகரிகத்தின் உச்சநிலையை எட்டிப் பிடித்திருக்கும் இந்த இருபதாம் நூற்றுண்டில், விஞ்ஞான விஞேதங்கள் மலிந்து கிடக்கும் இக்கால கட்டத்தில் நடனக் கலேயும் துரிதமாக விருத்தியடைந்து வருகின்றது. உலகின் எட்டுக் கோணங்களிலும் கொட்டு முழக்கத்துடன் பவனி வந்து தனக்கென ஒரு தனியான இடத்தைக் கிராமிய நடனங்கள் பிடித்திருக்கின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லே.

கிராமிய நடனங்கள் தத்துவம், சமயம், விஞ்ஞானம், பேரிலக்கியங்கள், பொருளாதாரம் போன்ற வரிசையில் இடம்பெற்று, பல்வேறு கலேகளேயும் உள்ளடக்கியதாயுள்ளன. மேலும், மக்கள் வாழ்க்கையின் மேடு பள்ளங்கள் குறித்துக் கிராமிய நடனங்கள் தெளிவான உண்மைகளேக் கூறுகின்றன. பல்வேறு மொழிகளில் இக்கலே சம்பந்தமான மயக்க மூட்டாத உண்மைகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

வாழ்க்கைப் புயலிலும், துன்பச் சுமையிலும் அழுந்திச் சோம்பிய உள்ளங்களுக்கு அன்றுட வாழ்க்கையில் அல்லது முழு வாழ்க்கையில் எல்லேயற்ற மகிழ்ச்சியை இது அளிக்கின்றது. கிராமியக் கலேகள் அத்தனேயும் தன்னிலே அற்றதாய் தாமாகவே தோன்றியவைகளாகும். பரந்து, விரிந்த உள்ளமும், மலர்ந்த வதனமும் கொண்ட கிராமிய மக்களேயும், பசுமை நிரம்பிய இயற்கை யன்னேயின் எழில் தோற்றத்தையும், மாரி, கோடை, வசந்தம், இலேயுதிர் ஆகிய பருவகாலங்களேயும் கிராமியப் பாடல்களிலும் நடனங்களிலும் காணலாம். இக் கிராமிய நடனங்கள் சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், தைலதம், நிசாதம் ஆகிய சுரவரிசைகளிலும் பல்வேறு வகைப்பட்ட தாளவகைகளிலும் அடக்குவனவாகும். வாழ்க்கை இன்பத்தை எல்லேயற்ற உற்சாகத்தோடு எடுத்தோதும் பாடல் முதல் காதலனிடமிருந்து பிரிக்கப்பட்ட இளம் பெண்ணின் புலம்பல் வரை இக்கலே தொடர்ந்து செல்கின்றது. புராணக்கதைகளில் வரும் சாகசங்களேப் புகழ்ந்து பாடும் உணர்ச்சிமிக்க பாடல் முதல், தாலாட்டின் சோக இராகம்வரை தம்முள்ளடக்கியவையா யிருக்கின்றன. பெரும்பாலான பாடல்கள் வேலேசெய்யும் போது கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து பாடுபவையாகும். எனவே அவற்றின் சந்தமும் செய்யப்படும் நேரங்கட்கிசைய மாற்றமடைகின்றன. கதிரடிக்கும் போதும், நெல் குற்றும் போதும், துடுப்பு வலிக்கும் போதும் ஓடக்காரர் "அலேகடல் தாண்டிப் போவோம் மீன் பிடிப்போமே" என்றும், "ஏலவலி எலேலோ" என்றும் பாடுகின்றுர்கள். மலேச்சாரல்களிலே ஆடு மேய்க்கும் இடையர்கள், இடைச்சியர்கள், மழைக்காலத்தில் ஊஞ்சலாடும் பெண்கள், பிள்ளேகளேத் தாலாட்டும் தாய்மார்கள் எல்லோரும் பாடுகின்றுர்கள். மணப் பெண்ணே அலங்கரிக்கும்போது, பிறப்பின் போது, இறப்பின்போது, போருக்குச் செல்லும்போது இன்னேரன்ன பல சந்தர்ப்பங்களின்போது, பாடும் பாட்டுக்களேயும் கிராமிய நடனங்கள் உள்ளடக்குகின்றன.

வீட்டிற்குள், அரண்மனேயில், சடங்குகளில் பாடப்படும் பாடல்கள் உல்லாச இராகங்களாயிருக்கும். அவற்றின் இயற்கையான சிற்றின்பப் பண்பு மகிழ்ச்சி பொருந்திய கைத்தாளத்திஞலோ, முரசங்களின் ஒலியிஞலோ, பொருத்தமான ஆடை ஆபரணங்களிஞலோ மேலும் சிறப்படைகின்றது. மற்றச் சந்தர்ப்பங்களில் அவை மந்தமாகவும், இரங்கற்பா போலவும் தொனித்து அந்தச் சூழ்நிலேயை மேலும் சோகமயமாக்கும். மீனவ சமுதாயத்தினரின் பாடல்கள் தண்ணீரிலுள்ள கஷ்ட நஷ்டங்களேயும் இன்ப துன்பங்களேயும் வெளியிடும். ஆதிக்குடிகளின் இசை கானகத்தில் நிறைந்திருக்கும் அபாயங்களேயும் தொன்றுதொட்டு நிலவிவரும் மனஎழுச்சிகளேயும் பிரதிபலிக்கும். கானகத்தில் காரிருளில் நளனேப்பிரிந்து சென்ற தமயந்தி இறுதியில் துக்ககரமான முடிவை அடைவாள். பெரும்பாலும் இத்தகைய பாடல்கள் ஒரு யுத்தவீரனின், தியாகியின் வீர தீரப் பிரதாபங்களேத்தான் விளக்குகின்றன. உண்மையில் மக்களின் குணுதிசயங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், எண்ணப்பாங்குகளும் கூட மாறுபடுகின்றன. உதாரணமாகக் குறிஞ்சிநில மக்களின் இசை கிராமப்புற மக்களின் இசையை விடத் தொன்மையானது. கிராமியப் பாடல்கள் முரச முழக்கத்தோடு இசைக்கப்படுவதால் அவைகளின் சத்தங்களும் உயர்ந்த ஸ்தாயியில் அமைக்கப்படுகின்றன. முரசின் முழக்கம் ரசிகர்களைத் தானுகவே ஆடச்செய்யும். அவர்கள் இசையில் மெய்ம் மறந்து ஆடுவர். கிராமிய நடனங்களைக் காணவருவோர் தாங்களும் நடனக்காரர்களாக மாறுவதைக் காணலாம். விதைத்தல், அறுவடை செய்தல், வேட்டையாடுதல் போன்ற பாவனைகளைச் சந்தத்தோடு கூடிய முறையில் தோற்றுவித்து அழகுபடுத்தி யிருப்பதை உணரலாம். வயல்களில், காடுகளில் வேலை செய்யச் செல்லுமுன் விவசாயிகளின் குழந்தைகள் இத்தகைய நடனங்களைக் கற்றுக் கொள்ளுகின்றனர். உரியகாலம் வந்ததும் சமூக உயர்ச்சிக்குத் தங்கள் பங்கையும் செலுத்த வேண்டுமல்லவா? குழந்தைகளின் ஒவ்வொரு அசைவும் மகிழ்ச்சி அளிப்பதாகும். வேட்டைக்காரன் நடனம் வெறும் விளையாட்டல்ல. ஒரு கொடிய மிருகத்திடம் அகப்பட்டுக் கொண்டால் தப்புவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அத்தனை இயக்கங்களும் நடனத்தில் அமைந்து விடும். ஆகவே இத்தகைய நடனத்தைக் கற்றுள்ள குறிஞ்சிநிலச் சிறுவன் ஒரு கொடிய மிருகத்தைக் கண்டால் என்ன செய்வதென்று திகைத்து நிற்கமாட்டான். இவைபோன்ற எத்தனையோ உதாரணங்கள் கிராமிய நடனத்திற்கும், மக்கள் வாழ்க்கைக்குமுள்ள சம்பந்தத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன.

கிராமிய நடனங்கள் பல்வேறு வகைப்பட்டதாயிருக்கும். தலைவன் ஒரு போலிப் பாட்டைப் பாடியதும் வாத்தியக் காரர்கள் மேடையில் தோன்றுவார்கள். நடனம் ஆரம்பமாகும். முரசொலிக்கேற்ப கடிகார முள்போல் சுற்றி வருவார்கள். அவர்களது ஆட்டம் மிருகங்களின் நடையைச் சித்தரிக்கும். பின்பு அவர்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை நடித்துக் காட்டுவார்கள். தொடக்கத்தில் ஆட்டம் தளர்ந்து காணப்பட்டாலும் படிப்படியாகச் சூடுபிடித்து உச்சக்கட்டத்தை அடைந்து விடுகிறது. இக்கட்டத்தில் ஆட்டக்காரர்கள் இவ்விரண்டு பேராகச் சேர்ந்து ஒருவரை ஒருவர் புகழ்ந்து அபிநயிப்பார்கள். உல்லாசமாக உலாவுவார்கள். நுட்பமான முறையில் நடிப்பார்கள். அவர்களுடைய முழு உடம்பும் துரிதமாக இசைக்கேற்றபடி துடிதுடிக்கும்.

மாரிகால இசை இன்னும் விசேடமானது. அழகிய இளம் யுவதிகளைச் சுற்றி இளைஞர்கள் நிற்க, பாடகர்கள் பின்னணி இசைப்பர். குனிந்து மெதுவாக ஆடும் ஆட்டமும் விட்டுவிட்டு ஒலிக்கும் முரசும் சோகத்தை அதிகமாக்கும். ஒவ்வொரு ஒன்றரை அடி எடுத்து வைத்ததும் பெண்கள் பட்சிகளைப்போல் தாழக் குனிந்து ஒரு காலைத் தூக்கி மற்றக்காலோடு சேர்த்து வைத்து தத்திச் செல்வார்கள். சூழ்ந்திருக்கும் இளைஞர்கள் பாடிக்கொண்டும் கைகொட்டிக்கொண்டும் பெண்களை நோக்கிச் செல்வார்கள். ஆனால் உடம்பைக் கம்பீரமாக வளைத்துக் கொண்டே திரும்பி வருவார்கள். சிறுவர்கள், பெண்கள் ஆகிய இருபாலாரும் ஆட்டத்தின்போது தோளில் தடி வைத்திருப்பார்கள்.

கிராமிய நடன ஆடைகளைப்பற்றி ஆராயின், அவை பல்வேறு வகைப்படும். அவற்றுள் ஒன்றை விளக்குவோம். நடனக்காரரின் உடைகள் அவர்கள் ஆதிவாசிகளானாலும் சரி, கிராமிய மக்களானாலும் சரி ஒன்றோடொன்று ஒத்தவையாகவே இருக்கும். நெருக்கமாகச் சுருக்குவைத்துத் தைக்கப்பட்ட பாவாடை ராஜஸ்தானத்து எல்லா இனத்தவருக்கும் சாதியினருக்கும் பொதுவான உடையாகும். இப்பாவாடைகள் பிரதேசத்திற்குப் பிரதேசம் மாற்றமடைகின்றது. துணிகளின் தரத்திலும் வித்தியாசமிருக்கும். ஆனால் கெட்டிச்சாயமுள்ள சீட்டித் துணிகள் பொதுவாகப் பாவிக்கப் படுகின்றன. பெண்கள் நீண்ட கையுள்ள சோளிகளும் பளபளப்பான சிவப்பு, மஞ்சள், நிறங்களில் அச்சடிக்கப்பட்ட துப்பட்டிகளும் உபயோகிக்கிறார்கள். ஆபரணங்கள் வெள்ளி, தங்கம் ஆகிய இரண்டினாலும் தயாரிக்கப்பட்டவையாகும். சாதாரண மக்கள் வெள்ளி நகையும், பணக்காரர்கள் தங்கநகையும் அணிவர். தலையலங்காரத்திற்குச் சிறந்த ஆபரணக் கற்கள் பதிக்கப்பட்ட முடியை அணிவார்கள். இறுக்கமான வேட்டியும் நீண்ட கையுள்ள சட்டையும் ஆண்களின் உடைகளாகும்.

செல்வி. நவோமி பிச்சமுத்து
இரண்டாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியின் கல்விக் கொள்கைகளும் இன்றைய கல்வி முறைகளும்

உலகத்தைத் திருத்திய உத்தமர் வரிசையிலே உயர்ந்தோங்கி நிற்கிறார் காந்திஜி. அரசியற்றுறையிலே அவர் சாதித்துக்கொண்டவைகள் சாகாவரம் பெற்று, வரலாறு உள்ளளவும் சந்ததிகளின் உள்ளங்களிலே உறவாடும் என்பதை யாரும் மறுக்கார். காந்தி அரசியல் மேதை மட்டுமல்ல, அஹிம்சை என்ற ஆயுதத்தின் மூலம் சாதித்துக்கொண்ட சமுதாயச் சீர்திருத்தங்கள்தான் எத்தனை! அவர் ஈட்டிக்கொண்ட வெற்றிகள் கல்வித்துறையிலே ஆற்றிய சேவையின் மகத்துவத்தை மறுக்காவிடினும் மறைத்து விடுகின்றன. மனிதனை உயர்த்த — தாழ்ந்து கிடந்த இந்தியச் சமுதாயத்தை உயர்த்த — மனிதன் கண்டு பிடித்த ஆயுதங்களிலே தலைசிறந்தது 'கல்வி' என்பதை காந்தி உணர்ந்தார். காந்தியினால் பிற்காலச் சந்ததியாருக்கு விட்டுச் செல்லப்பட்ட முதுசொம்களிலே (Legacy) தலைசிறந்தவை அவரின் கல்விக் கொள்கைகளாகும்.

மனிதனை மனிதனிடமிருந்து பிரித்தும், ஒருமொழி பேசுவோரை இன்னுமொரு மொழி பேசுவோரிடமிருந்து பிரித்தும், ஒரு மாநிலத்தை இன்னொரு மாநிலத்திலிருந்து பிரித்தும் வைத்திருந்த சக்திகளை அகற்றவேண்டுமென்று பல்லாண்டுகாலம் முயன்ற காந்திக்கு அதைச் சாதிக்கக் கிடைத்த வழிவகைகளிலே சிறந்த அம்சம்தான் அவரின் கல்விக்கொள்கை எனலாம். காந்தி இந்தியாவின் ஒற்றுமையையும், அதன் சமூக பொருளாதார முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டே தம் கல்வித்திட்டங்களை வெளியிட்டார். அவரது கொள்கைகள் சுதந்திர இந்தியாவிற்கு மட்டுமல்ல, பல நாடுகளின் கல்விமுறைகளை நோக்கின் அவை காந்தியின் கொள்கைகளை ஒத்திருப்பதையும் காணலாம். அவரது கல்வித் தத்துவத்தின் இதயம் 'கையுழைப்பு' (Manual labour) எனலாம். கைவேலைக்குப் பெரிய மகத்துவத்தை அவர் அளித்தார். அரசியல், சமூக, பொருளாதார, கல்வித் துறைகள் மட்டுமல்ல சமயத்துறைகூட 'உடலுழைப்பு' என்ற அச்சாணியிலேதான் சுழலுகின்றதென்ற உண்மையை உணர்த்தினார். அவரின் கல்விக் கொள்கையின் ஆரம்பத்தை 'வார்தா திட்டம்' அன்றேல் அடிப்படைக் கல்வித் திட்டம் என்பதனோடு தொடர்பு படுத்துவர். வார்தாதிட்டம் 1937-ல் வெளிவந்தது. ஆனால் அவரின் கல்விக்கொள்கைகள் தென்னாபிரிக்காவிலே அவர் வாழும் பொழுதே சிறிய அளவில் உருப்பெற்றவைகளாகும். சுமார் நாற்பது ஆண்டுகளாகக் காந்தி செய்துவந்த பரிசீலனைகளைத்தான் 1937-ல் தேசியக் கல்வித்திட்டமாக வார்தா திட்டம் ஏற்றது.

20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிலவிய கல்வி முறைகள் பல குறை பாடுகள் உடையனவாகக் காணப்பட்டன. அடிப்படைக் கல்வி முறையில் பலரும் அதிருப்தி கொண்டிருந்தனர். ஆசிரியர்கட்குக் குறைந்தவேதனம் அளிக்கப்பட்டது. கல்வி புத்தகப்படிப்பாக மட்டுமே அமைந்தது. இக்கல்வி வாழ்க்கைக்குப் பயனளிக்காத ஒன்றாக இருந்தது. மேலும் இக்கல்விமுறை பிள்ளைகளைக் கவராத ஒன்றாகவும், அவர்கள்மேல் திணிக்கப்பட்டதாகவும் இருந்தது. இதன் விளைவாக மாணவர்கள் தாம் கற்றதைச் சீக்கிரமாகவே மறந்தனர். இது அரசாங்கத்திற்கும் மாணவர்களுக்கும் நட்டத்தை விளைவித்தது. (1) பணநஷ்டம் (2) வீணான கால விரயமாகக் கல்வி அமைந்தது. ஆங்கிலக் கல்வியின் மோகத்தால் பலர் ஆங்கிலம் கற்றுச் சமுதாயத்தில் இரு பிரிவினராகினர். இந்நிலைமைகளை அகற்றத் தாய் மொழிமூலம் கல்வி அளிக்கப்படவேண்டுமென்னும் கொள்கையை வெளியிட்டார். 1932-ல் காந்தியின் கல்விச் சிந்தனைகளில் சில பின்வருமாறு அமைந்தன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 8 வயதுவரை ஆண்களும் பெண்களும் ஒருமித்துக் கல்வி பயிலவேண்டும்;

2; இக்காலக்கல்வி, நிபுணர் ஒருவரின் மேற்பார்வையில் நடைபெறுவதோடு இக்கல்வி அதிகமாகக் கைவேலைப் பயிற்சியில் செலவு செய்யப்பட வேண்டும்;

3; ஒவ்வொரு பிள்ளையினதும் விசேஷ திறமைகள் கண்டுபிடிக்கப்பட்டு அத்திறமைக்கேற்ப இக் கைப்பணிகள் கொடுக்கப்பட வேண்டும்.

4. ஆரம்பத்தில் இலகுவான கேத்திர கணிதப் படங்கள் வரையப் பழக்கிய பின் எழுத்துக்கள் எழுதப் பழக்குதல் வேண்டும்.

5. எவ்விஷயத்தையும் பிள்ளைக்குப் பலாத்காரமாகப் போதிக்கப்படாது.

6; எல்லாக்கல்வியும் தாய்மொழிமூலம் கற்பிக்கப்படல் வேண்டும்;

7. 9—16 வயது வரையிலுள்ள காலம் பிள்ளையின் கல்வியின் 2-ம் படிவமாகும்.

8; இந்துப் பிள்ளைகட்கு சமஸ்கிருதமும், முஸ்லீம் பிள்ளைகட்கு அரபுமொழியும் போதிக்கப்படல் வேண்டும்.

9. ஆண்களுக்கு (2-ம் படிவத்தில்) பெற்றோர்களின் தொழில்கள் பயிற்றப்பட வேண்டும்;

10; இந்நிலையில் பிள்ளைகள் உலகவரலாறு, புவியியல், தாவரவியல், வானசாஸ்திரம், எண்கணிதம், அட்சர கேத்திரகணிதங்கள் ஆகிய பாடங்களிலே போதியளவு பொது அறிவைப் பெறல்வேண்டும்.

11. 16—25 வயது (3-ம் படிவமாகும்) ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் அவரவர் விருப்பத்திற்கும் சூழலுக்கு மேற்ற கல்வி பெறுதல் வேண்டும்.

12; ஆசிரியர்க்கு உயர்ந்த சம்பளம் கொடுக்காது, வாழ்க்கைக்குத் தகுந்த வேதனமே வழங்கப்படல் வேண்டும். பிரமாண்டமானதும் செலவு கூடியதுமான கட்டிடங்கள் பாடசாலைகட்கு அவசியமில்லை.

13; ஆங்கிலமொழி ஏனைய நாடுகளுடன் தொடர்பு கொள்வதற்காகவும் சர்வதேச வர்த்தகத்தில் பங்கு கொள்வதற்காகவும் கற்பிக்கப்பட வேண்டும்.

14; கல்வி அறிவில்லாத வயது வந்தோர்களுக்கென இராப்பாடசாலைகள் அமைக்கவேண்டும்;

இக்கல்வித் தத்துவங்களை 1937-ல் இந்தியாவின் கல்வி விசாரணைக்குழு டாக்டர் ஸாஹிர் உசேன் (பாரதத்தின் 3-ம் ஜனாதிபதி) தலைமையில் ஆராய்ந்தது. காந்தியின் கல்விக் கொள்கைகளை இந்தியா மட்டுமல்ல, பலதேசக் கல்வி நிபுணர்களும், உளநூல் வல்லுநர்களும் ஏற்றிருக்கின்றனர். காந்தி பாலறிவுபற்றியும் கூறியுள்ளார். இவற்றை இன்றைய உளநூலார் ஏற்றபோதிலும், யார் இதைப் போதிக்க வேண்டும் என்பதிற்றான் காந்திக்கும் உளநூலார்க்கும் வேறுபாடு காணப்படுகிறது. அவரின் கல்விக் கொள்கையில் பல இன்று எமக்கு மிகப் பயனுள்ளவையாக இருப்பதைக் காணலாம். 14 வயதில் மாணவன் தொழிலைக் கற்கிறான். தாய்மொழிக்குக் கொடுத்த முக்கியத்துவத்தால் இன்று இந்தியாவில் மட்டுமல்ல இலங்கை, ஜப்பான், ரஷ்யாமுதலியநாடுகளிலும், ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் தாய்மொழி மூலமே கல்வி கற்பிக்கப்படுவதை நோக்கும்போது காந்தியின் கல்விக்கொள்கைகள் ஏனைய கல்வி நிபுணர்களின் கருத்துக்களோடும் ஒன்றுபட்டிருப்பதைக் காணலாம்.

தேசிய கலாச்சாரங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய காந்தி ஏனைய நாடுகளின் கலாச்சார அறிவைப்பற்றியும் வற்புறுத்தினார். 1921-ல் அவர் 'யௌவன இந்தியா' பத்திரிகைக்கு "எந்தக் கலாச்சாரமும் தனித்து இயங்க முற்படின் அது வாழமுடியாது" என்று எழுதினார்; கிரா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மியத் தேவைக்கேற்பக் கல்வி முறை கண்டார் காந்தி. சத்தியம், அஹிம்சை, பொதுவுடைமையான சொத்து இவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு மனித இயல்வாதத்தைக் காந்தி வளர்த்தார். இத்தகைய சமுதாயத்தைத்தான் "சர்வோதய சமுதாயம்" என அழைத்தார். இதில் நீதி, அமைதி, சனநாயகம் காணப்படும். இன்றைய மக்கள் அரசாங்கமும் தன் தேர்தல் பிரசாரங்களிலும், சிம்மாசனப் பிரசங்கத்திலும் இக்கருத்துக்களை உள்ளடக்கியே வந்திருக்கிறது. இன்னும் பாடசாலைகளில் மதங்களின் சாரமான சகோதரத்துவம், சமத்துவம், அன்பு, ஜீவகாருண்ணியம் ஆகியவற்றின் அடிப்படையில் போதிக்கப்பட வேண்டுமேயொழிய எந்தத் தனிப்பட்ட ஒரு மதமும் நிலவக்கூடாதெனப் போதித்தார். டாக்டர் S. இராதாகிருஷ்ணன் (பாரத இந்திய 2-ம் ஜனதிபதி) தலைமையிலான பல்கலைக்கழக விசாரணைக் குழுவின் சில முடிவுகள் காந்தியின் இக்கொள்கைக்கு உரமும் உயிரும் அளிப்பதாக உள்ளன.

இந்தியா மட்டுமல்ல அகில உலகமுமே காந்தியின் கல்விக் கொள்கைகளைப் பாராட்டுகின்றது.

சிஸ். மேரி பொஸ்கோ
1-ம் வருடம்.

"மண்ணிற் பிறந்த பொன்னும் மலையிற் பிறந்த மணியும் கடலிற் பிறந்த முத்தும் ஒன்று சேர்ந்து மாலையாகத் திகழ்ந்து ஒளி வீசுகிறது. இதைத் தங்கள் கழுத்தில் அணிந்து வாழும் மக்கள் ஒரு குடியிற் பிறந்தும் ஒன்றுசேர்ந்து வாழ மறுப்பது எதன் பொருட்டு.?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கணிதத்தில் ஓர் அலகு


**ப**ழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கையே. இன்றைய உலகில் பல நாடுகளிலும் கல்வித்திட்டத்தில் புதிய கணிதம் சேர்க்கப்பட்டுள்ளது. உளவியல் அறிஞர்களும் இப்புதிய கணிதத்தை இரு கை நீட்டி வரவேற்கின்றனர். மிக இலகுவான முறையில் பாலர் வகுப்பிலிருந்து பட்டதாரி வகுப்புவரை கற்பிக்கக் கூடியதும், விளங்கக் கூடியதுமான இப்புதிய கணிதத்தை நவீன உலகம் வரவேற்கின்றது. இத்தகைய ஒரு புதிய திட்டத்தினால் தேவையான கணித அறிவை மாணவர்கட்கு அளிக்க முடியும். கீழ்வகுப்பில் கற்கும் விஷயத்தின் விரிவையே மேல் வகுப்புகளிலும் கற்கும் வாய்ப்பை மாணவன் பெற முடியும்.

இப்புதிய திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஓர் அலகான எண்வடிவங்கள் என்னும் அலகில் முக்கோணி எண், சதுர எண், செவ்வக எண் என்னும் அலகைச் சிறிது ஆராய்வாம். தொன்று தொட்டு இலக்கங்களின் தொகைகட்குக் குறியீடுகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. இத் தொகைகளைக் கொண்டு பல்வேறு கோலங்களை ஆக்க முடியும். இத்தொகைகள் பெறும் கோலங்களைக் கொண்டு அவை வகைப் படுத்தப்படுகின்றன. சில முக்கோண வடிவங்களையும், சில சதுர வடிவங்களையும், சில செவ்வக வடிவங்களையும் பெறுகின்றன.

1 3 6




இவை முக்கோணி எண்களாகும்.




இவை சதுர எண்களாகும்.

6 12



இவை செவ்வக எண்களாகும்.

முக்கோணி எண்கள் பெறப்படும் விதங்கள்.

1. ஒன்றிலிருந்து அடுத்துவரும் இலக்கங்களைச் சேர்த்துக் கூட்டும் பொழுது உண்டாகின்றன.

உ + ம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | = 1 = 1-ம் முக்கோணி எண் | | |
| 1+2 | = 3 = 2-ம் | ,, | ,, |
| 1+2+3 | = 6 = 3-ம் | ,, | ,, |
| 1+2+3+4 | = 10 = 4-ம் | ,, | ,, |

முதலாம் முக்கோணி எண்ணுடன் 2 ஐச் சேர்க்க 2-ம் முக்கோணி எண் வரும். 2-ம் முக்கோணி எண்ணுடன் 3 ஐச் சேர்க்க 3-ம் முக்கோணி எண் வரும். இப்படியே 2, 3, 4, 5, 6 என்ற ஒழுங்கில் அடுத்துவரும் முக்கோணி எண்ணுடன் கூட்டியும் முக்கோணி எண்களைப் பெறமுடியும்.

உ + ம்

1, 3, 6, 10, 15, 21 .........
2, 3, 4, 5, 6 .........

ஆறும் முக்கோணி யெண்ணாகிய 21-க்கு அடுத்த ஏழாவது முக்கோணி எண்ணைப் பெறுவதற்கு 7 ஐக் கூட்டவேண்டும். இப்படியே கூட்டி முக்கோணி எண்களைப் பெறுவது மிகச் சிரமமே.


ஒரு முக்கோணி அடுக்கின் அடியில் எத்தனை எண்களிருக்கின்றனவோ அஃது அத்தனையாவது முக்கோணி எண்ணாகும்; பக்கங்களிலும் அடியிலிருக்கும் தொகையே இருக்கும்.

உ + ம்; 3-ம் முக்கோணி எண்ணுக்கு அடி வரிசையிலும் பக்கங்களிலும் 3 எண்ணிகளே இருக்கும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ+ம்.




3-ம் △ எண்.        4-ம் △ எண்.

3-ம் △ எண்        4-ம் △ எண்

முக்கோணி எண் செங்கோண வடிவிலும் அமையும்.

உ+ம்.




4-ம் △ எண்        5-ம் △ எண்

மிக இலகுவான முறையில் முக்கோணி எண்களைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு விதியுண்டு. அதாவது :

$\frac{n(n+1)}{2}$ என்பதாகும். அதில் n என்பது ஏதாவதொரு முழு எண்ணுக்காகி வருகின்றது. n ஆவது முக்கோணி எண்ணைக் கண்டு பிடிக்க வேண்டுமானால் n ஐ ஒரு காரணியாக வைத்துக்கொண்டு n ஓடு ஒன்றைச் சேர்த்து வரும் n+1 என்ற மற்றக் காரணியால் பெருக்கி இரண்டாற் பிரித்துவிட வருவது n ஆவது முக்கோணி எண்ணாகும்.

இதை நாம் இலக்கத்தில் இட்டு விடை காண்போம். n ஆவது என்பதற்கு பதில் 6 ஆவது என்று வைத்துக் கொள்வோம். n+1 என்ற காரணிக்குப் பதில் 6+1=7 என்ற காரணியால் 6 ஐப் பெருக்க 42 விடை வரும். இத்தொகையை இரண்டாற் பிரிக்க விடை 21 ஆக வரும். ஆகவே 6 ஆவது முக்கோணி எண் 21 ஆகும்.

$$\frac{6\times7}{2} = \frac{42}{2} = 21$$

இவ்வாறே 10 ஆவது முக்கோணி எண்ணை நாமறிய விரும்பின்

$\frac{10\times11}{2} = \frac{110}{2} = 55$ எனக்கண்டு கொள்கிறோம்.

இதே 10 ஆவது முக்கோணி எண்ணைக் கண்டு பிடிக்க இன்னுமொரு சுற்றுவழியைக் கையாளலாம். அதாவது:

10-ம் முக்கோணி எண் $= 1+2+3+4+5+6+7+8+9+10 = 55$ ஆகும். இம்முறையில் எத்தனையாவது முக்கோணி எண்ணைக் கண்டுபிடிக்க எத்தனிக்கிறோமோ, அத்தனையாவது எண்வரையில் எழுதிக் கூட்டவேண்டிய நிர்ப்பந்த மேற்படுகிறது. இதேபோல் 100 வரை இலக்கங்களை எழுதிக் கூட்டினால் வரும் தொகை 100-ம் முக்கோணி எண்ணாகும். 1000 வரை இலக்கங்களை எழுதிக் கூட்டினால் வரும் தொகை 1000-ம் முக்கோணி எண்ணுக்குச் சமமாகும். எனவே இவ்விலக்கங்களை எழுதிக் கூட்டுவதிலும் பார்க்கச் சுலபமாகக் கூட்டுத் தொகையை அறிவதற்கு மேற்கூறிய முக்கோணி எண்விதி பயன்படும். இது முக்கோணி எண்ணைக் கற்கும் போது நாம் கற்றறிந்து கொள்ளும் உண்மையாகும்.

இன்னுமொரு இலக்கத்தைத் தந்துவிட்டு அது முக்கோணி எண்ணா அல்லவா என்று கூறுமிடத்து மறுதலை விதியைப் பயன்படுத்தி விடை கூறிவிடலாம்.

77 என்பது ஒரு முக்கோணி எண்ணா அல்லவா என்பதற்கு விடை காணுவோம். 77 ஐ இரண்டாற் பெருக்கி வரும் தொகை இரண்டு அடுத்துவரும் எண்களைக் காரணிகளாகக் கொண்டுவரின் அது முக்கோணி எண்ணாகும்.

$77\times2=154=7\times22$. $11\times14$ இக் காரணிகள் அடுத்துவரும் எண்களல்ல; எனவே 77 முக்கோணி எண்ணன்று. மேற்கூறிய முறையைக் கையாண்டு ஒரு இலக்கம் முக்கோணி எண்ணா அல்லவா என்பதைக் கண்டு பிடிக்கலாம்.

இம் முக்கோணி எண்களை "T" என்னும் ஆங்கில எழுத்தால் குறிப்பிடுவர். $T_1$ எனின் முதலாம் முக்கோணி எண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்; $T_2$ எனின் 2-ம் முக்கோணி எண்ணு கும்; $T_6$ எனின் 6-ம் முக்கோணி எண்ணு கும்;

இனிச் சதுர எண்களைப் பார்ப்போம். இச்சதுர எண்களை "S" என்னும் ஆங் கில எழுத்தால் குறிப்பிடுகின்றோம். முத லாம் சதுரஎண் $S_1$ என்றும், இரண்டாம் சதுரஎண் $S_2$ என்றும் எழுதப்படும்.


முக்கோணி எண்களைப் போல முதலாம், இரண்டாம், மூன்றாம் ......... ... சதுர எண் கள் என்றே இவற்றைக் குறிப்பிடுகின் றோம்;

ஓர் இலக்கத்தை அதே எண்ணாற் பெருக்க வருவது சதுர எண்ணாகும்.

$1 \times 1 = 1 =$ 1-ம் சதுர எண்ணாகும்.
$2 \times 2 = 4 =$ 2-ம் ,, ,,
$3 \times 3 = 9 =$ 3-ம் ,, ,,
$4 \times 4 = 16 =$ 4-ம் ,, ,,

இப்படியே மற்றைய சதுர எண்களை யும் காணலாம். இச்சதுர எண்களைக் காண இன்னும் ஒரு வழி உண்டு. உ+ம். அடுத்து வரும் ஒற்றை எண்களைக் கூட்டவருவது சதுர எண்ணாகும்;

$1 = 1 =$ 1-ம் சதுர எண்;
$1+3 = 4 =$ 2-ம் ,, ,,
$1+3+5 = 9 =$ 3-ம் ,, ,,
$1+3+5+7 = 16 =$ 4-ம் ,, ,,




இவ்வட்டவணையில் மேலுள்ளவை முக்கோணி எண்களாகும்; கீழுள்ளவை சதுர எண்களாகும்;

அடுத்துவரும் முக்கோணி எண்கள் இரண்டைக் கூட்ட வருவது சதுர எண் ணயிருப்பதை அவதானிக்க முடிகிறது. செவ்வக எண்களைப் பார்ப்போம்;

உ+ம்.


O O O
O O O $= 2 \times 3 = 6$

O O O O
O O O O $= 3 \times 4 = 12$
O O O O


செவ்வக எண்களின் காரணிகளில் ஒன்று மற்றையதிலும் கூடியதாக விருக் கும். ஒன்று என்னும் எண் காரணியாக எடுபடுவதில்லை; ஒன்று காரணியாகவரின் வடிவம் ஒரு கோடாகக் குறிக்கப்படுமே தவிர அகலத்தைக் காட்டமாட்டாது. எனவேதான் ஒன்றை ஒரு காரணியாக எடுப்பதில்லை. உ+ம்;

$2 \times 3 = 6$ $7 \times 2 = 14$
$4 \times 5 = 20$ $4 \times 6 = 24$
$2 \times 6 = 12$ $3 \times 5 = 15$ ஆகும்;


இரண்டு முக்கோணி எண்கள் சேர்ந்து வரும் பொழுது செவ்வக எண் உண்டா கும்;



$3 + 3 = 6$



$6 + 6 = 12$



$10 + 10 = 20$

இவை செவ்வக எண்களாக மாறும்;

$2 \times 3 = 6$ $3 \times 4 = 12$ $4 \times 5 = 20$

எனப் பெறப்படும். முதலாவதில் 2-ம் முக்கோணி எண் இரண்டும், இரண்டாவ தில் 3-ம் முக்கோணி எண் இரண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுவதில் 4-ம் முக்கோணி எண் இரண்டும் சேர்ந்தே செவ்வக எண்கள் உண்டாகியிருப்பதைக் காணலாம்.

ஆசிரியர் இவ்வலகைத் திறம்படக் கற்பிக்கத் தகுந்த உபகரணங்களைக் கையாளலாம். முக்கோணி எண்கள் வரையப்பட்டபடங்கள், துளைப்பலகை, எண்ணிகள் போன்றவை கற்பித்தலை இலகுவாக்கும்: வெற்று நெருப்புப் பெட்டிகள், சவர்க்காரக் கட்டிகள் முதலியனவற்றை அடுக்கிப் பல்வேறு உருவங்கள் பெறுவதை மாணவர் செய்து பார்த்தல் இவ்வலகை விளங்கிக் கொள்ளமுடியும்.

இச் சுவைமிகு கணித அலகு மாணவர்கட்கு மகிழ்ச்சியூட்ட வல்லது; சுவைபடக் கற்பிக்கும் ஆசிரியர் மாணவர் தொடர்பை ஏற்படுத்துவதோடு புதிய கண்ணேட்டத்தில் கணிதம் கற்பிக்கவும் முனைகின்றுர். மாணவன் ஆராய்ந்து கற்கும் ஆற்றலையும் பெறுகின்றுன்.

—திருமதி மகேஸ்வரி இராமேஸ்வரன்
(இரண்டாம் வருடம்)

"நன்மை செய்வதற்குச் சமயம் வாய்க்கும் போது செய்யாதொழிவையாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது."

— நாவலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரிதழ்கள் இணையாதுவிட்டால்

1. கோவைநகர் செய்தவத்தாற் றானோ வன்றிக்
கோதையர்கள் செய்தவத்தாற் றானோ வாழ்வின்
றேவையது நிறைவேறா நிலையி லென்னைத்
தேற்றிடவோர் வழிகாணா துலகிற் சாவை
ஆவலுடன் எதிர்நோக்கி நின்ற விந்த
அடியவள்செய் நற்றவத்தாற் றானோ விங்கு
நாவினிலே யுறைகின்ற வாணி யொத்த
நல்லணங்கைத் தலைவியென நயந்த டைந்தேன்.

2. வானுலகி னின்றுசிவன் றேவி யிங்கு
வந்திறங்கி யுள்ளாரோ அன்றி யன்று
கானவர்வே லனுக்களித்த வள்ளி யிந்தக்
கலாசாலை தனில்நுழைந்து கதைக்கின் றாரோ
தேனெனவே யினிக்கின்ற குரலைக் கொண்ட
தேவநங்கை யிவர்தானோ இரதி தானோ
நானெதனைச் சொல்லியிங்கு ஏத்து வேனோ
நாவசைந்தால் நாடசையச் செய்வல் லாரோ.

3. நாட்டினுக்குத் தொண்டுசெய வென்று யாழின்
நங்கைதிரு வுருக்கொண்டோ விங்கு வந்தார்
ஏட்டினிலே கவிதைகளில் எழுத வொண்ணா
எழிலுருவைத் திருவடிவை ஓவி யத்தில்
தீட்டிடவல் லார்யாரோ என்று எண்ணித்
திகைத்தேநின் றேனெந்தன் ஈரி தழ்கள்
கூட்டியொரு கவிசாற்ற வியலா நின்றேன்
குறுநகைகண் டதிசயித்தே வாய்தி றந்தேன்

4. வாய்திறந்த நிலையதனை யடைந்த தாலே
வழியில்லை யோகவியைச் சாற்று தற்கு
தாயினது கனிவவரின் வதனத் தூறித்
தனியுணர்ச்சி தனையெனக்கு ஊட்டி நிற்க
நோயதனி லரற்றிடுவா ரொத்து வார்த்தை
நொடியினிலே வெளிவந்த துணர்ந்து நின்றேன்
தூயவரை யேத்துதற்கென் னீரி தழ்கள்
துணைசெய்யத் தேவையில்லை யென்ற றிந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஈரிதழ்கள் இணையாது விட்டாலென்ன
இதற்காக இவரெழிலை இங்கே ரத்திற்
றாரணியோ ரறிந்திடயான் சாற்று விட்டாற்
றவறன்றே தணியாத ஆவ லுந்த
ஓரிதழாற் கவிசாற்ற உறுதிகொண்டேன்
உதவியது கீழுதடு உவகை கொண்டேன்.
ஆரெவர்தா னென்றிலவி எழிலைக் கண்டு
ஆச்சரியத் தால்வாயைத் திறந்து நில்லார்.

6. நானிங்கு உரைத்தவைகள் நடந்த தெங்கள்
நற்கோவைத் தலைவியையான் கண்ட வன்று
ஏனிதனை யுரைக்கின்றே னென்று லந்த
எழிலுருவைக் கண்டெந்தன் ஈரி தழ்கள்
தானிணையா திருந்திட்ட காலை யெந்தன்
தனியான கீழுதடு கவியைச் சாற்றி
ஆனகுறை தீர்த்தது நீர் அறிய வேண்டின்
ஆறுதலாய் இக்கவியைச் சாற்று வீரே.

— திருமதி மனோன்மணி நடராசா
(பழைய மாணவி)

[ இக்கவிதைகள் நிரோஷ்டமாக — ஈரிதழ்கள் இணையாது பாடப்படத் தக்கனவாயிருப்பதை அவதானிக்க ]


"தரித்திரனாய் இருக்கும்போது திருப்தியடையாதவன், செல்வனாயபோதும் திருப்தியடையான். திருப்தியடையாமை மனக் குற்றமேயன்றிப் பொருட் குற்றம் அன்று."

— நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் விழாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத் தேன்

திருவாசக மென்றால் மேன்மையான சொல். கேட்டோரால் விரும்பப்படும் பேச்சு; கண்டோரால் விரும்பப்படும் வசன நடை செய்யுள்நடை என்ற பல பொருள் களைத் தரும் ஒரு சிறந்த வாக்கியமாகும்;

மணிவாசகப் பெருமான் தேனீக்களைப் போல இடையருத முயற்சியினுலும், உயர்ந்த கொள்கையினுலும் மேன்மை யடைந்தவர். ஈக்களிலே பல இனம் உண்டு. ஒருவகை ஈ கெட்டவற்றிலெல்லாம் வாழ்ந்து மனிதருக்குப் பெருவியாதியும் பெருந்துன்பமும் தரும். இன்னொரு வகை ஈ தீயினை மலரென நினைத்து அதன் கவர்ச்சியினுல் உந்தப்பட்டு அதன்மேல் விழும். விழுந்த உடனே தீ சுடும். தீ சுடுகிறதே யல்லாமல் இன்பஞ் செய்யவில்லை என்று அறிந்த பின்னும் தீயில் வீழ்ந்து வீழ்ந்து அதன் வெம்மையினுல் இறந்துவிடுகின்றது.

இவற்றையெல்லாம் விட உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவையே தேனீக்கள். அவை மணமிகுந்த மலர்கள் மலரும் பருவத்தை அறிந்து சென்று அவற்றைத் தம் ஆறுகால்களினுலும் கிண்டி மலரையும் கெடுக்காமல் பெருமுயற்சியினுல் மிக உயர்ந்த தேனை எடுக்கின்றன. இவை தமக்கும் தம்மினும் உயர்ந்த மனித இனத்திற்கும் பெரு நன்மை செய்வன. இவ்வகையான ஈக்களைக் காட்டித் தம்மையும் இறைவனையும் காட்டுகிருர் மணிவாசகப் பெருந்தகை.

> செழுகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழியாரிற் பன்னுள்
> விழுகின்ற என்னைவிடுதி கண்டாய் வெறிவாயறுகால்
> உழுகின்ற பூமுடி யுத்தரகோச மங்கைக்கரசே
> வழிநின்று நின்னருளாரமுதூட்ட மறுத்தனனே.

உயர்ந்த வண்டுகள் தம்கால் வண்ணங் காட்டும்படியான கொன்றைப் பூவை யணிந்த திருமுடியை உடையவனே, நீ உத்தரகோச மங்கை என்ற பதிக்கு அரசன்; யானே வளர்கின்ற தீயிலே தன் அறியாமையினுல் மீண்டும் மீண்டும் விழுகின்ற விட்டில்போல மகளிரின்பத்தால் உன்னையடைய வேண்டும்: அதுதான் பேரின்பம் என்று அறியமுடியாமல் முயற்சியின்றித் துன்புறுகின்றேன். நான்கறிவுள்ள வண்டுகள் நின் திருமுடிக்கண் பெருமின்பம் பெற்று விளையாட ஆறறிவு படைத்த மனிதனுகிய யானே உன் பாதத்தையும் அடையமுடியாமல் வருந்துகின்றேன்.

நீ முன்பு நின் அருளாகிய அமுதத்தை வலியவந்து ஊட்டவும் யான் அதன் சிறப்பை உணர்ந்து கொள்ளாமையால் அதனை உண்ண மறுத்து விட்டேன். நீ தனித் துணையாக நிற்க யான் என் அறியாமையால் செருக்குற்றுத் தலையால் நடந்து விட்டேன். நீ நின் கருணைக் கையினுல் என்னை வாங்கியபோதும் வினை வயத்தால் அப்பிடிக்குள் அகப்படாது உலகபாசத்துள் அகப்பட்டு விட்டேன்; கரியுரி போர்த்தும் நஞ்சை உண்டும் தேவர் துயர் தீர்த்தவனே, பிறையையணிந்து மதியைக் காத்தவனே, என்னை வெறுத்து நீக்கி விடாதே: வினையின் தொகுதியை ஒறுத்து என்னை ஆட்கொள்வாய். இவ்வாறு மணிவாசகப் பெருமான் வேண்டியபோதெல்லாம் இறைவன் வெளிப்பட்டிருக்கிருர். நரியைக் குதிரையாக்கினுர். வைகையைப் பெருகச் செய்தார். இறைவன் தனக்கு அருள் கூர்ந்த போதெல்லாம் உள்ள முருகிப் பாடினுர் மணிவாசகர். அவருடைய பாடல்களை உள்ளமுருகிப் பாராட்டுகின்ருர் ஓர் அன்பர்:

> "தேவர் குறளும் திரு நான் மறை முடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
> திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
> ஒருவாசக மென்றுணர்."

இச் செய்யுளில் திருநான் மறை முடிவும் என இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்று சொல்லப்படுகின்ற நால் வேதமுந் திருவாசகத்தோடு ஒன்றுபட்டன என்று காட்டுகின்ருர்.

> " ஆதி சீர் பரவும் வாதவூரண்ணல் மலர்
> வாய்ப்பிறந்த வாசகத்தேன் "

என்றும்,

> "தொல்லையிரும் பிறவி சூழும் தளை
> நீக்கி அல்லலறுத்தானந்த மாக்குந்
> தேன்" என்றும் சிவப்பிரகாசரும், இராமலிங்க சுவாமிகளும் கூறியுள்ளனர்.

இத்தகைய சிறப்புக்களுக்கெல்லாம் இலக்காகி நின்றிலங்கும் திருவாசகம் தென்னுட்டவரால், மாத்திரம் போற்றப்படவில்லை. மற்றென்னுட்டவராலும் போற்றப் பட்டது, போற்றப்படுகிறது.

திருமதி புவனேஸ்வரி கார்த்திகேயன்
முதலாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமும் வாழ்வும்

தாகத்தால் தவிப்பவன் நாடுவது குளிர்ந்த நீர். நோயுற்றவன் தேடுவது உடல் நலம். வாழ்விலே ஒவ்வொருவரும் ஏங்குவது நல்வாழ்வு. மனிதன் வாழவேண்டுமென்று ஆசைப்படுவது மட்டுமல்ல நல்வாழ்வு வாழவேண்டுமென்றும் விரும்புகிறான். இந்த நல்வாழ்வை அவனுக்கு எது அளிக்கமுடியும் என்று ஆய்ந்தறிந்து அதை அடைய அயராது உழைக்கின்றான். அவன் தேடும் நல்வாழ்வு கானல் நீராகவே காணப்படுகின்றது. இறுதியில் அவன் தேடும் நல்வாழ்வை, அதை அளித்த கொடைவள்ளலை அறிந்து அவர் இட்ட வழியில் செல்வதாலேயே அடைந்து கொள்ளுகிறான். இக் கொடை வள்ளலை அறிய அவனுக்கு உதவுவது எது? அதற்கும் நல் வாழ்வுக்குமுள்ள தொடர்பு என்ன? என்பதை ஈண்டு ஆராய்வோம்.

மனிதன் வரம்பின் எல்லையிலிருந்து வரம்பின்மையை எட்டிப் பார்க்கிறான். வாழ்க்கையாகிய சந்தையிலே ஒரு விலை மதிப்பற்ற பொருளைத் தேடி அலைகின்றான். அவனிடம் அதைப்பெறும் ஆற்றல் இல்லை. மற்றோரின் உதவியை நாடுகிறான். அவர்களும் அவனைப் போலவே தத்தளிப்பதைக் காண்கிறான். அவன் மனதில் எழும் எண்ணங்கள், நிறைவேறா ஆசைகள், இவைகளெல்லாம் அவனைவிட ஓர் உயர்ந்த பெரியவர் ஒருவர் இருக்கிறார் என்ற உண்மையை எடுத்தியம்புகின்றன. அண்ட சராசரங்களை உண்டாக்கி அவற்றிலுள்ளதைச் சிருஷ்டியாகப் படைத்த உத்தமன் யார்? அவனுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பு யாது என்னும் பல பதிலளிக்க முடியாத கேள்விகளுக்குப் பதிலளிப்பது மதமும், மதத்தோடு இரண்டறக் கலந்த ஒருவனது வாழ்க்கையுந் தானென்பது வெள்ளிடை மலை.

இயற்கையின் சக்திகளைக் கண்டு பிடித்து ஒழுங்காக இயக்கி, உன்னத நிலைக்கு உயர்த்தி, இறைவனை—படைப்பின் தலைவனை— இதயத்துள் இருத்தி இறைவனோடு இரண்டறக் கலக்கும் ஆனந்தம் பெற வழிகாட்டுவது சமயம். படைத்தவன் யாரென அறியும் ஆர்வமும் அவரை அடைய விழையும் மனித ஏக்கமும் சமயமாக உருக்கொள்ளுகின்றது. இவ்விதமாக உருவெடுக்கும் சமயம் மனித வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துவிடுகின்றது. எனவே சமயம் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டதாயும் வாழ்க்கை சமயத்தோடு தொடர்பு கொண்டதாயும் இருக்கின்றது.

மனிதனைத் தமது சாயலாகப் படைத்த இறைவன், அவன் தம்மை இறுதியில் அடைந்து இன்புற வேண்டுமென்ற ஒரே இலட்சியத்தோடு அவனைப் படைத்துக் காத்து வருகின்றான். இதை உணர வைப்பவன் இறைவன். உணர்ந்து நடப்பவன் மனிதன்; செயற்படுத்துவது மதம். மனிதன் ஒரு தனிப்பிறவி. அவனின் செயல்களிலும் ஒரு தனித்துவம் உண்டு. அவனது வாழ்க்கை ஒரு குறிக்கோளுடன் தொடர்புடையதாய் இருக்கின்றது. இக் குறிக்கோளை அளிப்பவர் ஒரே ஒருவர்தான். அவர்தான் கடவுள். ஆகவே இக்கடவுள் யாரென்று நாம் அறிவது அவசியம். ஆனால் அவரை மனிதனின் சுயபுத்தியினால் அறிந்து கொள்ளமுடியாது. மறைபொருளாக மனிதனைக் கடந்து நிற்பவரை அவனறிந்து அன்பு செய்ய இறைவழிபாட்டினால் வெளிப்படுத்தியுள்ளார். அன்பின் இறைவன் ஆதித்தாய் தகப்பனுடன் தொடங்கிய இறைவழிபாடு இறைமகனாகிய கிறிஸ்துவில் முற்றுப் பெற்றது. மனிதன் வரலாற்றிலே வாழ்பவன் சமூகத்தின் உறுப்பினன்; பல்வேறு வாழ்க்கை அனுபவங்களுக்கு ஆளாகிறவன். எனவே கடவுளும் மனிதனின் வாழ்க்கை அனுபவத்தில் சமூக வரலாற்று நிகழ்ச்சிகளில் தன்னை இணைத்து வாழ்க்கை வாழ வழி வகுத்துக் காட்டினார். 'சீவியமும் வழியும் நானே' என்று கூறிய கிறிஸ்துவே கிறிஸ்தவ சமயத்தின் நடுநிலையும் மையமுமாயிருக்கிறார். உலகத்துச் சமயங்கள் மனிதன் கடவுளைத் தேடி நாடிச் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வெளிப்பாடுகளே. ஆனால் கிறிஸ்தவமோ மனிதனைத் தேடிக் கடவுள் வந்தாரென உறுதியோடு கூறுகிறது.

சிருஷ்டிப்பின் காரணகர்த்தாவை அறிந்து, நேசித்து, சேவித்து இறுதியில் அவருடன் இன்புற்றிருக்கவே நாம் படைக்கப்பட்டோம். அதனாற்றான் மனிதனின் மனதில் எப்பொழுதும் ஒரு நிறைவேறா ஆசை நிலைகொண்டுள்ளது. மனிதனின் நாளாந்த சீவியம் அறிவினால் விளையும் அன்பின் சேவையாகவும் சேவையில் அன்பாகவும் அமைய வேண்டும். எமது முழுச் சீவியமும் வாழ்வும் ஒரு வழிபாடு. எயக்கும் இறைவனுக்கும், படைக்கப்பட்ட மனிதனுக்கும் படைத்த இறைவனுக்கும் இடையில் இருக்கும் தொடர்பைத் தனிமுறையிலும், சமூகரீதியிலும் எடுத்துக்காட்டும் கலங்கரை விளக்காக இருக்கின்றது சமயம். சமயத்தின் மூலம் இறைவனை வழிபடுகின்றோம். அவ்விறைவன் தன் மகனை நமக்கு வழிகாட்டியாக அனுப்பிவைத்தார். நாம் மேற்கூறியதுபோல் அவர் கிறிஸ்தவ சமயத்தின் முத்தாக நடுநிலையாக இருக்கின்றார். கிறிஸ்து ஓர் இலட்சியவாதியாக வந்தார்; வேறுபட்ட கருத்திற்கும், வெஞ்சினத்திற்கும் அஞ்சாது அஞ்சா நெஞ்சுடன் இறை அரசை நிறுவினார். அத்தோடு நின்றுவிடவில்லை. இறையரசின் குணங்கள் இறைமக்கள் சொல்லிலும் செயலிலும் பிரதிபலிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தும் முகமாகத் தமது போதனையைச் சாதனையால் காட்டினார். மறை போதித்த தத்துவங்களைச் சாதாரண வாழ்வோடிணைத்தார். சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு வாழ்வை மாற்றியமைத்தார். ஆனால் 'சட்டத்தை அழிக்க அல்ல நிறைவேற்றவே வந்தேன்' என்று கூறி மோயீசனுக்குச் சீனாய் மலையில் கடவுள் கொடுத்த பத்துக் கற்பனைகளை 'அன்பு' என்னும் மூன்றெழுத்துச் சொல்லால் முழுமைப்படுத்தினார். 'நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவர் ஒருவரை அன்பு செய்யுங்கள்' என்ற அன்புக் கட்டளையை விடுத்தார்.

மனிதன் இயற்கையிலேயே சமூகப் பண்புடையவன். ஆகவே அவனால் தனித்து வாழமுடியாது. எனவே இறையன்பைப் பிறர் அன்பிலிருந்து பிரிக்கமுடியாது. எமது நாளாந்த சீவியத்தின் நடுநிலை சமயம். சமயத்தின் மூலமாய் இறைவனோடு தொடர்பு கொள்ளுகிறோம். இத் தொடர்பு எம்மை அன்பு, ஐக்கியம், ஒற்றுமை என்னும் நற்பண்புகளுடன் ஏகத்துவமாய் ஒரே குடும்பமாய் சகல சாதி மனிதருடனும் இணைக்கின்றது. எமது வாழ்க்கையில் சகல துறைகளிலும் கல்வி, கலாச்சாரம், அரசியல் பொருளாதாரம் ஆகியனவற்றைச் சமயம் ஊடுருவிப் புனிதப்படுத்துகின்றது. வாழ்க்கையில் தத்துவங்களை உருவாக்க உதவுவது மறைப்படிப்பினை; மனிதன் செய்யும் நற்செயலும் மறை கற்பிக்கும் படிப்பினையின் விளைவுகளேயாகும்; சமயம் வகுத்த வழியில்தான் வாழ்க்கை அமையவேண்டும். கடவுளுக்கும், எமக்கும், அயலானுக்குமிடையே சகோதரத்துவ உறவை ஏற்படுத்த ஏதுவாக இருப்பவை மறை. எமக்களித்திருக்கும் இறைவனின் பத்துக் கட்டளைகள், கிறிஸ்துவின் நற்செய்தி. திருவருட் சாதனங்கள், திருச்சபையின் போதனைகள் ஆதியன. பிறந்தது முதல் இறுதி நாள்வரை வாழ்க்கைக்குப் புதுமெருகூட்டி இறையரசின் குணங்களுடன் புத்தொளி வீச, தியாக அன்பை அடிப்படையாகக் கொண்டு தன்னுயிரை ஈந்து மன்னுயிரை மீட்ட தியாகச் செம்மலின் வாரிசுகளாக்க உறுதுணையாக நிற்பது சமயம்.

நல்வாழ்வின் எல்லையாய், நற்பண்பின் சிகரமாய் அணுவைவிட சக்தி வாய்ந்த தாய் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கும் சமயம், ஒருவனைப் பூவாக, பிஞ்சாக, காயாக, பழமாக உருவாக்கும் சமயம் என்றால் வேண்டாப் பெண்ணாக இன்று மாறி வருவதேன்? சமயம் என்றால் மதிமயக்கும் சக்தி! வேலையற்றோரின் பொழுதுபோக்கு! ஒதுக்கப்பட்டோரின் ஓலக் குரல்! அர்த்தமற்ற வாழ்க்கைநிலைகளின் அர்த்தமென்று தூஷிக்கப்படுவதேன்? காரணம் சமயம் வாழ்வோடிணையாமை தான். இவ்வாறு எண்ணெயும் நீரும்போல் தனித்து நிற்கும் சமயம் அன்றாட வாழ்வின் ஓர் அம்சமாக மாறாமை என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறலாம். கடவுள் மறுப்புக் கொள்கையின் தோற்றத்திற்கு விசுவாசிகளும் பெரும் பொறுப்பாளிகளாக முடியும். ஏனெனில் தங்கள் விசுவாசத்தைக் கற்பதில் எந்த அளவு கவனக் குறைவாய் இருந்தனரோ, கொள்கைகளைத் தவறாக விளங்கினரோ, தம் சமய ஒழுக்க சமூக வாழ்க்கையில் குறைகளைக் கொண்டிருந்தனரோ அந்த அளவுக்கு மறையினுடையவும் கடவுளுடையவும் உண்மையான உருவை மறைத்தனரே அன்றி வெளிக்காட்டவில்லை என்றே கூறவேண்டுமென்று இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் சங்க ஏடுகள் எடுத்தியம்புகின்றன. கிறிஸ்துவின் மலைப்பிரசங்க படிப்பினையின்படி வாழ்க்கை நடாத்திய காந்தியடிகள் 'நான் கிறிஸ்துவை விரும்புகின்றேன்; ஆனால் கிறிஸ்தவர்களை விரும்பவில்லை' என்று கூறினார். காரணம் யாவரும் அறிந்ததே. இன்னும் அறிவுக்குச் சாணை தீட்டி ஆராய்ச்சியைக் கூராக்கி அதை அளித்தவனை ஏற்க மறுக்கும் இருபதாம் நூற்றாண்டு மனிதர் விஞ்ஞானத்தின் போர்வையிலே மெய்ஞ்ஞானத்தை மறந்து விடுகின்றனர். விஞ்ஞான வளர்ச்சி இறை நம்பிக்கையைக் குறைத்து விடுகிறது என்று கூறுவது தவறாகும். உண்மையான விஞ்ஞானி படைப்புப் பொருள்களில் படைப்பாளரின் மாட்சிமையைக் காண்கிறான். 'விண்வெளி இறையுணர்வு துடிக்கும் பேழை' என்று ஐசாக் நியூட்டன் கூறுகிறான். கிறிஸ்து அடிக்கடி பரிந்து பேசிய பரிசேயராய்க் கிறிஸ்தவர்களாய் மாறுவதும் சமயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம். அகத்தில் பணத்தை வழிபட்டுப் புறச் சடங்குகளில் இறைவனை வழிபடும் நல்ல கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படும் ஒரு சாராருமுண்டு. நானுண்டு என்குடும்பமுண்டு என்று சமூகப் பிரச்சினைகளில் ஈடுபடாமல் வாழும் சுயநலவாதக் கிறிஸ்தவர்களுமிருக்கத்தான் செய்கிறார்கள். அமெரிக்காவில் நாட்டை அவமதிக்கும் ஹிப்பிசம் பரவக் காரணம் என்ன? பணத்தைக் கடவுளாகக் கொண்டு உலகப் பெருங்குடியின் துயர் உணராது தன்னலம் வளர்த்த சமுதாயம் தனக்கு வரவழைத்துக் கொண்ட பிணியே இது.

அறிவியலும் தொழில் நுட்பக்கலையும் கொண்டு வந்த வரலாறு காணாத பொருளாதார வளர்ச்சி கிறிஸ்தவ விசுவாசத்துக்குச் சவால் விடுகின்றது. இதைக் காலத்தின் கோளாறு என்று கூறி வாளாவிருக்க முடியாது. கிறிஸ்துவின் படிப்பினைகளைக் காலத்தில் குறிகளையுணர்ந்து செயல்படுத்துவது ஒவ்வொரு கிறிஸ்தவனுடையவும் தலையாய கடமையாகும். இவ்வுலகத்துப் பொருள்கள் தரக்கூடிய நியாயமான புலனுணர்வுகளை அசட்டை செய்ய வேண்டுமென்று கிறிஸ்தவமறை போதிக்கவில்லை. பொருள்களில் இன்பங்காணவல்ல மனிதன் அவற்றைப் புனிதப்படுத்தி அவற்றின் வாயிலாகப் பரம்பொருளின் பேரின்பம் காண விழையும்போதே நிறைவு அடைவான். இதுவே கிறிஸ்தவ மறையின் போதனை. மறையோடிணைந்த திருவழிபாடு வாழ்க்கையோடு சங்கமமாக வேண்டும். வழிபாட்டின் விழைவு வாழ்க்கையில் மாற்றத்தை உண்டுபண்ண வேண்டும். நற்செய்தி ஒளியில் வாழ்க்கை அமைய வேண்டும். படிக்காத பாமரருக்கும் பகுத்தறிவற்ற மூடருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையும் ஒரு திறந்த நற்செய்தி ஏடாக விளங்க வேண்டும். ஆதிக் கிறிஸ்தவர்களைத் தரம் பிரித்துக் காட்டிய 'பிறர் அன்பு' அணையாத் தீபம்போல் ஒளி வீச வேண்டும்.

ஈற்றில் நல்வாழ்வு வாழத்துடிக்கும் மனிதனின் வாழ்வு சமயமாகவும், சமயம் வாழ்வாகவும் பாலுடன் நீர் கலந்தாற் போல் இணைவதே இறைவனின் திட்டம். இதை உணர்ந்து செயற்படுவது ஒவ்வொரு கிறிஸ்தவனுடையவும் கடமையாகும்.

— சிஸ்ரர் மேரி விவியன்
இரண்டாம் வருடம்

# இலக்கியம் என்றால்.......

இலக்கியம் என்றால் குறிக்கோள், இலட்சியம் என்பர் ஒருசிலர். மனிதவாழ்வில் கண்ட உண்மை அனுபவங்களை இனிய சொற்களால் எடுத்துரைப்பதே இலக்கியம் என்பர் இன்னொருசாரார். புலவன் அல்லது எழுத்தாளன் தான் கண்டறிந்த உண்மைகளைச் சொல்லோவிய மாக்குகின்றான். அக்கலையில் ஒருகால் ஈடுபட்டார் மனத்தை எந்தநேரமும் இன்ப அனுபவத்துள்ளாக்குவது இலக்கியம், என்பது சிலரது கருத்து. இலக்கியம் என்பது சிறந்த கருத்துக்களின் தொகுப்பு என்றும், படிப்போர் மனத்தினை விரிவாக்கிக் குறைகளைப் போக்கி நல்வழிப்படுத்தும் இயல்புள்ளதே இலக்கியமெனப்படும் என்றும் வெவ்வேறறிஞர்கள் இலக்கியத்துக்கு வெவ்வேறு வரைவிலக்கணங்களும் கூறுகின்றனர்.

மேலே காட்டப்பட்ட வரைவிலக்கணங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளத்தக்க மேலான கருத்துக்களே. இன்னும் சற்று ஆழ்ந்து நோக்குவோமேயானால் இலக்கியம் என்பது ஒரு படைப்பு எனலாம். ஆம் அஃது பிரமனுடைய ஆக்கற்றொழிலை ஒத்த தன்மையுடையது; பிரமன் படைக்கும் நிலையற்ற உடம்புகள் அழிந்தொழிகின்றன. ஆனால் கவிஞர்கள் படைக்கும் இலக்கியங்கள் என்றும் அழியா உடலும் உயிரும் உடையனவாய் இருக்கின்றன. இதனையே குமரகுருபரர்:

"கலைமகள் வாழ்க்கை முகத்ததெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் — மலரவன் செய்
வெற்றுடம்பு மாய்வதுபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு"

என நயம்படக் கூறுகின்றார்.

வாழ்க்கைக்கு உடம்பும் உயிரும் முக்கியம். உயிருள்ள உடலே இயங்கும். இது போன்றே இலக்கியத்திற்கும் உடலும் உயிரும் அவசியம். பொருளுள்ள இலக்கியங்களே வழங்கும், நின்று நிலைபெறும். உயிரற்றவைகள் பிணங்கள். இப்பெயர் கொண்டே அழைக்கலாம் பொருளற்ற இலக்கியங்களை; அவை காலவெள்ளத்துட் கரந்து இருந்த இடமும் தெரியாமல் மறைந்து போய் விடும். இலக்கியத்தின் யாக்கை சொற்கள். ஆவி அதன் பொருள்; இன்னும் விரித்துக் கூறின் உணர்ச்சியை நல்கும் திறனே உயிர் எனவும், நடைத்திறனே உடல் என்றும் கூறிவிடலாம். கழிந்த கால வெள்ளத்தை ஒருமுறை திரும்பி நின்று நோக்கினால் வெகுதொலைவில் ஒரு கம்பன் தோற்றுகின்றான். இன்னும் வெகுதொலைவில் ஒரு திருவள்ளுவர் தோற்றுகிறார்; இவை போன்று அமரத்துவம் பெற்றவை ஒரு சிலவாகவே காணப்படுகின்றன. காலவெள்ளத்துட் கரந்தொழிந்தவை எத்தனை எத்தனையோ;

உயிருள்ள இலக்கியங்களே இன்று தலைகாட்டுகின்றன. வெள்ளத்தால் அழியாமலும் வெந்தழலால் வேகாமலும் காலத்தை வென்று நின்று நிலவுகின்றன; இலக்கியத்துக்கு உயிரே பிரதானம். விஞ்ஞானி ஒருவனின் பரிசோதனை ஒன்றை எடுத்துக்கொள்வோம். உயிரோடு கூடிய உடலைப் பிளக்கிறான். அவ்வுடலுட் குடியிருந்த நுண்ணிய வாயுக்கூட்டங்களை யெல்லாம் கண்ணடிக் கூண்டுகளில் அடைத்து வைத்தல் அவனால் முடியும். ஆனால் உடலை இயக்கும் உயிரை அவனால் பற்றமுடிவதில்லை; இது காரணமாக உடலுள் உயிரென்ற பண்டம் ஒன்று இல்லை என்று கூடச் சொல்வதற்குச் சிலர் முன்வரலாம். ஆனால் இலக்கியங்களுக்கு உயிர் இல்லை என்று யாரும் சொல்வதற்கில்லை. இலக்கணம், அகராதி, உரைகள், விமர்சனங்கள் என்று சொல்லப்படும் ஆயுதங்கள் கவிதைகளைப் பிளந்து உயிரைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாயுதங்களால் இலக்கியங்கள் சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றன. ஆயின் அதன் உயிரைப் பற்றும் முயற்சி எளிதிற் சித்திப்பதாயில்லை;

இனி இலக்கியம் வாழ்க்கையோடு எத்தகைய உறவுடன் அமைந்து இணைகிறது எனச் சிறிது நோக்குவோம். இலக்கிய வளர்ச்சியிற் கருத்துள்ள சிலர் இலக்கிய வழக்கு அப்படியே மாறாதிருக்கவேண்டும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குக் காலம் புதிய கருத்துக்கள் அவைகளுட் புகக்கூடாது எனக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இவர்கள் இலக்கியத்தின் இயல்பை அறியாதவர்கள் என்றே சொல்லவேண்டும். இன்றைய மக்கள் வாழ்க்கைக்கும், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த மக்கள் வாழ்க்கைக்கும் பலவகையான மாறுதல்கள் உள. மக்கள் சமுதாயம் எப்படி வளர்ச்சியடைந்து வருகின்றதோ அதுபோல இலக்கியங்களும் வளர்ச்சியடைந்து வருகின்றன; மக்கள் முன்னேற்றத்துக்குத் தக்கவாறு அவர்கள் வாழ்க்கையோடு இணைந்து வருவதே இலக்கியம். சுருங்கக் கூறின் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதே இலக்கியம் என்ருல் அது மிகையாகாது. மக்கள் அனைவருக்கும் பயன்படத்தக்க அழகு, உண்மை, நன்மை என்னும் நற்பண்புகளை மனிதன் ஆக்கிக்கொள்ள முடியும். ஆயகலைகள் அறுபத்துநான்கு உண்டல்லவா? இவற்றை அறிவுக்கலை, இன்பக்கலை, தொழிற்கலை என்று முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றனர் அறிஞர். அறிவுக்கலையில் அறிவியலும், இன்பக்கலையில் இன்பமும், தொழிற்கலையில் ஆற்றலும் முதலிடம் பெற்று விளங்குகின்றன. இக்கலைகள் வாழ்க்கையில் இருந்து தோன்றினவெனினும், வாழ்க்கையில் துன்பம் பயப்பவற்றையும் இன்பம் பயக்கச் செய்கின்றன இலக்கியங்கள். இவ்வுலகில் அனுபவிக்க முடியாதவற்றை இக் கலையுலகில் அனுபவிக்கலாம். ஒருவன் பூரண வளர்ச்சியடைய வேண்டுமாயின் வாழ்க்கையில் அவனது அடிப்படை மெய்ப்பாட்டுத் தேவைகள் யாவும் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். வெளிப்படுத்தற்குப் போதிய வாய்ப்பின்றி மக்களுடைய உள்ளத்தில் அடங்கிக்கிடக்கும் உணர்ச்சிகள் பொங்கி அமைதியடைவதற்கு இக்கலைகள் துணைசெய்கின்றன. வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், உழைத்து உழைத்து ஓய்ந்த மக்களுக்கு ஓய்வு நேரத்தில் உவகையூட்டவும் வல்லன இலக்கியங்கள். துன்பச் சுமையில் உழன்று வருந்திக் கிடக்கும் மக்களையுங்கூட கடைத்தேறவும் இன்பங்காணவும் செய்கின்றன இலக்கியங்கள்.

இன்பக்கலைகள் யாவற்றிலும் மேம்பட்டது இசையும் இலக்கியமுமே. இவை மட்டுமே மனிதனைப் பிற உயிர்களினின்றும் பிரித்து பலவாற்ருனும் உயர்த்தும் மொழியுடன் தொடர்புடையது. எம் மூதாதையர் வாழ்ந்த அக்காலத்திலும் விஞ்ஞான ஆதிக்கம் நடைபெறும் இக்காலத்திலும் மக்கள் முன்னேற்றத்துடன் ஒத்து வளரும் ஆற்றல் இலக்கியத்திற்கு மாத்திரமே உண்டு: இது மக்கள் உணர்ச்சிகளை வீறிட்டெழச் செய்வதுடன் பேருண்மைகளையும் காணச் செய்கிறது. உலகியல் வாழ்க்கையுள் வேண்டப்படுவனவற்றுள் நட்பும் ஒன்ருகும். இதனையும்கூட நாம் இலக்கியத்தின் மூலம் பெறலாம்.

"நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு"

என்கிருர் பொய்யாமொழி; இதனையே 'மாண்டே" என்ற அறிஞர், "நான் விரும்பாத நண்பர்களைப் பிரிந்திருக்க நூல்கள் உதவி செய்கின்றன. பயிலுந்தோறும் அவை பண்புடைய பெருமக்களின் தொடர்பைப்போல் பேரின்பம் பயக்கின்றன. பண்புடையாளர் தொடர்பை நல்கி விண்ணுலக இன்பத்தைத் தருகின்றன. இதன் இன்பத்தைச் சுவைப்பதால் உள்ளத்தில் என்றும் நீங்காத நிறைவும், மகிழ்ச்சியும் உண்டாகின்றது" என ஓரிடத்தில் கூறுகின்ருர்.

மேலும், இன்றைய கல்வியுலகில் இலக்கியபாடம் பிரதான அம்சங்களுள் ஒன்ருகக் கருதப்பட்டு வருகின்றது. இலக்கியம் ஒவ்வொன்றும் பள்ளிக்கூடப் பாடப் புத்தகமாகப் பயன்படுமெனப் படைக்கப்படவில்லை. அரசனது அவைக்களத்திலும் ஆண்டவன் சந்நிதானத்திலும் சில நடைமுறைத் தேவைகள் குறித்துப்பாடப்பெற்ற நூல்கள் இன்று பாடநூற் பகுதிகளாக வந்துவிட்டன. தேர்விற் சித்தியடைவதற்காக இலக்கியத்தைக் கற்பிக்கும் அதே வேளையில் அக்கல்வி நிலைத்த பயனைத் தரக்கூடியதாக அமையுமாஞல் அது போற்றத்தக்கதாகும். சான்ருேர்களால் எழுதப்பட்ட நூல்களெனக் கருதப்படும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும், பதினெண் மேற்கணக்கு நூல்களாகிய எட்டுத் தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துப்பாட்டுப் போன்ற நூல்களும் தமிழர்களுக்கு வரலாற்று நூல்களாக, இலக்கியங்களாக, அறநூல்களாக அமைந்திருந்தன என்பதனை நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது. இன்றுவரை உலகமெங்கும் பல்வேறு மொழிகளிலும் இலக்கியக் கல்விக்கு மதிப்பு இருந்தே வருகின்றது. இன்று தொழிலபிவிருத்திமிக்க, விஞ்ஞான கலாச்சாரத்தில் தோய்ந்துள்ள மேற்கத்திய நாடுகளிற்கூட இலக்கியக் கல்விக்கு முன் இருந்ததைவிடத் தேவை அதிகமாக உள்ளதென அறிஞர்கள் கூறுகின்றனர்.

பல நூற்றாண்டு காலமாக இலக்கியக் கல்வி மனிதனுக்கு இன்றியமையாத சில குறிக்கோள்களையும் மதிப்பீடுகளையும் அளித்து வந்துள்ளது. உலகியலைப் பற்றியும் மக்கள் வாழ்க்கையைப் பற்றியும் விளக்கத்தை உண்டாக்குகின்றது. இளங்கோவடிகளின் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் எம் சிந்தை குளிரும்படியாக

*"அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாவதும்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்*

உணர்த்துகின்றது.

இதுபோன்றே சங்ககாலக் கணியன் பூங்குன்றனார் தமது புறநானூற்றுப் பாடல்களில்

*"பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை இகழ்தல் அதினினும் இலமே"*

என நேர்மையை, நீதியை நிலைநாட்டுவது போல் கூறுகின்றார். இவற்றைவிட இலக்கிய வரிசையில் இடம் பெற்ற திருக்குறள், நாலடியார் போன்ற நீதிநூல்கள் நன்றாக எண்ணி ஆராய்ந்து பொறுமையுடன் எழுதப்பட்டவை, என்பது அவற்றுட் புகின் இனிது புலனாகும். மேலும்,

*"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை"*

அறிஞர்கள் தொகுத்துக் காட்டிய அறங்களெல்லாவற்றுள்ளும் தலையாயதொன்று, உள்ள உணவை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணுதலாகும், என வள்ளுவர் அன்று வலியுறுத்தியுள்ளார். ஏன், சிந்தை அள்ளும் செந்தமிழ் வல்லான் புரட்சிக்கவி பாரதி தனது மொழிவெறி இலக்கிய வெறிகொண்டு "ஓடி விளையாடு பாப்பா" என்ற பாப்பாப் பாட்டு முதல் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற பாடல்வரை எத்தனை ரகமான உணர்ச்சிமிக்க கற்பனைக் கருவூலங்களை எமக்கு அளித்துள்ளார்.

மேற்கூறிய உதாரணங்கள் மூலம் வாழ்க்கைக்கும் தத்துவத்துக்கும் உள்ள தொடர்பை விளக்குவனவாக இலக்கியங்கள் அமைந்திருக்கின்றன என்பதனை நாம் உணரலாம். மேனாட்டிலே இன்று இலக்கியக் கல்வியின் புதிய வளர்ச்சியிலே உளவியலும் பெரும்பங்கு வகித்து வருகின்றது என அறிஞர் கூறுகின்றனர்.

உள்ளத்தை உறுத்தும் களங்கம், கலக்கம் ஆகியவற்றை விரட்டிக் கலைக்க வல்லன இலக்கியங்கள். இவை மக்களின் தனித்தன்மையை விருத்தியடையச் செய்கின்றன. இலக்கியத்தைக் கற்பதனால் முருகுணர்ச்சி பெருகுகின்றது. அழகினை அகத்திலும் புறத்திலும் காணும் ஆற்றல் உண்டாகின்றது. அழகே உண்மை; உண்மையே அழகு என்னும் பெற்றியை உணரவைக்கிறது இலக்கியம். இலக்கிய நுகர்ச்சியால் உள்ளமானது சான்றோர்க்குரிய அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய நல்லியல்புகளின் கொள்கலமாக ஆகிறது. இலக்கியம் மனிதனின் மனத்தை விரிவடையச்செய்து திருத்தித் தூய்மை செய்கிறது. சுருங்கக் கூறின் மனிதனின் சீரிய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அனைத்தையும் இலக்கியம் அளித்து வருகிறதெனலாம்.

திருமதி சௌ. விநாயகமூர்த்தி
2-ம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் வகுப்பில் வாசிப்புப் பயிற்றல்

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது ஆன்றோர் வாக்கு. கள்ளங் கபடமற்ற பளிங்கு போன்ற நிலையிற் பாலருள்ளம் அமைந்திருக்கும். மாணவரின் சூழலுக்கும் வளருந் தன்மைக்கும் ஏற்ப பலதரப்பட்ட மனநிலையில் மாணவர்கள் இருப்பர். இவற்றை மனதிற்கொண்டே ஓர் ஆசிரியர் கல்வி பயிற்றவேண்டும். பாலர் வகுப்பில் கல்வி பயிற்றும் ஆசிரியன் காலத்துக்கு ஏற்ற முறைகளைக் கையாண்டு பயிற்றுதல் சிறப்புடைய தொன்றாகும். இன்றைய கல்வித்திட்டத்தில் தாய் மொழி முக்கிய இடம் பெறுகின்றது. கல்வியின் அத்திவாரம் தாய் மொழிப்படிப்பு. இந்தத் தாய்மொழியிலே வாய்மொழிப் பயிற்சிக்கு அடுத்தபடி வாசிப்பு எனலாம். வரிவடிவச் சொற்கள் ஒலிவடிவில் வந்து உணர்வுடன் கலத்தலால் வாசிப்பு முக்கியமானதாக அமைகின்றது.

இதிற் சொற்களைக் காணுதல், சொற்களை உச்சரித்தல், சொற் பொருளுணர்தல், என முக்கூறுகள் உண்டு. இதற்குக் கண் நகர்ச்சி, கண் பாய்ச்சல், கண்பார்வைப் பேறு என்பன ஒருங்கே வளர வேண்டும். இதனுற் கருத்துணர்தல், சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல், நினைவாற்றலை வளர்த்தல், உரத்து வாசித்தற் பயிற்சி என்பன உண்டாகின்றன. வாசிப்புப் பாடம் பேச்சுத்திறன், எழுத்துத்திறன் என்பவற்றையும் மாணவர்களிடத்தே வளர்க்கின்றது என்பதனை ஆசிரியர் மறந்துவிடலாகாது. ஒரு நல்ல குடிமகனுக்குத் தெளிவான சிந்தனை, தெளிவான பேச்சு, தெளிவான எழுத்து ஆகிய திறன்கள் இன்றியமையாதனவாகும். இதனாலன்றோ வள்ளுவப் பெருந்தகையும்

"எண் பொருள ஆகச் செலச் சொல்லித்
தான் பிறர்வாய்
நுண் பொருள் காண்பதறிவு"

என்று கூறியுள்ளார். வாசிப்பு ஒரு மனிதனைப் பூரண மனிதனுக்குகின்றது. எத்துறை அறிவையும் பெற வாசிப்பு அடிப்படையாக அமைகிறது. பாலர்கள் வாசிப்பிற் பூரணத்துவம் அடைய அவர்களின் சொற்களஞ்சியம் பெருகவேண்டும். சுற்றுப் புறங்களையும், இயற்கை நிகழ்ச்சிகளையும் நேரிற் பார்த்துப் போதுமான பட்டறிவு (அனுபவம்) பெற்றவர்களாய் இருக்கவேண்டும். குழந்தைகள் தம் பட்டறிவிற் பார்த்தும், கேட்டும், துய்த்தும் வரும் சொற்களை முதலிற் படிக்கவேண்டும். குழந்தைகள் பாடசாலைக்கு வரும்பொழுது அவர்களின் சொற்களஞ்சியம் பெருகி இருக்கவேண்டும்.

அதேநேரம் ஆசிரியர் முதல் முதல் தம்மிடம் வரும் குழந்தைகளை வீட்டிலும், பாடசாலைகளிலும், அவர்கள் கண்ட பொருள்கள் பற்றியும், நிகழ்ச்சிகள் பற்றியும் வினவி விடை பெறுதல் வேண்டும். சக மாணவருடன் கலந்துரையாடவும், விளையாடவும் விடவேண்டும். ஆசிரியர் அவர்களை அவதானித்தபின்னர் மெல்ல மெல்லத் தானும் அவர்களுடன் கலந்து கொள்ளலாம். சுமுகமாக உரையாடிய பின்பே மாணவர் வாசிப்பதற்கு ஆயத்தமாயிருக்கும் பொழுது வாசிப்பைத் தொடங்க வேண்டும். இது சிறந்த ஒரு முறை. இன்னும் வாசிப்புப் பயிற்றலிற் பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

அவை :

1. எழுத்து முறை
2. சொல் முறை
3. கண்டு சொல்லும் முறை
4. சொற்றொடர் முறை
5. கதை முறை என்பன.

எழுத்து முறை மிகப்பழைய முறையாகும். போனீஷியர், கிரேக்கர், உரோமர் என்போர் இந்தமுறையைக் கையாண்டனர். மாணவர் எழுத்தையறிந்து அதன் பின் ஓரெழுத்துச்சொல், ஈரெழுத்துச் சொல், மூன்றெழுத்துச் சொல் என்று வளர்ந்து அதன்பின் சொற்றொடர்களை அறியச்செய்தல், இது கடினமான முறை. அதிவேகமாக முன்னேறிச்செல்லும் இக்காலத்துக்கு இந்தமுறை உகந்ததன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தது சொல்முறை. நானூறு ஆண்டுகளுக்கு முன்னதாகக் காமெனியஸ் என்பார் இந்தமுறையைக் கண்டறிந்ததாகக் கூறுவர். இது உளவியல் அடிப்படையில் அமைந்த ஒரு முறை எனலாம். குழந்தை பேசத் தொடங்கும் பொழுது முழுச் சொற்களாகவே பேசத்தொடங்குகிறது. ஒரு மிருகத்தை நாம் காணும் பொழுது அதன் உடல் வேறாகவும், தலை வேறாகவும் தெரிவதில்லை. ஒரு முழு உருவமாகவே காட்சியளிக்கின்றது. இது போலவே சொற்களை மாணவர்கள் முழுமையாகக் கண்டு அவை பொருளை உணர்த்தி நிற்பதை அறிய வேண்டும். தனிப்பட்ட பொருள் உணர்த்தும் முழுச் சொல்லை எளிதாக மாணவர் கற்றுக்கொள்ள முடியும். பிறந்த குழந்தை கூட "அம்மா" என்று அழுகிறது. எனவே அம்மா என்ற சொல்லைக்காட்டி அதன்பின் அ — ம் — மா எனத் தனித்தனி எழுத்துக்களாகப் பிரித்துக் காட்டலாம். ஓவியத்தைக் கொண்டு பொருள் அறிதல் போலச் சொல்லோவியத்தைக் கொண்டு பொருளுணரச் செய்யலாம். சொற்களை எழுத்துக்கூட்டி உச்சரிப்பதாலும், பார்க்காமல் எழுதும் பொழுதும், முழுமையாகச் சொற்களைப் பன்முறை நோக்குவதனாலும் மாணவர் பிழையின்றி வாசிக்க, எழுதப் பயின்று கொள்வர். ஆகவே இந்தமுறை எந்தக்காலத்துக்கும் எந்தச் சூழலுக்கும் பொருத்தமான ஒரு முறை எனலாம்.

கண்டு சொல்லும் முறை: சொற்களையோ சொற்றொடர்களையோ முழுமையாக உச்சரித்துப் படித்தலாகும். இந்த முறையினால் முழுச்சொற்கள் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யப்படுகிறது. சொல் முறையை இந்த முறையுடன் இணைப்பதனாற் கூடிய பயனைப் பெறலாம்.

சொற்றொடர் முறை: 6 வயது மாணவனுக்கு ஒரு சிறந்த முறை. அவன் பல சொற்றொடர்களைப் பேசுவான். உதாரணமாக "நான் வழியில் நாயைக்கண்டேன்" என்றோ, "அம்மா அப்பம் தா" என்றோ இந்தப்பருவத்து மாணவன் பேசும் ஆற்றல் பெற்றிருப்பான். சொற்றொடர்களை அறிந்த மாணவன் பின் சொற்களையும் அச்சொற்களில் உள்ள எழுத்துக்களையும் கற்கிறான். சொற்றொடரே மொழியின் முக்கிய உறுப்பு. எனவே ஒரு சிறிய கதையைச் சிறிய சொற்றொடர்களால் ஆக்கிக் கற்பித்தால் அஃது உளவியலுக்கும், குழந்தையின் இயல்புக்கும் ஏற்றதாய் அமைவதோடு நிறைந்த பயனையும் தரும். இதுபோல மாணவர் அறிந்த பொருள்கள்பற்றிச் சொற்றொடர்களாக்கிப் படிப்பிக்கலாம். இத்துடன் 'கதவைத்திற', 'யன்னல் மூடு', 'கால்கழுவு', 'வரிசையாகப்போ' என்பன போன்ற கட்டளைச் சொற்களைப் பெரிய எழுத்துக்களில் எழுதித் தொங்கவிட்டு மாணவருக்கு அப்பியாசப் படுத்தலாம். இந்த முறையைத் திட்டமாக்கி அச்சிடப்பட்ட புத்தகங்கள் கூடிய பயனைக் கொடுக்கும். இந்த முறையைக் கைக்கொண்டால் ஆண்டின் இறுதிக்குள் முதல் வகுப்புக் குழந்தைகள் கற்க வேண்டிய சொற்களை எல்லாம் நன்கு கற்றுவிடுவர்.

கதை முறையைச் சொற்றொடர் முறையின் விரிவு என்றும் கூறலாம். பாலர் பருவத்து மாணவர் கதை கேட்பதில் விருப்பமுடையர். அவர்களுக்கு ஒரு கதையைப் பல சொற்றொடர்களாக அமைத்துத் தொடர்ச்சியாகக் கற்பிக்கலாம். கதையை அறிந்த மாணவர் சொற்றொடர்களை அறிந்து கற்பர். பின் சொற்களை அறிய முயல்வர். இந்தக்கதை முறை என்பது சொற்றொடர்முறை, சொல்முறை, எழுத்துமுறை ஆகியவற்றை உறுப்புகளாகக் கொண்டது. இந்தமுறை குழந்தையின் ஆவலைத்தூண்டி வாய்மொழிப்பயிற்சிக்கும் சிறந்த வாய்ப்புக்களைத் தருகின்றது. எல்லா முறைகளினதும் நல்ல கூறுகளைத் தொகுத்ததொரு கலவை முறையே சிறந்த முறையாகும். பட்டறிவு கைவரப்பட்ட ஆசிரியன் நல்ல முறைகளைத் தக்க அளவில் சேர்த்துக் குழந்தையின் மனநிலைக்கும் சூழலுக்கும் ஏற்ப கையாண்டு சிறந்த பயனை அடைவான்.

வாசிப்புப்பாடம் கற்பதற்கு உதவியாகச் சொல்லட்டைகள் படங்கள் வேண்டிய இடத்துப் படங்கள் அமைந்த வாசிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புப்புத்தகங்கள் என்பன மாணவரின் ஆற்றலுக்குத் தக்கபடி உபயோகித்தும் நல்ல பயனே அடையலாம்.

அட்டைகள், மின் அட்டை, நிழலட்டை, கட்டளை அட்டை, தனிப்பயிற்சி அட்டை எனப் பலவகைப்படும். தபாற்பயிற்சிமுறை ஒரு விளையாட்டாகவே பயன்பட்டு விடும். கதைப் படங்களுடன் சிறிய சொற்றொடர்களும் அமையலாம். படங்கள் அமைந்த புத்தகங்கள் பலதரப்பட்டனவாக அமையின் மாணவர் வாசிப்புப் பாடத்தில் மிகத் திறமையடைவர். இந்த முறைகள் பின் தங்கிய மாணவருக்கு மிக ஏற்ற ஒரு முறையெனினும் மிகையாகாது.

இந்த வாசிப்புக்குத் தடையாயும் பின் தங்குவதற்கும் காரணங்கள் பலவுள. அவை அறிதிறன் குறைவாக இருத்தல், மாணவர் வகுப்பிற் தொகையாக இருத்தல், உடல்நலக் கோளாறுகள் இருத்தல். இடக்கண், இடக்கைச் செயற்பாடுகள் இருத்தல், பருவத்துக்குமுன் வாசிப்புப் பயிற்சி கொடுத்தல், மனக்குறைபாடு, மாணவருடன் மாணவர் கலந்துரையாடாமை என்பனவாகும்.

வாசிப்புமுறை மேனிலையடைய நல்ல நூல்களையும் அவரவர் தேவைக்கேற்ப ஆற்றலுக்கேற்ப புத்தகங்கள் கொடுப்பதையும் மேற்கொள்ள வேண்டும்.

திருமதி பா. சேதுபதி,
இரண்டாம் வருடம்.

---

"ஆடம்பரமாக ஆடையாபரணம் அணிவது, கொலைக்குரிய ஆயுதம் படைத்திருப்பது, மிகைபட உண்பது, பெருமிதமாகப் பொருள் தேடுவது ஆகிய இவை யாவும் அநாகரிகமான திருட்டு."

— ஸ்ரீ இராம கிருஷ்ணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Flash Cards as an aid for Teaching English

In the schools, in most of the class-rooms, there is a scant return for the long hours of hard work put in by the teacher. Why is it so ? It is so because very often the teacher relies too much on words. Being the learners of a second language, the pupils have many obstacles to overcome. They are unable to respond satisfactorily without recourse to the mother-tongue, and learning becomes a painful task.

In order to lessen the burden of the task of learning and to make learning easy and interesting, some valuable aids can be used by the teacher. The audio visual aids when properly planned and constructed, help not only to improve the effectiveness of learning but also create a good learning situation, which will ensure greater student participation.

Of the available visual aids, the most popular and the most widely used aids are the flash cards. Flash cards are long wide strips of white or coloured paper or card board on which words and sentences are printed. They can be grouped into various types. The main types are the picture cards, word cards, sentence cards and matching cards. The above types of flash cards can be used for speech, reading and writing lessons.

Now let us see the types of cards, that can be used. Picture cards consist of pictures only and are useful for vocabulary building purposes. They can be flashed in front of the children and the children can be asked to identify the pictures one by one. Some of the picture cards are shown below.



Ordinary postcards can be used on which the cut out pictures of animals, birds, flowers, mode of transport etc. can be pasted. These pictures can be used to illustrate the vocabulary in the text book that is used. It is also advisable to write the word illustrated on the back of the card so that it can be used as a word card also. Besides these, some cards can be made with the pictures and the words denoting the pictures, can be printed against them. Some of such types are seen over leaf.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Cat



Dog



Cow

The sentence cards on which simple sentences or structures are printed are also valuable cards. If the teachers' aim is to teach a few commands to her pupils, she can make use of the sentence cards in which the commands are printed. Flashing of the cards can be done by the students too.

| Stand up | Clap your hands | Sit down | Kneel down |
|---|---|---|---|

A good and able teacher knows how to prepare these cards. When flash cards are made, the strips of papers cut out, should be uniform in width. The edges should be neatly trimmed and the outline should be neatly done. The letters printed on the cards, must be uniform in size. They should be formed well without the unnecessary curves and lines spacing between letters and words is another important feature that should be looked into. A teacher must have in mind that unfinished shabby pieces of work used by her, will not speak well about her.

Before using the flash cards, the teacher should induce the right attitude in the class by explaining to the children what exactly they are going to learn and how the flash cards are going to help them. Then the teacher holds the card at the ends and raises it, so that all the pupils in the class can see what is written or drawn in the card. After half a minute or so, this flash card is withdrawn and another card is flashed.

Besides this method, the teacher can think of other methods too. The cards can be flashed on the flash board which can be turned round. To turn the flash board, the teacher can either use her hand or if possible, it can be turned by a simple mechanism behind it. In the absence of a flash board, a flannel board will be a useful substitute.

Flashing of cards is done quickly and it therefore warrants a quick interpretation of a thing flashed. Thus, when the flash cards are used effectively, the children learn to be sharp and alert. They learn to grasp quickly, recognise and read or speak quickly. The child is made to understand that she cannot allow her mind to wander even for a single second, while the card is being flashed, one after the other.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The use of flash cards gives a broad scope for students' participation in the course of learning. The class can be devided into small groups and the leaders of the groups can flash the cards while the rest of the pupils in the groups can read, or speak or write. Flashing of cards and quick recognition of what is being flashed can be done on a competitive basis also.

The eye is said to be a more faithful servant than the ear and the flash cards enable the eye and the ear to make a combined effort in learning the language, and whatever that is learnt thus, is retained in memory for a long time. Forgetting will not take place quickly when learning is done with the flash cards. A teacher may have a number of flash cards, but if she cannot handle them effectively, very little can be achieved. The success of the lesson depends on the effective use of these cards and the humanity of the teacher.

Let us conclude with "Two little cheers" for the flash cards as a teaching device and emphasise the fact that they should be effectively handled. No matter how valuable the flash cards, it is the comradely attitude of the teacher and the effective handling of the aids in the class room that will transcend these materials. Let us therefore receive the third, and the most important "One Big cheer" for the teacher herself.

**Mrs. U. Sivapragasam**
**"Final Year X"**

" Language is a limitation of the truth which can only be represented by life."

**-Mahatma Gandhi-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடியினர் எனப் பாராட்டப்படும் தமிழர் தம் மொழியாகிய தமிழின் தொன்மையையும் தோற்றத்தையும் அறிந்து கொள்வது இலகுவான காரியம் அன்று. இதனைற்றான் கல்வியில் வல்ல கம்பனும் "என்று முளதென்றமிழ்" என இயம்பி மகிழ்ந்தார். ஆரம்பகாலம் முதல் இற்றைக்காலம் வரை மொழியின் தோற்றத்தின் அடிப்படையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆரம்பகாலத்தை அறிய அகத்தியம், தொல்காப்பியம் இருந்தது போல இன்று மொழியியல் ஆய்வு முக்கியம் பெறுகின்றது.

இத்தாலி மொழியைத் தாந்தே என்னும் கவிஞரும், ஆங்கில மொழியைச் சாஸர் என்னும் அறிஞரும், ஜேர்மன் மொழியை லூதர் என்பவரும், டச்சுமொழியை கிறிஸ்தியென் பெடர்சன் என்னும் பெரியாரும் உண்டாக்கி வளர்த்து வந்தனர் என்று பழங்கால ஐரோப்பியர் நம்பி வந்தனர். இவ்வாறே வடமொழியைப் பாணினிக்கும், தென்மொழியை அகத்தியருக்கும் சிவபிரான் கற்பித்தார் என்று பழங்காலத் தமிழர் நம்பினர். ஆனாலும் மொழியானது மக்களது உள்ளுணர்விலிருந்து தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ச்சி பெற்று வரும் ஒரு புனிதக்கலை எனபதே இன்றைய மொழி வல்லுனரின் துணிபாகும்.

மக்கள் கூடிவாழும் இயல்புடையவர்களாதலின் அவர்கள் அடிக்கடி தங்கள் கருத்துக்களை ஒருவருக்கொருவர் வெளியிட்டுக் கொள்வது அவசியமாயிற்று. ஆகவே ஆதியில் மனிதர் கை, வாய் முதலிய உறுப்புக்களின் சைகைகள் மூலம் தமது எண்ணக் கருத்துக்களை வெளியிட்டனர். இதை அவர்களுடைய இயற்கை மொழியென அறிஞர் கூறுவர். இவ்வியற்கை மொழி முதலிற் காட்சியளவில் நின்று பின்னர் கேள்வியளவிலும் பரவிற்று.

குழந்தை தொடக்க நிலையில் கைகளை அசைத்துப் பேசத் தொடங்குகின்றது. அது முதலில் ஆ, ஊ, போ, வா போன்ற ஒலிகளை எழுப்புகின்றது. இவ்வொலிகள் நாளடைவில் விருத்தியடைய அக்குழந்தை பெற்றோர் ஒலிப்பதைப் பார்த்து அவர்களைப் போலவே ஒலிக்கத் தொடங்குகின்றது. போலச்செய்தல் (Imitation) என்னும் இந்தச் சிறப்பியல்பாற்றான் ஒருவன் தன்னிடமில்லாத ஆற்றல்களை, அறிவுத் திறன்களைப் பிறரிடம் கண்டும், கேட்டும், உணர்ந்தும் கற்றுக்கொண்டு தன்னை உயர்த்திக் கொள்ளுகின்றான். இந்தப் பண்பே மனிதனது நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையெனலாம். ஒரு குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு இந்த ஆற்றலும் அறிவுமே காரணமாய் அமைந்துள்ளது. முதலில் "பனை" ஒன்றையே மரம் என்ற சொல்லால் அறிந்த குழந்தை பின்னர் தென்னை மரத்தை 'மரம்' என்று பிறர் சொல்வதை மறுத்துக்கூற முனைகின்றது. தன்னை "நல்ல பையன்" என்று பாராட்டிய தந்தையைத் தானும் 'நல்ல பையன்' என்று பாராட்டுகின்றது. அதேபோலத் தன்னெதிரே மெல்ல நடந்துவரும் பூனையைப்பார்த்து 'நல்லபையன்' என்றே கூறுகின்றது. இவ்வாறே மொழியின் தொடக்க நிலையில் எந்த வேறுபாடும் உணராமல் திணை, பால் முதலியவற்றைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதிருக்கும் குழந்தை காலப்போக்கில் தன்னை அடுத்துள்ளோர் பேசுவதைக் கேட்டுக் கேட்டுக் கற்கும் சொற்களைப் பெருக்கிக் கொள்ளுகின்றது.

மனிதனுக்கு தான் கற்ற சிலவற்றைக் கொண்டு மற்றவற்றை அமைத்துக் கொள்ளும் தன்மை ஒன்று உண்டு. அது 'ஒப்புமையாக்கம்' (Anology) எனப் பெயர் பெறும். இவ் வொப்புமையாக்க முறையினல் பல வாக்கியங்கள் குழந்தையின் மூளையில் பதிகின்றன. 'அக்காள் வந்தாள்', 'அது வந்தது' போன்ற வாக்கியங்களைப் பலநாள் கூறக்கேட்டுப் பயின்று பெண்பால் வினைமுற்றும், ஒன்றன்பால் வினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றும் குழந்தைக்குப் பழக்கமாகின்றன. குழந்தை தனது இளமைக் காலத்தில் 'எடு' என்பதின் இறந்தகாலச் சொல்லாக 'எடுத்தார்' என்பதை அறிகின்றது. பின்னர் அது 'தடு' என்பதற்குத் 'தடுத்தார்' என்றும்; 'கொடு' என்பதற்குக் 'கொடுத்தார்' என்றும் தானே சொற்களை அமைத்துக் கொள்ளும் நிலையைப் பெறுகின்றது. இதே நிலையில் பல வாக்கியங்களை அமைக்கவும் குழந்தை கற்றுக் கொள்ளுகிறது. நாளடைவில் எழுவாய் முதலிலும் பயனிலை இறுதியிலும், செயப்படுபொருள் இடையிலும் அமையும் அமைப்பு அதன் மூளையில் நன்குகப் பதிந்து விடுகிறது. இவ்வாறு எல்லாவற்றையும் 'ஒப்புமையாக்க முறையினால்' எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. இத்தகைய முறை இளம் பருவத்திலேயே நன்குகப் பதிந்து பழகிவிடும் வாய்ப்புத் தாய்மொழியில் உள்ளது என்று டாக்டர் மு. வரதராசனுர் தனது மொழி வரலாற்றில் மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

பேச்சுமொழிக்குப் பன்னெடுங் காலத்தின் பின்னரே எழுத்து மொழி தோன்றியதென்பது மொழி ஆராய்ச்சியாளர் கருத்து. முதலில் பேசத் தொடங்கிய மக்கள் முழுக் கருத்தமைந்த வாக்கியங்களை ஒலித்தாற் போலவே அவற்றைக் குறிக்க ஓவியங்களைத் தீட்டினர். இவ்வாறு தீட்டப்பெற்றவை ஓவிய எழுத்துக்கள் எனப்படும். இதைத் தமிழில் 'உருவெழுத்து' என்பர். இதை யாப்பருங்கல விருத்தியும்—

"காணப்பட்ட உருவம் எல்லாம்
மாணக்காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப்படுவது உருவெழுத்தாகும்"

எனத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. முதலில் கண் என்னும் உறுப்பைக் குறிக்க ஓவியம் தீட்டப்பட்டது. பின் மனிதன் அறிவு வளர வளரப் பார்த்தல், பார்வை முதலிய கருத்துக்களை உணர்த்தக் கண்ணைக் குறிக்கும் ஓவியத்தால் முடியவில்லை. இவற்றைக் குறிக்கப் புதிய ஓவியங்கள் தேவைப்பட்டன. பின்பு திணை, பால், எண் இடம் ஆகிய பாகுபாடுகளையும், காலவேறுபாடுகளையும் உணர்த்த ஓவிய எழுத்துக்கள் ஓரளவு பயன்பட்டன. பின் காலப் போக்கில் கருத்தும் கற்பனையும் வளரவளர எல்லாவற்றையும் உணர்த்த ஓவியங்களால் முடியவில்லை. எனவே ஓவியங்களாக இருந்தவை நாளடைவில் அடையாள எழுத்துக்களாக மாறத் தொடங்கின. இவைகள் தான் பிற்காலத்தில் ஒலி எழுத்துக்களாக மாறின.

ஒவ்வோர் எழுத்தும் முதலில் ஓவியமாக எழுதப்பட்டுப் பொருளை நேரடியாக உணர்த்தியது. பின்பு அந்தப் பொருளின் பெயராகிய ஒலியை உணர்த்தியது. அதன் பின் ஓர் அசையை உணர்த்தியது. இறுதியில் ஓர் உயிரெழுத்தையோ அல்லது ஒரு மெய்யெழுத்தையோ மட்டும் உணர்த்துவது போன்ற நிலையை அடைந்து விட்டது என்று மொழி வரலாறு கூறுகின்றது.

அச்சம், ஆவல், நாகரிக உணர்ச்சி முதலியன பற்றியும், புதிய சொற்கள் தோன்றுவதுண்டு. பண்புடைய மக்கள் இறப்புக்கு அஞ்சினர். அதனுல் 'இறந்தார்' 'செத்தார்' என்னும் சொற்களைச் சொல்லவும் தயங்கினர். இவற்றிற்குப் பதிலாகத் 'துஞ்சினுர்' என்னும் சொல்லைப் பயன்படுத்தினர். பின்பு தங்களுடைய சமயங்களுக்கு ஏற்றவாறு 'சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார்' எனவும் 'காலமாளுர்' எனவுங் கூறினர். 'உயிர் போய் விட்டது' என்று சொல்லத் தயங்கிக் 'குளிர்ந்துபோய் விட்டது' என மக்கள் கூறுவதை இன்றும் காணலாம். மக்களுடைய ஆட்சியே இலக்கண வழக்கில் ஏறுவது மரபு. ஆதலின் மக்கள் இவ்வாறு சொல்வதைத் 'தகுதி' என்றும் 'மங்கல வழக்கு' என்றும் சான்றோர் ஏற்றுக் கொண்டனர். ஒவ்வொரு மக்கள் கூட்டத்தினரும் ஏதோ ஒரு காரணம்பற்றி ஒரு சொற்குறியை ஒழித்து அதனை வேருெரு சொற்குறியால் சொல்லி வந்தமையாலும் சொல்வழக்குகள் பெருகலாயின.

தமிழ் மக்களது நாகரிகநிலை முதிர்ச்சிக்கேற்பத் தமிழ் மொழியும் முதிர்ச்சியடைதல் வேண்டும். மொழியை அவற்றின் இயல்புக்கேற்ப இயல், இசை, நாடகமென்னும் முத்துறைகளிலும் வளரச் செய்வது தமிழ் மக்களது கடனுகும்.

—திருமதி அ. நாகரத்தினம்,
இரண்டாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப் பாடல்கள்

நாட்டு மக்கள் பாடிமகிழும் பாடல்களே நாட்டுப் பாடல்களாகும். இப் பாடல்கள் ஊருக்கு ஊர் மாற்றமுடையன. இவை ஏட்டில் எழுதாதவை. இலக்கணத்தைப் பாராதவை. ஆனால் உள்ளத்தைக் கவர்ந்தவை. இதனாலே நிலைபேறு பெற்றவை.

நால்வகை நிலங்களுக்கிசைய நால்வகைத் தொழில்களும் திகழும். அஃதாவது வேட்டைத் தொழில், மேய்ச்சற் றொழில், உழவுத் தொழில், கடற்றொழில் என்பனவே அவை. பல் சாதியினரும் தங்கள் தங்கள் கடும் உழைப்புகளை உல்லாசமாகப் புரிந்து கொள்ளத் தெம்மாங்குகள் பாடி மகிழ்ந்தனர். ஆட்டமும் பாட்டும் இசையோடு நிகழ்ந்தன. இவைகள் கிராமந்தோறும் தோன்றின. உழுதல், விதைத்தல், களை பிடுங்குதல், அரிவி வெட்டுதல், சூடு மிதித்தல், படகோட்டுதல் ஆகிய தொழில்களைக் களைப்பின்றிச் செய்யப் பாடல்கள் பயன்பட்டன. அன்றியும் உடனுக்குடன் கேட்ட கேள்விகளுக்கு விடைகளும் பாடலாகப் பாடப்பட்டன. இவைதவிர ஊஞ்சலாடல், பன்னவேலைகள் செய்தல், பிள்ளையைத் தாலாட்டுதல், கப்பலோட்டல், மீன்பிடித்தல் ஆகியவற்றுக்கும் பாடல்கள் எழுந்தன. துன்பத்திலும் ஒப்பாரி வடிவங்களில் பாடல்கள் தோன்றின.

"எழுத்தும், சொல்லும் நாம் படிப்பது பொருளுணர்தற்கே" என்றார் இறையனார் அகப்பொருள் உரையாசிரியர். பொருளென்பது அகமும் புறமும், இல்லற வாழ்க்கையையும் அரசியல் வாழ்க்கையையும் நமக்கு நாடோடி இலக்கியங்கள் எடுத்தோதுகின்றன. ஓய்வு நேரங்களில் மக்கள் அனுபவித்த இன்ப வாழ்க்கையை இப் பாடல்கள் எடுத்து இயம்புகின்றன. மக்களின் தொன்மை நாகரிகத்தையும், அது வளர்ந்த வரலாற்றையும், அவை உணர்த்துகின்றன. பிள்ளைகளைப் பெற்ற தாய்மார் பரம்பரையாகப் பாடிவரும் தாலாட்டுகளில் ஒன்று பின்வருமாறு:

"பச்சையிலுப்பை வெட்டிப்
பால்வடியத் தொட்டில்கட்டி
தொட்டிலுமோ பொன்னாலே
தொடுகயிறோ முத்தாலே
முத்தான முத்தோ நீ
முதுகடலில் ஆணிமுத்தோ
சங்கீன்ற முத்தோ
சமுத்திரத்தினாணி முத்தோ"

என்ற வரிகள் பொதுவாக எல்லாவகைத் தாலாட்டிலும் காணப்படும். ஒவ்வோரடியும் அந்தாதியாக அமைந்துள்ளது. இப்படியாகத் தாலாட்டும் சமயத்திலும் பிள்ளை அழுவதை நிற்பாட்டாத சமயத்தில் பிள்ளையைத் தாலாட்டும் தாய் மேலும் பல பாடல்களைப் பாடுவாள். பிள்ளை சாய்ந்தாடும் பருவத்தில் சாய்ந்தாடும் பாடலும், பின்பு கைகொட்டும் பருவத்துக்குரிய பாடலும் இடம்பெறும். பிள்ளைகள் தாம் விளையாடும் விளையாட்டுக்கள் சம்பந்தமாகவும் பாடல்கள் உண்டு.

கிச்சி மாச்சித் தம்பலம்
கியா மாயாத் தம்பலம்
மாச்சி மாச்சித் தம்பலம்
மாயா மாயாத் தம்பலம்.

இப் பாடலைப் பாடிப்பாடிச் சிறுவர்கள் மண்விளையாட்டு விளையாடி மகிழ்வார்கள்.

முற்காலத்திலே ஈழத்திலே வருடந்தோறும் ஆண்களும் பெண்களுமாகப் பெரியோரும் சிறியோரும் ஊஞ்சல்கட்டி ஆடிமகிழ்வர். அவர்கள் ஊஞ்சலாடும்போது பாடித்தான் ஆடுவர். பாடல்கள் யாவும் இசைப்பாடல்களாக இருக்கும். ஊஞ்சலைக் கப்பலாக நினைத்துக்கொண்டும் பாடுவர்.

சந்தனமரம் பிளந்து ஊஞ்சலும் கட்டி
சாதியார் ஒரு பலகை விட்டமும் பூட்டி
தெந்தனா தெனா தெனா வென்று பாட்டுக்
களும் பாடி
கப்பல் ஏலே ஏலோம்
கப்பல் ஏலே ஏலோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒருமுறை பாடிவிட்டு வேறு வேறு பாடல்களைப் பின்பு பாடுவர். கப்பல்பாடல்கள் தனியாகவும் உண்டு; பாடல் இல்லாமல் ஆடவில்லை. அதுபோல ஏலேலோ இல்லாமல் ஓடமில்லை. கடல் மேலே ஓடம் ஓடும்போது ஏலேலோ சத்தம் எழும்;

ஏலேலோ தத்தையா ஏலேலோ
நாழிகை ஒன்றுக்கு நானூறு கப்பல்
நாடோறும் தப்பாமல் தினம் வந்திறங்கும்
சீருடைய நெடிய நகர்க்கப்பல் வரும் செய்தி
சென்னபட்டினங் கோட்டைச் சனங்களெல்லாங் கேட்டு [ஏலேலோ]
பூரித்து ஆனந்த சந்தோஷமாகிப்
புதுமகனைப் பார்க்கவென்று கரைதனிலே நிற்க,
குண்டுகள் மருந்துகள் ரொம்பவே கொட்டிக்
குணமான துப்பாக்கி மாலுமை கட்டிப்
பண்டு செய்த பிராமணரைப் பக்கமாயிருத்திப்
பதமான இராட்சதரைப் பாய் மரமாய்க் கட்டிக்
கிறுகிறென்று சுற்றுதடா சிங்காரக் கப்பல்
பொன்னுன துறைமுகம் விட்டுப் போகவே
—ஏலேலோ

இப்படியான பாடல்களைப் பாடுவார்கள்;

இவைதவிர வயல் வேலைகளுடன் தொடர்புடைய பல பாடல்கள் உண்டு; நம் முன்னோர்கள் பலர் தங்களுக்குச் சொந்தமான தோட்டங்களிலும் வயல்களிலும் உணவுப் பொருட்களைப் பயிரிட்டுவந்தார்கள்; உழவுக்குத் தேவையான மாடுகளை வளர்த்துப் பட்டியைப் பெருக்கினர்; கலப்பைகளை மரத்தாலே செய்து பயன்படுத்தினர். அவர்கள் நிலத்தை உழுதார்கள். நெல்லை விதைத்தார்கள். குடிகளைக் காத்தனர். நாட்டை நிறுவினர். மாடுகளைக் கலப்பையில் பூட்டி முதல் உழவு செய்யும்போது பூசை செய்து பாடுவர். இதனை ஏர் மங்கலம் என்றும், பொன் ஏர் பூட்டுதல் என்றும் கூறுவார்கள்.

நாற்று நடும்போது ஆண்களும் பெண்களும் நிரையாக நின்று நடுவார்கள், அப்போது,

ஆற்றிலே தண்ணீர் அலைந்து
வருமாப்போல்
அதன்பிறகே புள்ளுத்துரந்து
வருமாப்போல்—தெந்தன
சேற்றிலே வெள்ளம் தெளிந்து
வருமாப்போல்
செங்கால் நாரையினம் மேய்ந்து
வருமாப்போல் - தெந்தன.

துரிதமாகப் பாடும்போது ஆண்கள் நடந்து நடந்து பெண்கள் பக்கம் சாடிவிடுவார்கள்; பெண் ஒருத்திக்கு இது பிடிக்கவில்லை, கலியாணம் ஆகாத அவள் தன் உடம்பில் ஆண்பிள்ளை ஒருவனுடைய மெய் முட்டுவதை விரும்பவில்லை. உடனே அவள் தானாகவே அடுத்தபாட்டைப் பாடத் தொடங்கிச் சாதுரியமாக அவனைத் தள்ளிப் போகச் சொல்லுகிறாள்.

வாரான் ஓரா வலியன் ஓரா
வந்திறங்கிய வெள் ஓரா
தாழை நீளம் சரிந்து போகுது
தள்ளி நடவும் பள்ளாரே.

என்பது அப்பாடலாகும்; நாற்று நடுகையின் பின்பு நடக்க இருப்பது அரிவிவெட்டாகும். இந்த வேலையும் பாடலோடு சேர்ந்து செய்வதால் விரைவாக வேலை ஒழியும்;

அரிவி வெட்டு நடக்கும்போது இடையில் ஒரு நாடகமும் நடக்கிறது.

வயலில் அரிவிவெட்டு நடக்கிறது. பண்ணைக்காரன் வயல் வரம்பிலே நிற்கிறான். உச்சிப் பொழுதாகிவிட்டது. பள்ளனுக்கோ பசி காதை அடைக்கிறது; அவனுடைய மனைவி தன் கூந்தலை அள்ளி முடித்துக்கொண்டும், தனது குறுகிய விழிகளுக்கு அஞ்சனம் தீட்டிக் கொண்டும் அடிக்குமேல் அடி வைத்து நாணிக் கோணி மெல்ல மெல்ல வயலை நோக்கி வருகிறாள்; அவளைக்கண்டதும் :

அருக்குவாள் சற்றே விழிக்கு மை
யெழுதுவாள்
அழகான கூந்தலை அள்ளிச் செருகுவாள்
செருக்குவாள் சற்றே செல்லங் கொண்
டாடுவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனுடன் கொஞ்சம் பாலும் கலப்பாள்
உருக்குவாள் ஊரில் பள்ளர் எல்லோ
ரையும்
உச்சியாம் பொழுது ஊனுக் கழைப்
பாள்
நொருக்குவேன் கையில் மண்வெட்டி
யாலே நான்
ஆண்டைக்காகப் பொறுத்து விட்
டேனே

என்று அட்டகாசஞ் செய்துகொண்டு நிற்கிருன் பள்ளன்: அப்போது பள்ளி கஞ்சிக் கலயத்துடன் கிட்ட வந்ததும், அவன்:

என்னடி பள்ளி ஏகாந்தக்காரி
இன்னேரமட்டும் என்னடி செய்தாய்?

என்று கணை தொடுத்தான், அவள் கொஞ்சம் அனுபவசாலி, சற்றுத் தூரத்தே நின்று:

ஆறு பூந்தங்கே தண்ணீருமள்ளி
அழுத பிள்ளைக்குப் பாலும் புகட்டிச்
சிறு பூத்த சிறுநெல்லுக் குற்றி நான்
தீட்டியாக்கவும் சென்றதே பள்ளா

என்று காலைமுதல் தான்பட்ட துன்பத்தைச் சொல்லி முடிப்பதற்குள் கஞ்சிக் கலையத்தைப் பள்ளன் காலாலே தட்டி விடுகிருன். அவள் ஆண்டையின் முன்சென்று அஞ்சலி செய்து,

காலமே சென்று பாலுங் கறந்து
கமுகம் பூப்போல் அரிசியும் தீட்டி
கடுகவே வைத்துக் காய்ச்சிய பாற்கஞ்சி
காலாலே தட்டிப் போருன் காண்
ஆண்டே

என்று கூறுவது பள்ளன் காதிலே விழுகிறது: உடனே,

உப்பில்லாக் கஞ்சி காய்ச்சச் சொன்னே
னோடி
ஊரெல்லாங் கொண்டு உலாத்தச்
சொன்னேனோடி
பள்ளிச்சி கஞ்சி காய்ச்ச ஒண்ணுதடி
பாரடி உந்தன் பல்லை உடைக்கிறேன்

என்று மீண்டும் அட்டகாசம் செய்கிருன் பள்ளன்,

இப்படிப்பட்ட கல்நெஞ்சப் பள்ளனுக்கெப்படிக் கஞ்சிகாய்ச்சுவேன் ஆண்டே

துப்புரவாகக் காய்ச்சிய கஞ்சியைத்
தூக்கினுன் பல சாதிக்கும் காட்ட

என்று அவள் சொல்லிவிட்டுக் குனிந்து கடகத்தை எடுத்துக் கொண்டு உதிர்ந்த கதிர்களைப் பொறுக்குகின்ருள்: இதனைக் கடைக்கண்ணுல் கண்ட பள்ளன்,

முள்ளிப் பூப்போலே முற்பட்டுச் சேலை
யும்
மூலைசாய்ந்த கடகமுங் கொண்டு
தள்ளித் தள்ளிக்கதிர்கள் பொறுக்கின்ற
நாடகப் பள்ளி நாடகக் காரி

என்று பாடியபடியே தன்வேலையைக் கவனிக்கின்ருன்: இவ்வளவுடன் இச்சிறு நாடகம் முற்றுப்பெறுகிறது. அரிவி எல்லாம் அறுத்தாகி விட்டது. இனி உப்பட்டிகளைக் கூட்டிக் கட்டிச் சுமந்துசென்று சூடு அடுக்குவார்கள். தற்காலத்திலே யந்திரங்களின் உதவியினுல் நெற்கதிர்களை உடன் மிதித்து நெல்லையும் வைக்கோலையும் வேருக்குவர். நெற்கதிர் கட்டுகளை கட்டும்போது ஆண்கள் வேணுமென்றே பெரிய கட்டுகளாகக் கட்டிப் பெண்களுக்குத் தூக்கி விடுவார்கள். அவர்கள் தூக்கமாட்டாமல் இடர்ப்படுவார்கள். அப்போது,

சின்னச் சின்னக் கட்டுக் கட்டிச்
சிங்காரக் கட்டுக் கட்டித்
தூக்கிவிடும் கொத்தனுரே
தூரக் களம் போய்ச் சேர

என்று கேலியாகச் சொல்லி விடுவார்கள். இதன்பின் சூடு மிதிப்பதற்கும் நெல்லுத் தூற்றுவதற்கும் பாடல்கள் உண்டு.

ஒரு சிறு கிராமத்தில் ஓர் ஏழைக் குடும்பம். கணவன் கூலி வேலை செய்து பொருள் தேடி வருவான். உழைப்பு இல்லாத நேரங்களில் கடலுக்குச் சென்று மீன் பிடித்து வருவான். அவன் பிடித்துவரும் மீனை அவனது மனைவி விற்று வருவாள்; ஒருநாள் மாலை வீடு விட்டுச் சென்ற கணவன் மறுநாள் மாலையாகியும் வீடுவரவில்லை; அவனது மனைவி அவனை எதிர்பார்த்து வீட்டு வாசலிலே காத்து நிற்கிருள். அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கணவன் வெறுங்கையுடன் வீட்டுக்கு வருகிறான். அவள்:

*ஊரிலே பிழைப்பில்லாமல்*
*உன்னிச்சையில் மீன்பிடித்துக்*
*காரிலே திருப்புவா யென்டு*
*காத்திருந்தேன் இந்தமட்டும்*

என்றாள். கார் என்பது பஸ்வண்டியை. இப்படிச் சொல்வது கிராம வழக்கு. கணவனும் தான்பட்ட கஷ்டத்தைச் சொல்லுகிறான்.

*காத்திருந்து என்ன செய்ய*
*காற்றெழும்பி நான் புரண்டு*
*தேற்றிரவு நடுச் சாமம்*
*நீந்திக் கரை சேர்ந்தனடி*

எனக் கூறி முடிக்கிறான். இப்படியாகக் கிடைக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும் பாடல் மூலம் தம் உள்ளக்கிடக்கையை வெளியிடும் வழக்கம் முற்காலத்தவரிடம் இருந்து வந்தது என்பதை முன்னோர்களின் நாட்டார் பாடல்களிலிருந்து நாமறிந்து மகிழக் கூடியதாயிருக்கிறது. இவை ஓசை நயம், பொருணயம் என்பன செறிந்தனவாகவே இருந்தன. இவைபோன்ற பாடல்களைக் கண்டு களிப்பது மட்டுமன்றி நாமும் இப்பேர்ப்பட்ட இனிய பாடல்களை நிகழ்ச்சிகளுக்கேற்பப் பாடி மகிழ முயற்சிப்போமாக.

திருமதி சரஸ்வதி சுந்தரமூர்த்தி
1-ம் வருடம்.

> "வாழ்க்கையில் பற்பல படிகளில் நமக்கு வழிகாட்டிச் செல்வது கல்வி. ஆனால், அபாயமும் சோதனையும் நேரும்போது அது அடியோடு பயனற்றுப் போகிறது. அப்போது தெய்வ நம்பிக்கைதான் நம்மைக் காக்கும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்தல்: அதன் இயல்பு விளக்கம்

வை. கா. சிவப்பிரகாசம், M. A., Dip-in-Ed.
(கல்வித்துறை இலங்கைப் பல்கலைக் கழகம் பேராதனை வளாகம்)

வாசிப்பு ஒருவனை முழுமையான மனிதனுக்குகின்றது என்றார் ஆங்கில அறிஞர் பேக்கன். இத்தகையசிறப்பினையுடைய வாசிப்பு என்றால் என்ன? அதன் இயல்பு யாது? என்பன குறித்துக் கல்வியியல், உளவியல், மொழியியல் அறிஞர்கள் பல்வேறு நோக்குகளில் விளக்கந் தந்துள்ளனர். துறை போகு புலமை இல்லார் வாய்விட்டு ஒலித்தல், செய்தியின் சாரத்தை அறிதல் என்பன வாசித்தலாம் எனப்பொதுவாகக் கருதுவர்.

## சில வரைவிலக்கணங்கள்

வல்கட் (Walcutt) என்னும் அறிஞர் கட்புலனுக்குத் தோன்றும் குறியீடுகளைப் பேச்சுவடிவச் சொல்லாகப் பெயர்த்தல், மொழியைப் புரிந்து கொள்ளல், விழுமிய இலக்கியம், பண்பாட்டு மரபு என்பனவற்றின் நலம் பாராட்டல் ஆகிய முக்கூறுகள் கொண்டதே வாசிப்பு என வரைவிலக்கணம் வகுத்துள்ளார். இம்முக்கூறுகளில் பின்னையது எல்லாவகை வாசிப்பிற்கும் பொருந்தாது.

டிங்கர்(Tinker) மக்கலோ (Mccullough) என்பவர்கள் எழுத்துவடிவிலுள்ள பேச்சே வாசித்தல் என்னும் கருத்தை வெளியிட்டுள்ளனர். இம்முழுமையற்ற வரைவிலக்கணம், வாசிப்பு என்னும் நடத்தையின் கூறுகளைத் தெளிவுபடுத்தவில்லை,

பெட்ஸ் (Petts) என்பவர் சிந்தனைச் செயற் கோவையே வாசித்தல் என்றுரைத்துள்ளார். எழுத்திற்கும் சிந்தனையாகிய செயற்கோவை வேண்டியதேயாம். எனவே அன்னாரின் வரைவிலக்கணம் திட்பமற்றதாகும்.

கிப்சன்(Gibson)என்னும் பரிசோதனைக் குழந்தை உளவியலாளர் வாசித்தலாகிய நடத்தை பரிமாற்றத்தை ஏற்றல், வரைக் குறியீடுகள் (Graphicsymbols) பிரித்துணர் துலங்கல்களை விளைத்தல், வரைக் குறியீடுகளைப் பேச்சாக்கிக் குறி விளக்கம் காணல், (Decoding) அச்சுப் பக்கத்திலிருந்து கருத்து விளக்கம் பெறல் என்ற நான்கு கூறுகளை உடையது என வரைவிலக்கணம் கண்டுள்ளார்.

## மொழியியலாளர் பார்வையில் வாசித்தல்

மொழியியல் வல்லுநரும் வாசித்தலை உளவியலாளரின் கருத்திற்கிணங்கவே விளக்குவர். மொழியில் இயல்பு விளக்கம் எழுத்து வடிவிலும், பேச்சு வடிவிலும் மொழிபெறும் தன்னியல் நிறைவு (Actualization) என்பவற்றின் அடிப்படையிலே வாசிப்பின் வரைவிலக்கணம் வகுக்கப்பட வேண்டும் என்பது கரோலின் (Caroll) கருத்து.

மனித இனக்குழு ஒன்று ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தப் பயன்படுத்தி வருவதும், பயன்படுத்த வல்லதும் ஆகிய தன்னிச்சையான குரலொலிகளின், ஒலித்தொடர்ச்சிகளின் கட்டுக் கோப்புள்ள அமைப்பே மொழியாம். அது மனிதர் சூழலிலுள்ள பொருள்கள், சம்பவங்கள், நடவடிக்கைக் கோவைகளை விரிவாக விபரிக்க வல்லது. பேச்சிலுள்ள செய்திகளைக் கட்புலன் மூலம் உணருதற்காக எழுத்து வடிவில் பதிவு செய்யப் பேச்சுச் சமூகங்கள் மரபு வழி அமைப்புக்களை வளர்த்துள்ளன. பேச்சிலுள்ள செய்திகளின் சிறப்புக் கூறுகள் யாவும், எழுத்து வடிவ அமைப்பில் இடம் பெறுவதில்லை; மேலும் எழுத்து வடிவ அமைப்புக்கள் தமக்கே உரியனவும், பேச்சுச் செய்திகளில் வெளிப்படையாக இல்லாதனவுமாகிய மூலக் கூறுகள் சிலவற்றைக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாகப் பந்தியமைப்பு, நிறுத்தற் குறிகள் என்பன எழுத்து வடிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கட்குரிய மூலக் கூறுகளாம். ஆயின் எழுத்து வடிவச் செய்திகள் பல வற்றைப் பேச்சுருவில் கட்டமைப்புச் செய்தல் எப்போதும் இயலும்.

வாசிப்பு என்னும் நடத்தையை மொழியின் இயல்புபற்றிய இவ்விளக்கத்தின் அடிப்படையிலேதான் மொழியியலாளர் பகுத்தாய்வர். 'கரோல்' என்னும் மொழியியல் அறிஞர் எழுத்துச் செய்திகளின் புலக்காட்சியும், விளக்கமும் அடங்கியுள்ள நடத்தையே வாசித்தல் என உரைத்துள்ளார் ஆனால் எழுத்துச் செய்திகள் பேச்சுச் செய்திகளின் விளக்கம் முழுமையான சுதந்திரமுள்ள செயற்கோவைகளில்லை.

## வாசித்தலின் கூறுகள்

வாசித்தலாகிய செய்கையில் இரு பிரிவுகள் உள்ளன. ஒன்று, எழுத்துச் செய்தியின் அடிப்படையில் பேச்சுச் செய்தியைக் கட்டமைத்தல் அல்லது மீளக் கட்டமைத்தல். இரண்டு, அவ்வாறு கட்டமைத்தல் செய்யப்பட்ட செய்திகளின் விளக்கம்;

எழுத்துச் செய்திகளிலிருந்து பேச்சுச் செய்திகளை மீளக் கட்டமைக்கும் திறன் பிள்ளையின் சொற்களஞ்சிய வளர்ச்சியிலே தங்கியுள்ளது. சாதாரண பிள்ளையின் மொழியறிவில் ஒலி வேறுபாடு காணல், வாக்கிய விளக்கம், சொல்வளம் என்னும் முக்கூறுகள் உள்ளன. இக்கூறுகளில் குறை வளர்ச்சியுடையோர் அறிவுவளர்ச்சி நலிந்த சூழலில் வாழ்வோர் வாசித்தலில் சிரமம் காண்பர். எழுத்துச் செய்திகளைப் பேச்சுச் செய்திகளாகக் கட்டமைப்புச் செய்தலில் ஒலியன் — குறியன் தொடர்பு விளைவுகளின் (Phoneme-Grapheme-Consequences) தேர்ச்சி உறுதுணை புரியும். அதாவது தெளிவான வேறுபாட்டுத் தனித்தன்மையுள்ள அல்லது மிகக்குறைந்த ஒலியலகுகளுக்கும் எழுத்தமைப்பிலுள்ள மிகக்குறைந்த கட்புலக் குறியீட்டலகுகளுக்கும் உள்ள விளைவுத் தொடர்புகள் பற்றிய தேர்ச்சி, பேச்சுச் செய்தியின் கட்டமைப்பு ஆக்கத்திற்கு உதவும். நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்கள் எண்தானங்கள் நிறுத்தற் குறிகள் போன்றனவே குறியன்கள் எனப்படும்;

## சொற்புலக் காட்சி

பேச்சுச் செய்தியின் மீள்கட்டமைப்பிற்குரிய இயல்பான அலகு சொல்லே ஆகும். எனவே, வாசித்தல் என்னும் செயற்கோவையில் எழுத்துச் செய்தியைப் பேச்சுச் செய்தியாக மீள் கட்டமைப்புச் செய்ய சொல்லைக் கண்டு கொள்ளல் அல்லது சொல்லினை மீட்டறிதல் (Word - Recognition) முக்கியம். இச்செய்கையிலே புலக்காட்சி (Perception) இடம் பெறுகிறது; முழுச்சொல்லின் புலக்காட்சி அச்சொல்லின் பகுதிகளின் புலக்காட்சியிலே தங்கியுள்ளது. முதிர்ந்த வாசகர் சொல்லைக் கண்டுகொள்ளலின் குறியாகச் சொல்லின் வடிவத்தைப் பயன்படுத்துவர். ஆனால் தொடக்கநிலை வாசகர் பழக்கமற்ற சொல் எதிர்ப்படும்போது சொல்லைக்கண்டு கொள்ளல் அல்லது மீட்டறிதல் என்பது 'பிரச்சனைத் தீர்வு' முயற்சியாய் விடும். எனவே வாசிப்பின் கற்றல் வெற்றிபெற கற்றல் தொடை (Learning set) ஒன்றைக் கற்போர் கட்டி எழுப்புதல் வேண்டும்; அதனால் பல்வேறு சொல்மீட்டறிவுப் பிரச்சினைகளை எதிர்நோக்கல் எளிதாகிவிடும். மயக்கங்களின் நீங்குதலும் சாலும். அன்றியும் சொல்லைக் கண்டு கொள்ளலோடு அமையாது பிள்ளை சொற்களைக் குழுக்களாக்கி முழுக் கூறுக்கும் திறனும் வளர்க்கப்படுதல் வேண்டும்.

## கிரகிப்பு

வாசிப்பு ஆகிய செய்கையின் இரண்டாம் பிரிவு இவ்வாறு கட்டமைக்கப் பட்ட செய்திகளின் விளக்கத்தைப் பெறுதலாம். வாசித்தலை இருபிரிவுகளாக மொழியியலாரும், உளவியலாரும், பகுத்து ஆராய்ந்தாலும் உண்மையில் அவை உடனிகழ் செய்கைக் கூறுகளேயாம். 'மக்கலோ' என்பார் கருதுவதுபோல வாசகர் வாசிப்பில் எப்போதும் சொற்பொருளை வகுப்பீடு செய்து விளக்கம் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இலக்கணக் கட்டமைப்புகளில் வரும் மிகக்குறைந்த கருத்தலகுகளின் விளக்கம் காணும் செயற்கோவையே கிரகித்தலாகும். இத்தகைய கிரகித்தலைப்

பெற ஒருவர் வாசித்தலில் ஈடுபடும்போது மனநெகிழ்ச்சியை (Mental flexibility) உடையராதல் முக்கியம்.

## வாசிப்பின் நுண்பகுப்பியல்

வாசிப்பினுல் எய்தும் கிரகித்தலைப் பரெற் (Barrett) என்னும் அறிஞர் விரிவாகப் பகுத்து விளக்கியுள்ளார். புளும், சண்டர்ஸ், லெட்டன் (Letton), குஸ்ஸாக் (Guszak) ஆகிய அறிஞர்களின் சிந்தனைகளின் செல்வாக்கு பரற்றின் பகுப்பு விளக்கத்திற் காணப்படுகிறது. அவர் தந்துள்ள வாசித்தற் கிரகிப்பின் அறிவு உணர்வுப் பரிமாணங்களின் நுண்பகுப்பியல் ("Taxonomy of the cognitive and affective dimensions of reading comprehension") வாசிக்கும்போது கிரகித்தலிற் காணப்படும் ஐவகைத் திறன்களை அல்லது ஐவகை மட்டங்களை விளக்குகிறது. பரெற்றின் நுண்பகுப்பியல் கீழே தரப்படுகிறது.

1·0 நேர்ப் பொருட் கிரகிப்பு

- 1·1. மீட்டறிதல் (கண்டுகொள்ளல்)
- 1·1·1 விபரங்களை மீட்டறிதல்.
- 1·12 முக்கியகருத்துக்களை மீட்டறிதல்
- 1·13 தொடர்ச்சியொன்றை மீட்டறிதல்.
- 1·14 ஒப்புமைகளை மீட்டறிதல்.
- 1·15 காரண காரியத் தொடர்புகளை மீட்டறிதல்.
- 1·16 பண்புக் கூறுகளை மீட்டறிதல்;

1·2 மீள நினைவிற் கொணரல்

- 1·21 விபரங்களை மீள நினைவிற் கொணரல்.
- 1·22 முக்கிய கருத்துக்களை மீள நினைவிற் கொணரல்;
- 1·23 தொடர்ச்சியை மீள நினைவிற் கொணரல்.
- 1·24 ஒப்புமைகளை மீள நினைவிற் கொணரல்.
- 1·25 காரண காரியத் தொடர்புகளை மீள நினைவிற் கொணரல்;
- 1·26 பண்புக் கூறுகளை மீள நினைவிற் கொணரல்;

2·0 மீள் ஒழுங்கமைப்பு

வாசிப்புப் பகுதியின் தகவல்கள் கருத்துக்களின் பகுப்பு, தொகுப்பு, ஒழுங்கமைப்பு என்பன இதன்பாற் படும்;

- 2·1 வகைப்படுத்தல்
- 2·2 புறவுருவம் அமைத்தல்
- 2·3 சுருக்கம் காணல்
- 2·4 தொகுத்தல்

3·0 ஊகக் கிரகிப்பு

- 3·1 ஆதார விபரங்களை உய்த்தறிதல் (ஊகித்தல்)
- 3·2 முக்கிய கருத்துக்களை உய்த்தறிதல்
- 3·3 தொடர்ச்சியை உய்த்தறிதல்
- 3·4 ஒப்புமைகளை உய்த்தறிதல்
- 3·6 பண்புக் கூறுகளை உய்த்தறிதல்
- 3·7 முடிவுகளை முன்னறிந்துரைத்தல்
- 3·5 காரண காரியத் தொடர்புகளை உய்த்தறிதல்
- 3·8 மொழியின் அணிநடையாட்சியை விளங்கிக் கொள்ளல்

4·0 மதிப்பீடு

- 4·1 உண்மைநிலை கற்பனைப் பிரமைகள் பற்றிய தீர்ப்பீடு
- 4·2 உண்மைச் செய்தி அபிப்பிராயங்கள் பற்றிய தீர்ப்பீடு
- 4·3 செல்தகுதி சரியளவுநிலை (Adequay) பற்றிய தீர்ப்பீடு
- 4·4 பொருத்தமுடைமை பற்றிய தீர்ப்பீடு
- 4·5 ஏற்புடைமை, விருப்பத்தகைமை தகுதிமதிப்பு பற்றிய தீர்ப்பீடு

5·0 நலம் பாராட்டல்

- 5·1 உள்ளடக்கத்துக்குக் காட்டும் உணர்ச்சித் துலங்கல்
- 5·2 பாத்திரங்கள் அல்லது சம்பவங்களோடு (Emotional response) ஒன்றுதல்
- 5·3 எழுத்தாளரின் மொழியாட்சிக்கு எதிர் வினைகள் காட்டல்
- 5·4 மனவிம்பம் தரும் விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நுண்பகுப்பியலின் நன்மைகள்

'பரெற்' தந்துள்ள இந்நுட்பப் பகுப்பு நிரல் ஆசிரியர்களுக்கு இரு நன்மைகளை அளிக்கவல்லது. முதலாவது இந்நுட்பப் பகுப்பு நிரல் பிள்ளைகளின் வாசித்தல் ஆகிய நடவடிக்கையில் வழிகாட்டலைச் செவ்வனே யாற்றத் துணைபுரியும் வினுக்கள் நோக்கங்களை வளர்க்க அடிப்படையாய் அமையும்; இரண்டாவதாகக் கிரகித்தல் வினுவகைகளின் ஆக்கத்திற்கு அஃது உதவும். மேலும் பாட இறுதியிலுள்ள வினுக்கள் இந்நுண்பகுப்பியலிலுள்ள எப்பிரிவிற்கு முதன்மை கொடுக்கின்றன, எப்பிரிவைப் புறக்கணித்துள்ளன என்பதை உறுதி செய்து வேண்டிய மாறுதல் காணத் துணைபுரியும். இவற்றோடு பாட இறுதியிலுள்ள வினுக்களின் கடுமையை அளவிட முடிதலை மூன்ரும் பயனுகக் கொள்ளலாம்;


### குறைகள் :

தெரிவு, வினுக்கள், வாசகரின் பின்னணி என்னும் முக்காரணிகளின் விளைபொருளே வாசிப்பு விளக்கமாகும். இவற்றுள் பின்னைய காரணி விளக்கத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை இந்நுண்பகுப்பியல் புறக்கணிக்கின்றது. இஃது ஒரு குறையாகும்; மேலும் சில வினுக்கள் 'பறெற்'றின் பிரிவுகள் சிலவற்றுக்குப் பொதுவாகவும் இடமுண்டு. இது மற்ருெரு குறை. இவ்வாறு 'பரெற்'றின் நுண்பகுப்பியல் சில குறைகளுடையதாயிருப்பினும் அன்னுரின் பணி கல்வியுலகிற்கு நலம்தர வல்லது என்பதில் ஐயமில்லை.

வாசித்தலின் இயல்பை ஆழமாகவும், நுணுக்கமாகவும் ஆராய விரும்பிய அறிஞர் சில உருப்படிவங்களைத் தம் ஆய்விற்குப் பயன்படுத்தியுள்ளனர். ஹோம்ஸ் ஸ்மித்தும், கறிகனும் (Holmes Smith and Carrigan) ரொபின்சன் ஆகியோர் மாதிரிப் படிவங்களின் துணைகொண்டு வாசிப்பின் இயல்பை விளக்கியுள்ளனர். இவர்களில் 'ரொபின்ச'னின் பணி சிறப்பாக நோக்கற்பாலது. 'கிரே' என்பாரின் ஆய்வைச் செம்மைப்படுத்தி 'ரொபின்சன்' வாசிப்பின் இயல்புகளை விளக்கியுள்ளார். வாசித்தலின் முழுத்திறன்கள் பற்றிய கிரே-ரொபின்சன் என்பாரின் இயல்பு விளக்கம் இணைத்தே சிந்தித்தற்குரியன.

### கிரே கூறும் நாற்கூறுகள்:

கிரே என்னும் அறிஞர் வாசித்தலில் நான்குகூறுகள் உளஎன்னும் கொள்கையை விதந்து கூறியுள்ளார். சொற்புலக்காட்சி, கிரகித்தல், எண்ணங்களின் மதிப்பீடும் எதிர்வினையும், தன்மயமாக்கல் என்னும் நான்கு பிரதான உறுப்பின் கூட்டே வாசித்தல் என்பது கிரேயின் கொள்கை; இவற்றுள் தன்மயமென்பது பழைய எண்ணங்கள் வாசிப்பினுல் பெறப்படும் தகவல்களின் இணைப்பைக் குறிக்கும். இவ்வுறுப்புக்களைப் பின்வரும் வரைபடம் விளக்கும்;




### சொற்புலக்காட்சி:

வாசித்தலின் இந்நாற்கூறுகளிடையே படிநிலைத் தொடர்புண்டு. முதலாவதாகிய சொற்புலக்காட்சியே உயிர்நாடியாகவும், அடிப்படையாகவுமுள்ளது. சொற்புலக்காட்சியின்றி ஏனைய எவையும் நிகழ்தல் இயலாது.

### கிரகிப்பின் மட்டங்கள் :

இரண்டாவதாகிய கிரகிப்பில் மூன்று வகைகள் அல்லது மட்டங்களுள. முதல் மட்டத்தில் நேர்ப்பொருள் விளக்கம் காணப்படுகின்றது. வாசிக்கப்படுவதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாகப் பற்றிக் கொள்ளலே அது குறிக்கின்றது. இரண்டாம் மட்டத்தில் மறைபொருளை உறுதியாக அறிந்து கொள்ளல் இடம்பெறுகின்றது. மூன்றும் மட்டத்தில் மறைபொருள்களிற் கவனத்தைக் குவிப்பதோடு வெளிப்படையாக உண்மையிற் கூறப்பட்ட விடயங்களுக் கப்பால் எழுத்தாளரின் எண்ணங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்திற் கவனத்தை ஒருமுனைப்படுத்தல் நிகழ்கின்றது; இம்மூன்று மட்டங்களையும், வரிகளைவாசிக்கும் திறன், வரிகளைக் கூர்ந்து வாசிக்கும் திறன், வரிகளுக் கப்பாலுள்ளதை விளங்கும் திறனென வேறுவகையில் விபரித்துக் கூறலாம்;

**எதிர்வினை :**


மூன்றும் வட்டச் சுற்றுக் குறிக்கும் எதிர்வினை, விமர்சனநோக்கு வாசித்தலைச் சார்ந்தது. விமர்சன வாசிப்பிற்குரிய எதிர்வினையில் ஆராயும் மனப்பாங்கு, தீர்ப்பீட்டுத் தரங்கள் அல்லது கட்டளைக் கற்கள் (அளவுத் தரங்கள்) முடிவுகாணல், உள்ளடக்கத்திற்குக் காட்டும் உணர்ச்சித் துலங்கல்கள் என்னும் கூறுகளுள. இவை இரண்டாம் வட்டச் சுற்றுக் குறிக்கும் கிரகிப்பின் மூன்றும் மட்டத்தில் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைக் 'கிரே' விளக்கவில்லை;

**தன்மயமாக்கம் :**

நான்காம் வட்டச் சுற்றுக்காட்டும் தன்மயமாக்கம் என்பது எண்ணங்களின் ஒருங்கிணைப்பேயாம். இதனையடைய விமர்சனத் தீர்ப்பீடு, ஆக்கச் சிந்தனை, வாசிப்புத்தரும் தகவல்களைத் தம் பழைய அனுபவங்களோடு பொருத்தல் என்னும் மூன்று வழிகளுள. தன்மயமாக்கலுக்கு வேண்டப்படும் திறன்கள் ஏனைய கூறுகளுக்குரிய திறன்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைக் 'கிரே' தெளிவுபடுத்தவில்லை. எடுத்துக்காட்டாக, எதிர்வினைக்குரிய திறன்கள் தன்மயமாக்கத் திறன்களின் வேறுபடும் பான்மையைக் 'கிரே' உரைக்கவில்லை.

**ரொபின்சனின் கொள்கை :**

கிரேயின் வாசிப்புக் கூறுபாடு முழுமையான விளக்கங்கள் தராமையை உணர்ந்த ரொபின்சன் அவர் பணியைச் செம்மைப்படுத்தி வாசிப்பை ஐம்பெருங் கூறுகள் கொண்ட செயற் கோவையாக விளக்கியுள்ளார்; பின்வரும் விளக்கப் படம் ரொபின்சனின் கொள்கையைக் குறியீட்டு முறையிலே தெளிவுபடுத்தும்.




**விளக்கப்படம் ii**

**வாசிப்பின் ஐம்பெருங் கூறுகள் :**

ரொபின்சனின் பகுப்பாய்விற்கு ஆராய்ச்சியிலக்கியம், பரிசோதனை ஆய்வுகள் என்பன துணைபுரிந்துள்ளன. சிறப்பாகக் கீழடுக்கு காரணிக் கோட்பாடு (Substrata Factor Theory) பற்றியஆராய்ச்சி ரொபின்சன் அம்மையாரின் கருத்துக்களிற் செல்வாக்கினை விளைத்துள்ளது.

**வேறுபாட்டுக் காரணங்கள் :**

கிரேயின் வரைபடத்திற்கும், ரொபின்சனின் படத்திற்கும் புறக்கோலத்தில் வேறுபாடு உண்டு; இவ் வேறுபாட்டிற்கு இரு காரணங்களுள. ஒன்று வாசிப்புவேகம் என்னும் ஐந்தாம் கூற்றுக்குச் சிறப்பான இடமளிக்க ரொபின்சன் விரும்பினர்; இரண்டுமுதல் நான்கு கூறுகளிலும் வளர்ச்சிக்குள்ள எல்லையற்ற வாய்ப்புக்களை நிறுவுதல் அவரின் நோக்கமாகும்.

**ஐங்கூறுகளும் உட்பிரிவுகளும் :**

முதற்கூறாகிய சொற்புலக் காட்சியில் சொல்லை மீட்டறி திறன்கள், சொற்கருத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துகள் என்ற இரு பிரிவுகளுள. இரண்டாம் கூறுகிய கிரகிப்பிலும் ரொபின்சன் நேர்ப் பொருள் ஊகப்பொருள் என இரு பிரிவுகளை வகுத்துள்ளார்: மூன்றாவதாகிய எதிர்வினை அறிவு நோக்குத் தீர்ப்பீடுகள் உணர்ச்சித் துலங்கல்கள் என இரு திறப்படும். நான்காவதாய தன்மயமாக்கம் குறித்துப் புதிய விவரணம் எதுவும் தரப்படவில்லை; ஐந்தாவதாகிய வேகம் அல்லது வீதம் என்பது ரொபின்சனின் புதுச் சேர்க்கையாகும். இதனை விளக்கும் அவ்வம்மையார் வாசிப்பு வேகம் நெகிழ்ச்சியுடையதாக வேண்டுமென தெளிவுபடுத்தியுள்ளார்: மேலும் வாசகரின் நோக்கங்களுக்கேற்பவும் வாசிக்கும் பொருள் மூலத்துக் கேற்பவும் பொருத்தப்பாடு அமைய வேண்டுமெனவும் வற்புறுத்தியுள்ளார்;

## விமர்சனக் குறிப்புக்கள்

1. ரொபின்சனின் கோட்பாட்டிலே திறன்கள் செய்முறைகள் போதனை நடைமுறைகளைத் தெளிவாகப் பிரித்துணரும் தேவை வற்புறுத்தப் பட்டுள்ளது.

2. திறன்கள்பால் கவனஞ் செலுத்தலே நல்விளைவுகளைத் தரும் என்பதை ரொபின்சன் விளக்கியுள்ளார்;

3. வாசித்தல் என்பது பகுப்பாய்வுக்கு இடந்தரா ஒருமையுள்ள அல்லது கோளத்தன்மை வாய்ந்த செயற்பண்பு என்னும் கோட்பாட்டிற்கும் சுதந்திரமான திறன்கள் பலவற்றின் பட்டியலே வாசித்தல் என்னும் கொள்கைக்கும் இடைப்பட்ட நடுநிலைப் போக்கைக் கடைப்பிடித்து அன்னர் இணைப்புக் கண்டுள்ளார்:

## தொகுப்பு: நான்கு குறிக்கோள்கள்

வாசித்தலின் இயல்பு பற்றிய இவ் விளக்கச் சிந்தனைகளைத் தொகுப்பின், வாசிப்பு என்னும் செயற்கோவை பின் வரும் நான்கு குறிக்கோள்களை உடையது எனலாம்:

1. குறிவிளக்கம் பெறல் (Decoding) இது சொற்புலக்காட்சியை நிகர்க்கும்:

2. எழுத்தாளரின் பொருண்மையைப் பற்றிக் கொள்ளல். இது பரெற் கூறும் நேர்பொருட் கிரகிப்பை ஒத்தது.

3. எழுத்தாளரின் செய்தியையும், வாசகரின் பின்னணியையும் சோதித்தலும் மீள இணைத்தலும், இக்குறிக்கோள் பிரெற் கூறும் உயர்மட்டக் கிரகிப்புத் திறன்கள், ரொபின்சன் அம்மையார் வகுக்கும் எதிர் வினைக்கூறுகள் என்பவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது:

4. எண்ணங்களையும், விழுமியங்களையும் (Values) தீர்மானங்கள் செயல்களிற் பயன்படுத்தலும் எழுத்தாளர்களின் எண்ணங்களைப் புதிய சூழல்களுக்கு விரிவாக்கலும். கிரே — ரொபின்சன் வரையறுக்கும் தன்மயமாக்கமே ஈண்டு வகுக்கப்பட்டுள்ளது. கிரே ரோஜ(ர்)ஸ் (Gray and rogers) என்பார் வற்புறுத்தும் மிக உயர்ந்த முதிர்ச்சி மட்டம் இக்குறிக்கோளை அடைய இன்றியமையாததாம்,

இந்நான்கு குறிக்கோள்களும் சிக்கலியல்பில் வேறுபடுகின்றன: முதலாவதாகிய குறி விளக்கம் பெறல் சிக்கலியல்பு மிகக்குறைந்தது; ஆனல் நான்காவதாகிய பிரயோகமும் விரிவாக்கமும் மிக உயர்ந்த சிக்கலியல்புடையன;

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்திட்டத்தின் உடற்கல்வியின் பங்கு

வருங்கால உலகை நன்னிலையில் வைத்து நலம் பெறச் செய்பவர்கள் நம் சிறார் களே. இவர்கள் தேச நலம் புரிந்து சீரிய வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற கல்வி உடற்கல்வியாகும். கல்வி என்று சொல் லும்போது உளக்கல்வி மாத்திரமல்ல, உடற்கல்வியும் தான் மாணவர்க்கு இன்றி யமையாத தொன்றாகும். உறுதியுள்ள உட லில்தான் உறுதியுள்ள உள்ளத்தை வளர்க்க முடியும். உறுதியில்லாது சோர்ந்திருக்கும் உள்ளத்தில் கற்றல் நடைபெற மாட்டாது. குழந்தையின் உடம்பு நோயினால் சோர் வடைந்திருக்கும்போது. எதனொன்றிலும் அக்கறை கொள்ளாது. எனவே மனோசக்தி சரீர சக்தியைச் சார்ந்திருக்கின்ற தென் பது தெளிவாகின்றது. பிள்ளை உறுதியான உடல் வளர்ச்சியைப் பெற்று சமூகத்தில் சிறந்த ஒரு பிரசையாவதற்கு உடற்கல்வி சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும்.

உடற்கல்வியானது பொதுக்கல்வியின் ஒரு பகுதியே யாகும். உடலியக்கங்களின் துணை கொண்டு உடல் நலம், உளநலம் ஆதியனவற்றை மாணுக்கன் பெறவும், முறைப்பட்ட உடற் செயல்களின் வழியே சிறந்த சமூகப் பண்புகள் அவர்களிடையே எழவும் உடற்கல்வி உதவுகின்றது. இதன் விளைவாகத் தடைகள், குறுக்கீடுகள் போன் றன வின்றி மாணுக்கர்களின் பொதுக் கல்வி முன்னேறுகிறது. கல்வியின் இலக் கை அடைவதற்கும் உடற்கல்வி துணை செய்கின்றது; உடற்கல்வி உடல்நலத் திற்கு அடிப்படையாகும். சிறந்த குடிமைப் பண்புகளது வளர்ச்சிக்கும் உதவுகிறது. ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிடவும், மாணுக்கர்களுக்கு உதவுகின் றது; அன்றியும் ஒவ்வொரு மாணுக்கனும் தனது ஆற்றலுக்கேற்ப உடல்நலன்களை வளர்த்துக்கொள்ள பல வாய்ப்புகளை அமைத்துக் கொடுக்கிறது. மாணுக்கர்களது சுய ஆற்றலை வெளிப்படுத்துகிறது; கூடிய அழகுணர்ச்சியின் வளர்ச்சிக்குத் துணை செய்கிறது.

இன்னும் சற்றுச் சிந்திப்போமாயின் அறிவு மனதிற்கு எத்துணை அவசியமோ அவ்வாறே உடலிற்கு உடற்பயிற்சியும் அவ சியமானது. ஒரு குழந்தையானது பிறந்து அன்பினால் வளர்ந்து வருகின்றான். அவன் தொட்டிலில் கிடக்கும்போது சும்மா கிடக் கிறானா? இல்லை; தனது உடம்பை அசைக் கிறான்; பின் பலவித பாவனைகளைச் செய்து எத்தனையோ விதமான விளையாட்டுக்களைச் செய்கின்றான்; இதனாலே அக்குழந்தை சந் தோஷத்தை அனுபவிக்கின்றது. பெற்றோ ருக்கும் மகிழ்ச்சியை ஊட்டக்கூடியதும், சுறுசுறுப்பானதுமான, சந்தோஷமான செயல்களைச் செய்து காட்டுகின்றான். இவ் வாறான நிலையில் வளர்ந்து வரும் பிள்ளை பாடசாலைக்கு வருகிறான். அங்கு வந்ததும் அங்கிருக்கும் நிலையைப்பார்த்து அஞ்சுகி றான். பின் ஒருவாறு அச்சம் தெளிகிறான். தெளிந்ததும் அவனது மூல ஆசைகள் எங்கே என்று சிந்திப்பின் விளையாட்டில் அல்லவா சேருகின்றது; இதனாலன்றோ உள நூலறிஞர்களும் பெரும்பாலும் பிள்ளைக ளின் ஆரம்பக்கல்வி விளையாட்டுடன்தான் அமைய வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

உடற்கல்வியின் நோக்கம் பற்றிச் சிறிது ஆராய்வோம்; இது பிரதானமாக நன்றாக அசையும் சக்தி, உடம்பு முழுவ தையும் நன்மை அடையச் செய்தல், பலம் அதிகரித்தல், அத்துடன் இரத்தோட் டத்தை அதிகரிக்கச் செய்தல், சீரான சக்தியை ஆக்கல், மனச் சுறு சுறுப்பு, சந்தோஷம் என்பனவும் உண்டாகின்றன. ஒழுங்கீனமாக இருக்கும் அவயவங்களை நன் னிலைப் படுத்தல், சோம்பலை நீக்கி மூளைக்கு ஆறுதல் கொடுத்தல்; இதனால் புத்தியை வளரச்செய்து ஒருபிள்ளையைச் சமூகத்தில் பிரயோசனமுள்ள மனிதனுக்குவதற்கும் ஏதுவாக இருக்கின்றது;

அடுத்தபடியாக உடற்கல்வியினால் குழந்தைகளின் மூல ஆசைகள் பூரணம் அடைகின்றன, விருப்புடன் பாலன் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் கற்றுக்கொள்வான்; எந்நேரமும் விழிப்பாயிருப்பான். கீழ்ப்படிவு, தன்னடக்கம், ஒற்றுமை, தன்னம்பிக்கை, பொறுமை, விடாமுயற்சி என்னும் நற்குணங்களைப் பெறுவான். எவ்வித கஷ்டம் வரினும் அதனைப் பொருட்படுத்தாதிருக்கும் வன்மையை அடைவான். தனது கட்சிக்காகப் போராடும் பயிற்சியினாலே தனது குடும்பம், நாடு, தேசம் என்பவற்றிற்காக உழைக்கும் ஆற்றலைப் பெறுவான். மற்றவர்களுக்காக அனுதாபம் காட்டும் தன்மையும் தன்னுடன் எதிரியாக இருப்பவர்களுடனும் ஒத்துழைக்கும் தன்மையும் அடைவான்.

மேலும் உடற்கல்வியின் அவசியத்தை ஆராயுமிடத்து முற்காலத்திலே உடற்கல்வி என்ற பாடமே இல்லாதிருந்து வந்தது. பாடசாலை தொடங்கிய நேரம் முதல் முடியும்வரையில் மாணவர்கள் ஓரிடத்திலிருந்தே எழுதுவதும் படிப்பதும் வழக்கமாக இருந்து வந்தது. இதனால் அவர்களுக்குச் சோம்பல் உண்டாகவே கற்பதும் அவர்களுக்குப் பலன் அளிக்காது இருந்து வந்திருக்கும். அவர்களுடைய உடம்பும் போதியளவு வலுவடைந்திருக்க மாட்டாது. வீட்டுவேலை, தோட்டவேலை, நெசவுவேலை போன்றவற்றைச் செய்பவர்களே உடல் வலுப் பெற்றிருக்க முடிந்திருக்கும். மற்றையோர் புத்தகப் பூச்சிகளாகவும், சோம்பலுடையோராகவும் இருந்து வந்தார்கள். 1933-ம் ஆண்டளவிலே இப்பாடமானது பாடவிதானத்தில் சேர்க்கப்பட்டு பல பாடசாலைகளிலும் ஒரு பாடமாக இடம் பெற்றுள்ளது. இதனால் சந்தோஷமாகப் பிள்ளைகளும் கற்க ஆரம்பித்தனர். எனவே வருங்கால மேதாவிகளாகவும், சிறந்த பெற்றோராகவும் வருவதற்கு மாணவர்க்குத் தயார் செய்வது உடற்கல்வியேயன்றி வேறெதுவும் இல்லை என்பது புலனாகும்.

எனவே உடற்கல்வியானது திறம்படச் செயற்பட வேண்டுமானால் பின்வரும் இயல்புகளைப் பெற்றுக் காணப்படல் வேண்டும். மன நிறைவினையும், மகிழ்வினையும் அளிக்கத்தக்க உடற்பயிற்சி வாய்ப்புகளை எல்லா மாணவர்களும் பெறுமாறு உடற்பயிற்சித் திட்டம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவ் வாய்ப்புக்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்வதினால் அவர்கள் உடல், உள, நலம்பெற்று வாழவேண்டும்; சமூகப் பயனுள்ள அனுபவங்களைப் பெறவேண்டும்; தலைமைப் பண்புகளும் ஆட்டப் பண்புகளும் எழல்வேண்டும். மாணாக்கர்களது வேறுபட்ட கவர்ச்சிகள், திறன்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப உடற்பயிற்சித் திட்டம் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்படல் வேண்டும். பெரும்பான்மையான மாணவர்கட்கு அவர்களால் முடிந்த சாதாரண அளவு உடற்பயிற்சிகளைப் பெற வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதுடன் திறன் மிக்கோர்கட்கான உயர் வாய்ப்புகளும் உடற்பயிற்சித் திட்டத்தில் அமையவேண்டும். அன்றியும் பிற பள்ளி மாணாக்கர்களுடன் போட்டியில் ஈடுபடுவதுடன் அகப்பள்ளி ஆட்டமும் உடற்பயிற்சித் திட்டத்தில் இடம்பெற வேண்டும்.

திருமதி த. மயிலுப்பிள்ளை
இரண்டாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆரம்ப எண்கணிப்புகள்

கணிதம் இன்னதென்று விளக்க முயல்வது விளக்க முடியாத ஒன்றினை விளக்க முயல்வதாகும். கணிதம் தனிக்கலைப் பண்பு. கணிதம் அறிவுக்கூர்மையுடையோரின் தனிச்சிருஷ்டிப்பு. உரிமையானதன்று. மக்களாட்சியில் வாழ்வதற்குத் தேவைப்படும் அறிவின் இன்றியமையாத பகுதியாகும். இவற்றின் அடிப்படைக் கருத்துக்கள் பரந்துபட்ட அன்றாடச் செயல்களிற் பயன்படும் உண்மையை விழிப்புடன் கவனிப்பதேயாகும். கணிதத்தின் படிமுறைகள், செயல் முறைகள், கலைநுணுக்கத் திறமைகள் பற்றி அறிமுகமில்லாத ஒருவர் உயிர்வாழத் தகுதியற்ற நிலை இன்று ஏற்படுகின்றது. வரிசைப்படுத்தல், எடை மதிப்பிடல், எண்ணல், அளத்தல், தொடர்புபடுத்தல், பிரித்தெடுத்தல், போன்ற படிமுறை மூலம் கணிதக் கருத்துக்கள் வளர்வதை நாம் பாராட்ட வேண்டும், அளவுபற்றிய மொழியாட்சி அன்றாட மொழியாட்சிக்கும் புறம்பானதன்று. அன்றாட வாழ்வில் பெருமளவில் கணிதம் பயன்படும் பகுதி கொடுக்கல் வாங்கல் பகுதியாகும். எனவே இக் கொடுக்கல் வாங்கலுக்கு வேண்டிய செய்கைகள், கணிப்புகள் ஆகியவற்றில் நாம் திறமையாய் இருத்தல் அவசியமாகும்.

ஆரம்பகாலத்தில் கணிதம் ஓர் ஓய்வு நேரப் பொழுது போக்காகப் பயன்பட்டது இப்போது இவ்வியல்பு படிப்படியாக விரிவடைந்து விசித்திர எண் சதுரங்கள், எண் வரிவடிவக் கருத்துக்கள், எண் இயல்கள் விளையாட்டு இயல், இயற்கை, சிற்பம், சித்திரம் போன்றவற்றின் வடிவமைப்பின் ஆய்வாக விளங்குகிறது.


7000 ஆண்டுகளுக்கு முன் மனிதன் பஞ்சாங்கம் தயாரிக்கத் தொடங்கினன். அவற்றின் கலாச்சாரங்கள் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு முறைகளையும் குறிகளையும் பயன்படுத்தினன். ஆனல் எண்ணி எழுதுதல் எளிய கணிப்புகள், செய்தல் பற்றிய பதிவுகள் 5000 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டன என்று கூறுவது மிகையாகாது. கணித நூலில் தந்துள்ள எண்குறிகளில் வடிவங்களைப் பற்றி உரையாடுவோமாகில் உரோமர் முறையிலும், இந்து அராபிய முறையிலும் எண்களின் வடிவங்கள் உள,

உ-ம்:— ஒரு தேங்காய் வியாபாரியும், மாங்காய் வியாபாரியும் தேங்காயும், மாம்பழமும் சம விலையானவையென ஒத்துக்கொண்டனர். ஆனல் அவர்களால் எண்ண முடியாது. எவ்வாறு பண்டமாற்றுச் செய்வர்? இதில் ஒன்றுக்கொன்றுன ஒத்தியைபை ஏற்படுத்த வேண்டும். எண்களின் தொகைக்கும் எண்ணப்படும் பொருளுக்குமிடையில் ஒன்றுக்கொன்றுன ஒத்தியைபை ஏற்படுத்துவதே எண்ணுதலாகும். நாங்கள் பத்துப்பொருட்களை எண்ணியபின் 10 என்று எழுதுவது கால்விரலில் ஒன்றும் கைவிரலில் ஒன்றுமில்லை என்றும் கூறுவதை ஒத்ததாகும், பல்வேறு எண்களை இவ்வாருக எண்ணி விளக்கலாம். இம் முறையில் 10 கால்விரல்களில் 100 உம், 10 கைவிரல்களில் 10 உம் சேர்ந்து 110 வரை எண்ணலாம். இதைப் பயன்படுத்த 3, 4 கம்புகளுடைய ஓர் எண்சட்டம் ஆக்கலாம். எண்ணிகளாக நூல்கட்டைகள், புன்னை விதைகள், தீப்பெட்டிகள், சிகரேட் பெட்டிகள் முதவியவைகளை உபயோகிக்கலாம். ஒவ்வொரு கம்பிலும் 9 எண்ணிகள் மட்டும் கொள்ளத்தக்கதாகவே அமைத்தல் வேண்டும். ஒவ்வொரு எண்சட்டத்திலும் 36 எண்ணிகள் அமையவேண்டும். ஒன்றுகளின் தடி நிரம்பியவுடன் 10-வது எண்ணியைப் பத்துக்களின் தடியில் இடவேண்டும். ஒன்றுகளின் தடியிலுள்ள 9 எண்ணிகளையும் எடுத்துவிடல்வேண்டும். பத்துக்களின் தடி நிரம்பியவுடன் 10-வது எண்ணியை நூறுகளின் கம்பிலிட்டு பத்துக்களின் தடியிலுள்ள 9 எண்ணிகளையும் அதிலிருந்து எடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்ற பல தடிகளைப் பயன்படுத்தி ஏனைய தானங்களையும் கணிக்கலாம். ஒரேவிதமான எண்ணிகள் கொண்ட இரு சட்டங்களைப் பயன்படுத்திக் கூட்டல், கழித்தல் செய்யலாம்.




2316 ஐயும், 1247 ஐயும் கூட்டும் பொழுது ஒன்றுகளை, ஒன்றுகளுடனும், பத்துக்களைப் பத்துக்களுடனும், நூறுகளை நூறுகளுடனும், ஆயிரங்களை ஆயிரங்களுடனும் கூட்ட வேண்டும்.

இப்பொழுது நாடுமுழுவதும் நடைமுறையில் இருக்கும் எண்முறை 10ஐ அடியாகக் கொண்டமுறை (Decimal System, Base 10) இம் முறையில் 0,1,2,3,4,5,6,7,8,9 ஆகிய பத்துக் குறியீடுகளே உபயோகிக்கப் படுகின்றன. இம் முறையில் இடப் பெறுமானம் 10 மடங்காகச் செல்கிறது. இதைப் பற்றி அநேகமாக ஆரம்ப வகுப்புகளில் படித்திருப்போம்.

1000 என்ற எண்ணில் 1 ஆனது 4 வது இடத்திலும்
100 ,, ,, 1 ஆனது 3 ,, ,,
10 ,, ,, 1 ஆனது 2 ,, ,,
1 ,, ,, 1 ஆனது 1 ,, ,, உள்ளது.

5236 என்ற எண்ணில்

| | | | |
|---|---|---|---|
| 6 ஆனது | 1 வது இடத்திலுள்ளது; | அதன் பெறுமதி | 6 |
| 3 ,, | 2 வது ,, | ,, ,, | 30 |
| 2 ,, | 3 வது ,, | ,, ,, | 200 |
| 5 ,, | 4 வது ,, | ,, ,, | 5000 |
| | | | 5236 |

எனவே 1 வது இடம் ஒன்றுக்களையும்
2 ,, ,, பத்துக்களையும்
3 ,, ,, நூறுக்களையும்
4 ,, ,, ஆயிரங்களையும் இவ்வாறு தொடர்ந்து குறிக்கும்;
ஒரு இடத்தின் பெறுமானம் அதன் வலதுபக்கத்திலுள்ள இடத்தின் பெறுமானத்தைப் போல் 10 மடங்காகும், இதனாலே தான் இம்முறை பத்தடி (Base 10) முறை எனக் கூறப்படுகிறது. பின்வரும் அட்டவணை கூடிய விளக்கத்தைத் தருகின்றது;

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 4 | 3 | 2 | 1 | இடம் |
| $10^5$ | $10^4$ | $10^3$ | $10^2$ | $10^1$ | $10^0$ | வலுமுறை |
| 100,000 | 10,000 | 1,000 | 100 | 10 | 1 | இடப்பெறுமானம் |
| 3 | 1 | 2 | 8 | 5 | 4 | எண் = 312854 |

எந்த எண்ணையும் வலுமுறையில் சுருக்கமாக எழுதலாம்.

$100 = 10 \times 10 = 10^2$

$1000 = 10 \times 10 \times 10 = 10^3$ இதே போல வலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் எண்களையும் விரித்தெழுதலாம்,

$$10^3 = 10\times10\times0 = 1000$$
$$10^5 = 10\times10\times10\times10\times10 = 100{,}000$$
$$10^1 = 10 = 10$$

எந்த எண்ணுக்கும் வலு 1 ஆக இருந்தால் அதன் பெறுமதி அந்த எண்ணாகவே இருக்கும்; அதே போன்று எந்த எண்ணுக்கும் வலு 0 ஆக இருந்தால் அதன் பெறுமதி எப்பொழுதும் 1 ஆகவே இருக்கும்;

உ+ம்;— $345 = (3\times100) + (4\times10) + (5\times1)$
$= (3\times10^2) + (4\times10^1) + (5\times10^0)$

இங்கு 3 நூறுகளும் — $3\times10^2 = 3\times100 = 300$
4 பத்துக்களும் — $4\times10^1 = 4\times10 = 40$
5 ஒன்றுக்களும் — $5\times10^0 = 5\times1 = 5$
345

இதே போன்று ஈரடி முறை, 4 அடி முறை, 5 அடி முறை ஆகிய பல எண்களை அடியாகக் கொண்ட முறைகள் உள, அதில் ஈரடி முறை அல்லது துவித வடிவ முறையைப் பார்ப்போமாகில் இம்முறையில் 0, 1 ஆகிய இரு இலக்கங்களே உபயோகிக்கப்படுகின்றன; இது மிக இலகுவான முறை; இதன் காரணமாக இம் முறை கணனிப் பொறிகளில் (Computer) உபயோகிக்கப்படுகின்றன; இம்முறையில் ஒரு குறைபாடு என்னவெனில் பெரிய எண்கள் மிகமிக நீண்டவையாக இருப்பதே;

உ-ம்; 716ஐ எடுத்துக் கொண்டால் 1011001100ஆக எழுத வேண்டும். பத்தடி முறையில் 3 இலக்கத்தில் எழுத வேண்டியதைத் துவித வடிவ முறையில் 10 இலக்கங்களில் எழுத வேண்டி இருக்கிறது. ஒரு எண் எந்த முறையில் எழுதப்படுகிறது என்பதை அந்த எண்ணின் கீழ் வலது பக்கத்தில் குறித்துக் காட்டப்படும்.

உ+ம்: $15_{10}$ — பத்தடி முறை
$15_8$ — எட்டடி ,,
$15_5$ — ஐந்தடி ,,
$15_4$ — நாலடி ,,
$15_2$ — துவித அடி ,,

இம்முறைகளிலும் ஒரே குறியீடு (15) இருந்தாலும் இவற்றின் பெறுமதி ஒன்றல்ல. கீழே குறியீடு போடப்படாவிட்டால் அவ்வெண்கள் பத்தடி முறையையே குறிக்கும். துவித வடிவமுறையின் இடப்பெறுமானத்தைப் பார்ப்போமாகில்,

| துவித வடிவமுறை | | | | பத்தடி முறை |
|---|---|---|---|---|
| 1-ம் | இடம் | ஒன்றுக்களையும் | $= 2^0 = 1$ | $10^0 = 1$ |
| 2-ம் | ,, | இரண்டுக்களையும் | $= 2^1 = 2$ | $10^1 = 10$ |
| 3-ம் | ,, | நாலுகளையும் | $= 2^2 = 4$ | $10^2 = 100$ |
| 4-ம் | ,, | எட்டுக்களையும் | $= 2^3 = 8$ | $10^3 = 1000$ |
| 5-ம் | ,, | பதினாறுகளையும் | $= 2^4 = 16$ | $10_4 = 10{,}000$ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை அட்டவணைப்படுத்துவோமாகில்,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 4 | 3 | 2 | 1 | இடம் |
| $2^4$ | $2^3$ | $2^2$ | $2^1$ | $2^0$ | வலுமுறை |
| 16 | 8 | 4 | 2 | 1 | இடப்பெறுமானம் |
| 1 | 1 | 0 | 1 | 1 | எண் $= 27_{10}$ |

சில எண்களை துவித வடிவ முறையில் எழுதுவோமாகில் ஒன்றை எழுத வேண்டுமானால் 1-ம் இடத்தில் 1ஐ எழுத வேண்டும். 2ஐ எழுத வேண்டுமானால் 2-ம் இடத்தில் 1ஐ எழுத வேண்டும். 3ஐ எழுத வேண்டுமானால் 2-ம் இடத்தில் 1ஐயும், 1-ம் இடத்தில் 1ஐயும் எழுத வேண்டும். 10ஐத் துவித வடிவ முறையில் எழுத வேண்டுமானால் இடப்பெறுமானம் 8இன் கீழ் 4-வது இடத்தில் 1உம், இடப்பெறுமானம் 2இன் கீழ் 2-வது இடத்தில் 1உம், ஏனைய இடங்களில் 0உம் எழுத வேண்டும்; $10_{10} = 1010_2$ துவித வடிவ முறை எண்களைப் பத்தடி முறையிலும் பார்க்கலாம்:

$$\text{உ-ம்:}\quad 1101_2 = 8 + 4 + 0 + 1 = 13_{10}$$
$$1111_2 = 8 + 4 + 2 + 1 = 15_{10}$$
$$11110_2 = 16 + 8 + 4 + 2 + 0 = 30_{10}$$

இதே போன்று பத்தடி எண்களைத் துவித வடிவ முறையில் பின்வருமாறு எழுதலாம்:

$23_{10} =$

| 16 | 8 | 4 | 2 | 1 |
|---|---|---|---|---|
| 1 | 0 | 1 | 1 | 1 |
| ↓ | ↓ | ↓ | ↓ | ↓ |

$$16 + 0 + 4 + 2 + 1 = 23_{10} = 10111_2$$

ஆகவே கணிதம் பயிலும் மாணவர்களாகிய நாம் நவீன முறைகளைக் கண்டுபிடித்துக் கணித நெறியை முன்னேற்ற வழிவகைகளை வகுப்போமாக.

திருமதி மே. நொ. வி. மிராண்டா,
(இரண்டாம் வருடம்)

> "இவ்வுலகில் பிறரின் உதவியின்றித் தனித்து வாழமுடியாது. ஆகவே, அனைவருடனும் கூடி வாழப் பழகிக்கொள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்தின் தயக்கம்

மனிதன் சந்திரனில் காலடி எடுத்து வைத்துவிட்டான். விஞ்ஞானத்தால் ஆகாதது என்ன? மனித வாழ்வை அவன் விருப்பப்படி அமைக்க அவனால் முடியும், என மார்தட்டிக் கூறுகின்றனர் நம்மிடையே வாழும் புதுமைப்பித்தர்கள். ஆனால் புத்தம் புதிய கலைகள் வளரும் மேற்கே, கடந்த சில நூற்றாண்டுகளாக வளர்ந்தோங்கிய விஞ்ஞானம் இப்போது ஒரு புதிய திருப்பத்தை அடைந்துள்ளது. மனித இனத்தை உய்விக்க நம்மால் முடியும் என வாய்ப்பறை அறைந்தவர்கள் இப்போது, "நம்மால் என்ன செய்ய முடியும்?" நாம் ஒன்றும் அறியோம்" எனக் கையை விரித்து, வாய்மூடி மௌனிகளாய் நிற்கின்றனர். நம் நாட்டுக் கல்வித்திட்டத்தை உருவாக்கும் நிபுணர்கள் இப்புதிய கருத்துக்களை மனதுட் கொண்டு நம் இளைஞரைப்பயிற்றும் முறைகளை வகுப்பது நல்லது.

கருத்துலகத்தில் விரைவான மாற்றம் ஒன்று நிகழப்போகும் உணர்ச்சி சிந்தனையாளரிடையே எழுந்துள்ளது. கடந்த சில தசாப்தங்களாகக் கற்றோர் உள்ளத்திற் கொலுவீற்றிருந்த கருத்துக்கள் தாக்கப்பட்டுள்ளன. அக்கருத்துத் தாராண்மைவாதம், பகுத்தறிவுவாதம், விஞ்ஞானவாதம் எனப்பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தது. (இவை ஒரே விடயத்தைக் குறிப்பன. அல்ல, ஆனால் தொடர்புடையவற்றையே குறிப்பன.) ஆனால் மனிதன் தனது உலகைத் தன்கட்டுப்பாட்டுக்கள் வைத்திருக்க முடியும் என்ற நம்பிக்கை பெரிதும் குறைந்துள்ளது. தொழில் நுட்பவியல் ஓர் ஆபத்தான தோழன் எனக் கண்டுள்ளனர். முன்னேற்றம் என்ற கருத்தில் ஐயம் எழுந்துள்ளது. பரிணாம வாதிகள்கூட இத்தளர்வு நிலையை அடைந்துள்ளனர். அவர்களது நம்பிக்கை இப்போதுள்ள நிலையில் இருக்கும் மனிதன்மீது இல்லை. மாறிவரும் ஆதிமனிதன் மீதே உண்டு.

பலகாலமாக மதிப்புடன் விளங்கிய இருமைப்பட்ட கருத்து நிலை தளர்ந்துவிட்டது. ஐரோப்பாவில் மத்தியகாலத்தில் நிலைபெற்றிருந்த தெய்வத்தை நடுமையமாகக் கொண்ட உலகில், இந்தப் பூமி, ஆண்டவன் நம்மை உய்யக்கொள்கின்ற ஆறு என்ற நம்பிக்கையுடன் கூடிய மனிதன் ஒரு முழுமைபெற்ற அண்டத்தில் வாழ்ந்தான். அம்மையும் இம்மையும் ஒரு தெய்வீக பொருளாதாரத்தில் இணைந்திருந்தன. ஆனால், மறுமலர்ச்சிக் காலத்தில் எழுந்த சக்திமிக்க மனிதாயதவாதமும், விஞ்ஞானப்புரட்சியால் விளைந்த பொறிமுறைத் திருஷ்டியும் அம்முழுப்புவனத்தைத் தூளாக்கி விட்டன. மூன்று நூற்றாண்டுகட்கு மேலாக மேனாட்டு நாகரிகம் அப்பூரண அண்டத்திற்குப் பதிலாகப் பிரஞ்சு மெய்யியலறிஞர் றெனே டெக்காட்டின் (1596—1650) கருத்தில் முகிழ்த்த ஒரு பிளவுண்ட அண்டத்தில் வாழ்ந்து வந்துள்ளது. ஒரு சமயவாதியும் ஆனால், பகுத்தறிவாளருமான டெக்காட் மனிதன் தான் அளந்தறியவல்ல உலகம் ஒன்றைப் பற்றி மட்டுமே உண்மையைக் காட்ட முடியும் என்று வாதித்தார். ஆன்மீக உலகு அவ்வித அளவுக்கு அப்பாற்பட்டது; நம்பிக்கைக்கும் உள்நோக்குக்கும் உரியது; சுட்டிக்காட்டக்கூடிய உண்மையன்று. 'டெக்காட்' ஒரு சுயநிறைவுத் தீர்க்கதரிசியானார். ஆன்மீக உலகு தத்துவப் பேரறிஞர்களிடமும் மதவாதிகளிடமும் விடப்பட்டது. அவர்களுள் அநேகர் அவரைப்போலவே ஒரு பக்கசார்புடைய நம்பிக்கையுடையோர்; அதாவது தமது அறிவுத்துறை நிலையற்றது தானே எனக்கருதுபவர். ஆனால் பௌதிக உலகு மேனாட்டு விஞ்ஞானத்தின் ஆட்சிக்குட்பட்டது; இருப்பினும் மனிதன் சிலசமயம் அவ்வுலகின் எஜமானன் போலன்றி அதன் "மெக்கானிக்" போலவே காணப்பட்டான்.

இப்பொழுது உலகாயதம் வெறுமை உற்றுவிட்டது என்ற உணர்ச்சியோடு, பலர் இந்த இருமை நோக்குக்குச் சவால் விடுகின்றனர். அவர்களது சவாலுக்கு ஒரு காரணம், தற்போது புதிதாக எழுந்துள்ள உயிரியலின் ஒரு துறையாகிய பிராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பழக்கம், வாழ்க்கை முறை, சூழலுக்கும் அவற்றுக்குமுள்ள தொடர்புபற்றிய சாஸ்திரத்தின் (Ecology) மீதுள்ள கவனமாகும்; (இத்துறை ஏதாயினும் ஒரு உயிரின் இறப்பு எல்லாவற்றையும் குறைக்கின்றது;) என்ற யோன்டொனின் போதனையை வலியுறுத்துகின்றது. மற்றொரு காரணம் சந்திரனிலிருந்து விண்வெளிக்கப்பல் போலப் பூமியைப் பார்த்த காட்சி மனத்தில் இடையிடையே தோன்றி நாம் கர்வமடைந்திருந்த இம்மாபெரும்பூமி எவ்வளவு அற்பமானது என்ற எண்ணத்தை விளைவிப்பதாயிருக்கலாம்;

1970-க்குப் பிந்திய ஆண்டுகளில் நிகழ்ந்துவரும் சிந்தனை மாற்றத்தின் நடுநாயகமாகத்திகழ்வது, மனிதனும் அவனுடைய அண்டமும் அவன் சமீபகாலம் வரை நினைத்திருந்ததிலும் பார்க்கச் சிக்கலானது என்பதே. இவ்வாறு நிபுணர்கள் தாக்குதலுக்குள்ளாகின்றனர். (சிலர் சுயவிமர்சனத்தின் காரணமாகத் தமது அதிவிசேட அறிவுரிமையைக் கைவிட்டு விட்டனர்.) ஏனெனில் அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவென்று கண்ட ''மருந்துகள்'' விளம்பரம் செய்ததிலும் குறைந்தபயன் தருவனவாகவே காணப்படுகின்றன; அன்றேல் அவர்கள் முழு மனிதனை அவனுடைய ஒரு பகுதிக்காகப் பலி கொடுத்திருக்கிறார்கள் போலக் காணப்படுகின்றனர்; எல்லாம் நன்மைக்கே எனப் பிரகாசமான எதிர்காலத்தை எதிர்நோக்குவதால் இந்த ஒரு வழியோ அன்றேல் பிறிதொரு முறையோ தான் எப்படியேனும் பிரச்சினைக்கு மாற்று ஆகும் என்ற பிழையான உற்சாகம் பிறந்தது. இப்பொழுதோ வளர்ந்து வரும் அவநம்பிக்கையால் எந்த ஒரு முறையேனும் மனிதன் விதிகளை மீறுதலையும் இடையறுது பிழைவிடுதலையும் தவிர்க்க உதவமாட்டாது என்ற எண்ணமே நிலைத்துவிட்டது.

தற்பொழுது தோன்றியுள்ள இலட்சியப் போராட்டம் சிந்தனையின் எல்லாத் துறைகளையும் ஊடுருவி உள்ளது. இப்புதிய கருத்துக்கள் எல்லாம் புதியன அல்ல, அவை மனித இனத்துக்கு மிகப்பழையனவாயும், பழக்கமானவையாயும் இருக்கலாம். அவை ஒரு தலைமுறையினருக்கு மறுசிந்தனையாயிருக்கலாம்; நடத்தை, மதம், கல்வி, விஞ்ஞானம் ஆகிய துறைகளில் எழுந்துள்ள மறுசிந்தனைகள் சிலவற்றை அவதானித்தல் பயன் தரும்;

ஃப்ரோய்ட்டின் தத்துவங்களைப் பின்பற்றுவோரும் நடத்தைவாதிகளும் (behaviorists) ஏற்றுக்கொண்டுள்ள பிரதான கொள்கைகளுக்கு எதிர்ப்பு எழுந்துள்ளது; சில மானிடவியலறிஞர் மனிதனின் அடிப்படையான தன்மைகளைப்பற்றிப் புதிய கருத்துக்களைக் கூறுகின்றனர். மானிடப் பொறியியலுக்கும் எல்லையுண்டு என்ற தீமைக்கோட்பாட்டுக் கருத்துக்கள் (bess; mishe) வளர்ந்து வருகின்றன.

சமய சிந்தனையில் புதிய போக்குத் தோன்றி உள்ளது. 1970-க்குப் பிந்திய தசாப்தத்தில் உசாவியறியும் சிந்தனையாளர்களிடையே வெளிப்படையாகக் காணப்படும் பேராவல் ஆன்மீக சம்பந்தமானது; ஆன்மீகப்பசி உள்ளவர்களிற் சிலர் புறத்தே தரப்படும் அடிப்படை வாதத்தின் நிச்சயங்கள் (Fundamentalisin) சிலவற்றைப் பருகுகின்றுர்கள். பிறர் மேனாட்டுப் பெந்தோகோஸ்தவியம் அளிக்கும் அக ஆன்மீக அனுபவத்தை நாடுகிறார்கள். இன்னும் சிலர் அதிக பழக்கமில்லாத கீழ்நாட்டு இறை அனுபவ வாதத்தில் உள்ளமைதி பெற முயல்கின்றனர்.

கல்வித்துறையில் பல்வேறு பிரச்சினைகள் நுணுகி ஆராயப்படுகின்றன. உதாரணமாக, அமெரிக்கா சிறப்பான பள்ளிக்கூடங்கட்குச் செல்வதற்குச் சந்தர்ப்பம் அளிப்பதால் அவர்கள் பிற்கால வாழ்வில் சமத்துவம் அடைவர் என்ற வாதம் சரியானதா என்ற விடயம் சர்ச்சைக்குள்ளாகின்றது; பிறப்பினுல் ஏற்படும் வேறுபாடுகள் யாவை? அவை விவேக ஈவை எவ்வாறு பாதிக்கின்றன? என்பன போன்ற விடயங்கள் மறுபரிசீலனை செய்யப்படுகின்றன; தொழிற்பயிற்சியில் மறுபடியும் ஆர்வம் அதிகரித்துள்ளமை பற்றித் தருக்கிக்கப் படுகின்றது; கல்லூரி மாணவர்களிடையில் கல்வியை விட்டு வெளியேறுவது பற்றி ஆராயப்படுகிறது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானத்துறையில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. தொழில் நுட்ப சாதனை குறித்துப் பொதுமக்கள் மிகப் பராமுகமாயிருக்கின்றனர். வெறுப்பைத் தெரிவிக்கின்றனர் என்று கூறலாம்; தூய விஞ்ஞானம் ஒரு மர்மமான பாதையில் செல்கிறது. விஞ்ஞானிகளுட் சிலர் பிரச்சனைகளுக்குத் தாம் கட்டும்முடிவுகள் எவ்வளவு அற்பமானவை என உணர்ந்துள்ளனர். எந்தச்சிக்கலையும் விடுவிக்க எம்மால் இயலும், என்ற நம்பிக்கை அவர்களிடையே தளர்ந்து விட்டது;

மேலைத்தேசங்களில் இக்கருத்துக்கள் இன்னும் பெரும்பான்மையோரின் முடிவு ஆகிவிடவில்லை. அவ்வாறு ஒருபோதும் ஆகாமலும் இருக்கலாம், இவற்றால் கசப்புள்ளனவும் பயனற்றனவுமாகிய எதிர்ப்புக்களுண்டாவதும், ஆக்கரீதியான சிந்தனை வளராதிருப்பதும் மட்டுமே பயனாயிருத்தல் கூடும். முன்னேற்றம், முயற்சி ஆகியவற்றை இக்கருத்துக்கள் தாக்குவதால் ஒரு புதிய ''சும்மா இருக்கும் தத்துவம்'' தோன்றக்கூடும். விஷயங்கள் இப்படி இப்படி வரவேண்டுமென முயற்சி செய்வதை விடுத்து ஆகும் காலம் ஆகும் என ஆய்ந்து அடங்கி அமைந்திருத்தலே சான்றோரின் இலட்சியமாதல் கூடும். அன்றேல் தற்போதுள்ள கருத்துக்களுடன், புதிதாய் எழுந்த மாறுபட்ட கொள்கைகள் கலந்து மனிதனையும் சமுதாயத்தையும் பற்றிய அடிப்படைக் கருத்துக்களை மறு பரீட்சை செய்து சீர் திருத்திய புதுப்பிக்கும் போக்குத் தோன்றக்கூடும்;

நிபுணரின் புதியகருத்துக்கள் பொதுமக்களிடையே பரவ நாற்பது ஆண்டுகளேனும் எடுக்குமென அல்டஸ் ஹக்ஸ்லி ஒருமுறை கூறியுள்ளார். மேனுட்டில் முன்வரிசையிலுள்ள சிந்தனையாளர்களினின்று சிந்திப்பவற்றைக் கவனியாது உழுத்துப்போன பத்தொன்பதாம் நூற்றுண்டுக் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு கைத்தொழில் மயமாதல் பொருளாதார முன்னேற்றம் கண்ணுற் காணுத விடயங்களைக் குறித்துக் கவலையேன் என்னும் பகுத்தறிவு வாதம், இவற்றில் காலத்தைப் போக்குவது நம்நாட்டுக் கல்விச் சீரமைப்பாளருக்கு அழகன்று;

திருமதி இலகுப்பிள்ளை,
1-ம் வருடம்.

---

கர்வமுள்ளவன் கடவுளை இழக்கிறன்; பொறுமைக்காரன் நண்பனை இழக்கிறுன்; கோபக்காரனே தன்னையே இழக்கிறுன்.

—ஹால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைமிகு சுற்றுலா

எமது பயிற்சிக்காலம் கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வரலாற்றிலே மறக்க முடியாத அனுபவங்கள் நிறைந்த காலமாகும். இன்பமும் துன்பமும் மலிந்து, பழமையும் புதுமையும் கலந்து இளமையும் முதுமையும் இணைந்து, இணையற்ற அனுபவங்களை அள்ளி வழங்கிய இக்காலத்திலே, எழில் மிகு ஈழத்தின் இயற்கை வளங்களையும், வரலாற்றுச் சிறப்புறு இராசதானிகளையும், பொருள் வளந்தரும் தொழிற்சாலைகளையும், இறையருள் உறை இயற்கைத்தலங்களையும், கண்டு களித்துப் புவியியல், வரலாறு, பொருளாதார அறிவுகளை அனுபவ வாயிலாகப் பெறும் வாய்ப்பொன்றை ஆவலோடு எதிர்பார்த்து ஆயத்தரானோம். திருத்தல யாத்திரைக்குக் குழந்தைகள் குதூகலம் கொள்வதுபோல் யாமும், கனவிலும், நனவிலும் இச் சுற்றுலாவையே சிந்தித்துக் கொண்டு பிதற்றலானோம். சித்திரை விடுமுறை தொடங்குகின்றதே என்ற மகிழ்ச்சியை ஒருபுறம் ஒதுக்கி ஒருவாரகாலம் ஈழத்தின் எழிலை அள்ளிப் பருகப் போகின்றோமே என்ற எண்ணத்தால் எம் உள்ளத்தை நிரப்பினோம். எம் கல்லூரி அதிபரின் ஆசியும், ஏனைய பேராசிரியர்களின் துணைகளும், தூண்டல்களும் எம் மனோரதத்தை விரைவுபடுத்தின.

ஏற்கனவே திட்டமிட்டபடி சித்திரை பிறந்த இரண்டாம் நாள் மாலை 'மெயில்' புகைவண்டி மூலம் கொழும்பை நோக்கிப் புறப்பட்டோம். துணைவந்த பேராசிரியர்கள் மூவருடனும், தொண்ணூற்றொருவரும் கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்தில் எம்மை எதிர்பார்த்துக் காத்து நின்ற தனியார் ஊர்திகள் மூன்றில் நிரப்பப்பட்டு இரத்மலானை இந்துக்கல்லூரியை அடைந்தோம். அங்கு காலைக் கடனைக் கழிக்கவும், வயிற்றுக்கு வஞ்சகம் செய்யாமலிருக்கவும் வசதிகள் அளிக்கப்பட்டன. அங்கிருந்து களுத்துறை சென்று பன்னத் தொழிற்சாலையைப் பார்வையிட்டோம். பின் அங்கிருந்து புறப்பட்டுப் பெந்தோட்டைக் கரையோரமாகவுள்ள தென்றல் தவழும் தென்னைமர நிழலிலே புளிச்சாதத்தை உண்டு மகிழ்ந்தோம். பின் அங்கிருந்து கிக்கடுவக் கரையை அடைந்தோம். இயற்கை இறைவனைப் பிரதிபலித்தது. ஏறக்குறையக் கரையிலிருந்து ஒருமைல் தொலைவிலுள்ள (Coral Gardens) பவளப் பாறைகளைப் பார்வையிட அடித்தளத்தில் ஆடி அமைக்கப்பட்ட இயந்திரப் படகிலேறிக் கடலில் மிதந்தோம். ஆ! என்ன வனப்பு. அன்றலர்ந்த செந்தாமரை போன்ற பாறைகளும், அடுக்கு றோஜா மலர் போன்ற பாறைகளும், கோவாக்குவியல் போன்ற பாறைகளும், அவற்றினூடாக நீந்திக் களிக்கும் அழகிய வண்ண மீனினங்களும் கண்டு இரசிக்கும் வாய்ப்பு எம் வாழ்க்கையிலே கிட்டியதையிட்டுப் பெருமைப்பட்டோம். ஆழ்கடலில் இக்காட்சியும், அருகமைந்த புற்றரைகளில் வெள்ளையரின் வெயிற் குளிப்பும் (Sun Bath) எம்மில் நீங்காத நினைவாக நிலைத்து விட்டன.

இங்கிருந்து மியூசியஸ் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியை நோக்கிச் செல்லும் வழிகளில் ஆங்காங்கு அமைந்த தும்புத் தொழிற்சாலைகளையும் பார்வையிட்டுச் சென்றோம். மாலை 8-30 மணியளவிலே மேற்கூறிய கழகம் அகமும் முகமும் மலர எம்மை வரவேற்று அறுசுவை உண்டிகளையும் அளித்து அமைதியாகத் துயில்கொள்ள வசதிகளை ஆக்கித் தந்தனர். எம் திட்டப்படி இரண்டாம் நாள் கொழும்பு நோக்கிப் புறப்பட்டு இரத்மலானையிலுள்ள மகாராஜா தொழில் ஸ்தாபனத்திற்குச் சென்று வகை வகையான வாசனைப் பொருட்கள், ஓடிக்கொலன், எஸ்லோன் குழாய்கள் போன்ற பொருட்கள் உருவாக்கப்படுவதை நேரிற் கண்டும், செயல்முறைகளைக் கேட்டும் தெளிந்தோம். பின்பு அங்கிருந்து 'பாட்டா' சப்பாத்துத் தொழிற்சாலை சென்று அங்குள்ள ஊழியர்களின் ஒத்துழைப்புடன் பாதணிகள் உருவாகும் படிமுறைகளைப் பார்வையிட்டு வியப்புற்றோம். பின்பு அங்கிருந்து விலகியதும் ஆதிகாலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னங்கள் அழிந்தொழியாவண்ணம் காட்சிப் பொருளாக வைத்துக் காப்பாற்றும் தொல் பொருட்சாலையுள் நுழைந்ததும் அச்சூழல் பூர்வீக இலங்கைக்கு எம்மை ஈர்த்துச் சென்றது.

மிருகக் காட்சிச்சாலை செல்லும் திட்டத்தைக் கைவிட்டுக் கொழும்புத்துறை முகத்தை நோக்கிப் பஸ்வண்டியைத் திருப்பினோம். அங்குள்ளோர் எம்மை அன்புடன் வரவேற்றுப் பாரிய கப்பல்களுள் ஏறிப் பார்வையிடும் வாய்ப்பையும் அளித்தனர்; பின்பு அங்கிருந்து நம் தேசியப் பேரவை கூடும் கட்டிட வெளிப்புறத் தோற்றத்தையும் கண்டு களித்த வண்ணம் காற்று வாங்கக் காலிமுகத்திடலை அடைந்தோம்; களைப்புற்றிருந்த எம்மைத் தடவிச் சென்ற தென்றல் எமது சலிப்புக்கு மருந்தாகியது; பின்பு அங்கிருந்து பல இன்னிசைப் பாடல்களைப் பாடியவண்ணம் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று வேண்டுதல் செய்து விடை பெற்றோம். பின்பு அதன் அயலில் உள்ள சிற்ப வேலைப்பாடுகளில் சிறந்து விளங்கிய பொன்னம்பலவாணேசர் கோயிலையும் தரிசித்துத் தென்னிந்திய சிற்ப வேலைப்பாடுகளின் திறன் கண்டு வியப்புற்றோம். அங்கிருந்து விவேகானந்தக் கல்லூரியை அடைந்தோம். அலுப்புற்றிருந்த எம்மை நித்திரா தேவி இலேசாக அணைக்கவே கல்லூரி வாங்குகளைக் கட்டிலாக்கித் துயிலில் ஆழ்ந்தோம்;

அடுத்தநாள் அதிகாலை 6-00 மணியளவில் ஈழத்தின் இதயத்தை நோக்கி ஏறிச் சென்று கொண்டிருந்தோம். செல்லும் வழியில் கொறகொல்லையில் உள்ள காலஞ்சென்ற பிரதமர் S. W. R. D. பண்டாரநாயகா அமைதியாகத் தூங்கும் கல்லறையண்டை சென்று அஞ்சலி செலுத்தினோம்; அவரின் பஞ்சசீலக் கொள்கைகளை நினைவு கொள்ளும் முகமாக ஐந்து கற்றூண்கள் எழுப்பப்பட்டிருந்தன என்ற காரணத்தைப் பேராசிரியரின் விளக்கத்திலிருந்து அறிந்து கொண்டோம். பஸ் ஏறிப் பிரயாணத்தைத் தொடர்ந்தோம்; வழியேயுள்ள பசும்புற்றரைகள், படிமுறை வயல்கள், மலர்பூத்த மரங்கள், கனிதூங்கும் விருட்சங்கள், காடுகடந்து மேடுதாவிப் பாயும் அருவிகள், உயர்ந்து தோன்றும் மலைகள், இன்னும் சிறகடித்துப் பறக்கும் சிட்டுக்கள், அவைகளின் இன்னிசைக் கச்சேரிகள் எம்புலன்களையீர்க்க அவைகளை அனுபவித்துச் சென்று கொண்டிருந்தோம்; வண்டியிலும் எம் தொண்டைகள் ஓயவில்லை; இயற்கை எழில்மிகு நாடு எது வென்றால் சந்தேகமேயில்லை இலங்கையே தான்; இவ்வளவு அழகிய நாட்டிலே யாம் பிறந்தோமேயென்று இதயம் பூரித்தோம்; வண்டியும் ஓடிக்கொண்டிருந்தது; நாமும் உயரப் போய்க்கொண்டிருந்தோம்; மலைகளைச்சுற்றிச் சுற்றி, நெளிந்து நெளிந்து போய்க்கொண்டிருந்தது பஸ்வண்டி;

இன்னும் எங்கு திரும்பினாலும் மலையின் போர்வையாகக் காட்சி தந்த நம் நாட்டின் செல்வப் பயிர்களான தேயிலை, றப்பர் போன்றவற்றையும் ஆர்வத்துடனும் ஆவல் ததும்பக் கண்டானந்தித்தோம்; ஆர்வங்கள் எம்மை ஊக்குவிக்கவே தேயிலைத் தொழிற்சாலைகளை நோக்கி ஓடினோம்; அங்கு நின்ற தொழிற்சாலை உத்தியோகத்தர் கொழுந்து தேயிலையிலை அடையும் வரலாற்றை எமக்கு விளக்கிக் கூறக் கேட்டறிந்தோம். அங்கிருந்து பேராதனை நோக்கி வந்து கொண்டிருந்தோம். வழியேயுள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்தை வெளிநின்று நோக்கியபின் பஸ் மூலம் சென்று பேராதனைப் பூங்காவிற்குள் புகுந்தோம்; வேதாகமத்தில் உள்ள ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட இன்பவனம் (Garden of Paradice) இதுவாகத்தான் இருக்குமோ என்று ஒரு சந்தேகம் எழுந்தது. இறைவனைத் தேடினோம், கண்டோம் அவ்வியற்கை அழகிலே.

அம்மட்டா! மது நிறைந்த மலரை வண்டுகள் தேடி வருவதும் மலர்கள் அதை ஏற்றுக்கொள்ளும் காட்சிகளும் எம்மை ஆட்கொள்ள அவ்விடத்தை விட்டுப் பிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியா மனநிலைக்குள்ளானோம். அங்கிருந்து உயன்வத்தை ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றோம். அவர்கள் அன்புடன் அளித்த அறுசுவை யுண்டிகளை அருந்திப் புத்தபிரானின் புனிததந்தம் போற்றி வைக்கப்பட்டுள்ள தலதா மாளிகை சென்று வழிபட்டோம். பின்னர் கண்டிமா நகரின் அழகை ரசித்தவண்ணம் கண்டி நவீன சந்தையை யடைந்தோம். விரும்பிய வற்றை வாங்கும்படி உத்தரவு பிறந்ததும் கடிவாளம் தளர்த்தப்பட்ட குதிரைகள் போல்"கண்டிமாக்கெற்"றில் குதித்தோம். பார்த்துப் பரவசம் அடையக்கூடிய விதமாக "மார்க்கட்" அமைந்திருந்தது. எதை வாங்குவது? எதை விடுவது? என்ற ஏக்கம் எல்லோருக்கும். கையிருப்பும் கரைந்தது. காசுகள் பொருள் நிறைந்த கூடைகள் ஆயின. எங்கள் தமிழ்ப் பேராசிரியரும் பெரும் சிரமப்பட்டு எம்மை வண்டியிற் சேர்த்தார். அங்கிருந்து உயன்வத்தை வந்து உவப்புடன் உவந்தளித்த உணவுகளை உண்டு மகிழ்ந்தபின் சிந்தைக்கு விருந்தளிக்கப் பல கலைநிகழ்ச்சிகளை நடத்தி அன்றிரவு கண்ணயர்ந்தோம்.

பொழுது புலர்ந்ததும் தமிழரின் நற்பண்புகளில் ஒன்றாகிய நன்றி நவிலலை நனவிற் கொண்டு சில அன்பளிப்புகளை அவர்களுக்களித்து விடைபெற்று நுவரெலியாவை நோக்கி ஏறிக்கொண்டிருந்தோம். வண்டிக்குள் நாம் பாடிய பாட்டுக்களும் ஆடிய பைலாக்களும் தேடிவந்த குளிரை விரட்டி அடித்தது. குளிரையே உணராதவர்களாய் மிகவும் உற்சாகமாக நுவரெலியாப் பூங்காவிற்குள் சென்று மரநிழலிலே மதிய உணவை உண்டு மகிழ்ந்தோம். அங்கிருந்து கற்றன் நோக்கித் தொடர்ந்தது. பிரயாணம் எப்பக்கம் நோக்கினும் புஸ் ஸ் ஸ் என்ற இரைச்சல். வெண்ணிறச் சேலையை விடாது கக்கிக்கொண்டிருப்பது போன்று தோன்றும் நீர்வீழ்ச்சிகளைக் காண எம் கண்கள் என்ன தவம் செய்தனவோ! கொள்ளை கொள்ளும் அற்புதக் காட்சிகளை அள்ளிப் பருகினோம். பிரயாணமும் தொடர்ந்தது. தலவாக்கெலை கதிரேசன் கோவிலண்டை ஆசிரியர் நல்லையா அளித்த தேநீர்ச் சிற்றுண்டிகள் எமக்கிருந்த களைப்பைப் போக்கின. பின்பு கற்றன் இந்துமா சபையை அடைந்து உணவு தயாரித்துண்டபின் எம் திட்டத்தின் இறுதிக்கட்டத்தை நிறைவேற்றும் ஆவலில் இரவு 10-30 மணியளவில் மஸ்கெலியாவை நோக்கிப் பயணமானோம். நள்ளிரவு நேரம். எங்கும் அமைதி பொங்க அடம்ஸ்பீக்கின் அடிவாரம் அடைந்தோம். அண்ணார்ந்து பார்த்தோம். மின்னொளி கக்கும் விளக்குகள் எம்மை ஏமாற்றிவிட்டன. இறை அருளை வேண்டி நின்று எடுத்தடி வைத்தோம் மலையை நோக்கி.

எம் உடற்பலத்தைவிட மனஉறுதி எம்மை உந்திச் சென்றது. ஏறினோம் இரண்டு கால்களால், ஏறினோம் கால்கள் மூன்றாகப் பின்பு நாலாகின. இளைத்தோம், களைத்தோம், நிமிர்ந்தோம், குளித்தோம் தவழ்ந்தோம், அரோகரா என்றோம். இன்பமும் துன்பமும் இணைந்தது. எத்தனை அனுபவங்கள். எடுத்துக்கூற வார்த்தைகள் தேடுகிறேன். மலை ஏற்றத்தையா அல்லது கோப்பியின் விலை ஏற்றத்தையா எடுத்துரைப்பது. தாவித் தாவி மலை உச்சியை அடைந்தோம். எல்லோரும் சூரியோதயத்தைக் கண்குளிரக் கண்டு இரசிக்க கிழக்கை நோக்கி கண்கொட்டாது நின்றோம். இயற்கை விழித்தது. யாம் மெய்ம் மறந்தோம். ஆ! அதோ, அதோ பொற்பந்தொன்று குதித்தது. சுவர்க்கலோகத்தில் நின்று கொண்டிருப்பது போன்று உணர்ச்சி எமக்கு. ஏறிச் சாதித்தாயிற்றே. அடுத்து இறங்க வேண்டுமே என்று எண்ணியதும் கால் நடுங்கியது. பாயவும் முடியாதே. பக்கத்தில் வருபவரைப் பலமாகப் பிடித்து இளைக்கக் களைக்க இறங்கினோம். நாம் இறங்குவது போல் கோப்பி விலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கியது; உருக்குலைந்த கோலத்துடன் மலையடிவாரத்தை வந்தடைந்தோம்; மேலே அண்ணார்ந்து பார்த்தோம்; தலையைச் சுற்றியது. வாழ்க்கையில் ஒரு பெரிய சாதனையைச் சாதித்த பெருமையுடன் பஸ் அண்டை சென்றோம்: பசியாற உணவை உண்ட பின் கொழும்பு புகைவண்டி நிலையம் நோக்கிப் பறந்தது பஸ்வண்டி. பாட்டில்லை, "பைலா" இல்லை; கண்நிறைந்த தூக்கம்; மலைநாட்டின் வனப்பையும் இடை இடை கண்திறந்து பார்க்கவும் மறக்கவில்லை; வரும் வழியில் நோட்டன் பிறிட்ஜ் வழியாக அவிசாவலை றப்பர் மரங்களையும் நோக்கிய வண்ணம் வந்துகொண்டிருந்தோம்; இரவு 8-00 மணி. பஸ்வண்டி புகைவண்டி நிலையத்தில் தரிக்கவே துணை வந்த பேராசிரியர்களுக்கு நன்றி கூறி விடைபெற்றுப் பிரிந்தனர் பலர்; எஞ்சியோர் வீடு திரும்ப புகைவண்டியுள் ஏறினர். சுவை மிகு சுற்றுலாவும் இனிதே முடிவுற்றது. நேரடி அனுபவங்கள் மூலம் பல விடயங்களைப் பிரத்தியட்சமாகப் பெற வாய்ப்பளித்த எங்கள் அதிபர் அவர்கட்கும், பேராசிரியர்களுக்கும், சென்ற விடங்களிலெல்லாம் ஆகாரமும், ஆதரவும் அளித்த அன்பர்களுக்கும் நாங்கள் என்றும் கடமைப்பாடுடையராவோம்:

திருமதி மெ. அ லெம்பேட்,
இரண்டாம் வருடம்,

செல்வம் இழப்பது ஒன்றும் இழத்தலாகாது, உடல் நலம் இழப்பது ஏதோ சிறிது இழந்தவர்கள் ஆகின்றோம். ஆனால், நற்குணம் இழந்தால் எல்லாம் இழந்தவர்களாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவையில் உதிர்ந்த முத்து

அன்று ஆவணித் திங்கள். பொழுது புலர்ந்தது. கேட்டோம் ஒரு பேரிடி தரும் துயரச் செய்தியை. கலாசாலையே துன்பக் கடலில் மூழ்கி இருந்தது. திருமதி இரத்தினபூபதி நாகலிங்கம் பிரிந்த செய்தி கேட்டு உளம் உடைந்து செய்வதறியாது திகைத்தோர் தம் சகோதரியின் உயிரற்ற உடலைத் தரிசிப்பதற்குப் புறப்பட்டனர்.

அளவெட்டியாம் அவர் ஊரினை நோக்கிப் பறந்தோம்; ஆருயிர் அன்னையைப் பறிகொடுத்த செல்வக் குழந்தைகளின் கதறல் ஒலி, அன்புக் கணவன் தன் அருமை மனைவியைப் பிரிந்து நின்ற பரிதாப நிலை, அன்புடன் பழகிய ஒரு குணவதியைப் பிரிந்த உறவினரின் ஆற்ருமை எம் உள்ளத்தைப் பிழிந்தெடுக்கப் பீறிட்ட துயரம் கண்ணீராகப் பாயச் செயலிழந்து நின்ருேம்; அவரது களங்கமற்ற முகம், நவீன ஓவியம் தீட்டும் கைகள், சுறுசுறுப்பான ஆனல் சாந்தமான நடை, கலகலப்பான பேச்சு, இவற்றை எல்லாம் நாங்கள் இனி என்று காண்போம் என ஏங்கினேம்; "விதியை வெல்ல எவராலும் முடியாது." இறுதியாக அவருக்குச் செலுத்த வேண்டிய எங்கள் அஞ்சலியைச் செலுத்திவிட்டுப் பிரிந்தோம் துயரத்துடன்;

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஓர் ஒப்புயர்வற்ற உத்தம ஆசிரிய மாணவியை இழந்து விட்டது. இரண்டாம் வருட வகுப்பு எண்ணிக்கையிலும் ஒருவரைக் குறைத்துக் கொண்டது. தன் னலங் கருதாது பிறர் நலங் கருதி வாழும் பெருந்தன்மை வாய்ந்த நம் சகோதரி மறைந்தாலும் அவரின் களங்கமற்ற முகத்தையும், கல கலப்பான பேச்சையும், அன்புடன் அளிக்கும் அறிவுரைகளையும், இணக்கமாக வாழும் இயல்பையும் எங்களால் என்றும் மறக்கவே முடியாது.

திருமதி நாகலிங்கம் "கடமையே கண்ணியமென" கருத்திற் கொண்டு கலாசாலையில் நடைபெறும் பொது நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் உதவி புரிந்த உத்தமி. அதிபர், பேராசிரியர்களின் கட்டளைகளைத் தலைமேற் கொண்டு தன்னுலியன்ற கடமைகளைச் சரிவரப் புரிந்து பணியாற்றியவர்; கஷ்டமுற்ற நேரத்தில் கலங்காது நின்று "எல்லாம் அவன் செயல்" எனக் கூறி மனத்தைத் தேற்றும் பண்புடையவர். சாந்தமே வடிவாக அன்பே உருவாக அமைந்தவர்; அவர் எங்களை விட்டுப் பிரிந்தாலும் அவரது உருவம் என்றும் எங்கள் முன் பிரதிபலித்துக் கொண்டே இருக்கும்; அன்னரின் அறிவுரைகள் என்றும் எம் உள்ளத்தை விட்டகலா; அவரின் ஆன்மா சாந்தி அடையவும், அருமைக் குழந்தைகள், அன்புக் கணவர், சுற்றத்தார் ஆறுதல் பெறவும் இறைவனை வேண்டுகின்ருேம்.

— திருமதி கு. குணசிங்கம்,
இரண்டாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா

எமது ஆசிரிய கலாசாலையில் இவ்வாண்டும் பரிசளிப்பு விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் திரு ஜி. என் எட்வேட் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார். அவரது பாரியார் திருமதி எட்வேட் பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கிச் சிறப்பித்தார்.

## பரிசில் பெற்ற பாவையர்

பாடங்கள் :

| | | |
|---|---|---|
| 1. | கல்வி I. : | திருமதி. தி. செல்வகுருநாதன் |
| 2. | கல்வி II. : | திருமதி. இ. தியாகராசா |
| 3. | சமயம் : | இந்துசமயம் : திருமதி. சி. திருஞானசுந்தரம் |
| | | ரோ. க. சமயம்: திருமதி. மே. அந்தோனி துரம் |
| | | கிறீஸ்தவம் : திருமதி. எ. ஏபல் |
| 4. | தமிழ்மொழி : | திருமதி. சௌ. விஜயகமூர்த்தி |
| 5. | கணிதம் : | திருமதி. ம. இராமேஸ்வரன் |
| 6, | சமூகக்கல்வி : | திருமதி. ம. ஞானவேல் |
| 7. | பொதுவிஞ்ஞானம் : | திருமதி. ம. இராமேஸ்வரன் |
| 8. | மனையியல் : | 1. செல்வி. அ. சின்னப்பு |
| | | 2. திருமதி. ச. ஜெயசீலன் |
| 9. | உடற்கல்வி : | செல்வி. ஈ. கி. சின்னப்பா |

தெரிவு பாடங்கள் :

| | | |
|---|---|---|
| 1. | தமிழ்மொழி : | திருமதி. சௌ. விஜயகமூர்த்தி |
| 2. | கணிதம் : | திருமதி. வி. மிராண்டா |
| 3. | சமூகக்கல்வி : | திருமதி. அ. நல்லையா |
| 4. | மனையியல் : | செல்வி. அ. சின்னப்பு |
| 5. | ஆங்கிலம் : | திருமதி. சு. ஏகாம்பரம் |
| 6. | உடற்கல்வி : | திருமதி. தி. செல்வகுருநாதன் |
| 7. | சித்திரம் : | திருமதி. ம. இஸ்ரனிஸ்லோஸ் |
| 8. | நடனம் : | திருமதி. மே புளோரு குரூஸ் |
| 9. | சங்கீதம் : | திருமதி. ச. சிவானந்தன் |

| | | |
|---|---|---|
| 1. | ஒழுங்கான வரவு : | (1) திருமதி. ச. கதிரவேலு |
| | | (2) திருமதி. பா. சேதுபதி |
| 2. | கற்பித்தல் : | திருமதி. ம. இராமேஸ்வரன் |
| 3. | பல்திறன் : | திருமதி. தி. செல்வகுருநாதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் போட்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசளிப்பு விழாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பேச்சுத் திறன் : | செல்வி. அ. விஸ்வலிங்கம் |
| கதை சொல்லுதல் : | மேற்பிரிவு : செல்வி. செ. சுப்பையா |
| | மத்தியபிரிவு : திருமதி. ப. இரத்தினசிங்கம் |
| | கீழ்ப்பிரிவு : திருமதி. ச சிவானந்தன் |
| நடிப்பு : (ஆண்) | செல்வி. அ. விஸ்வலிங்கம் |
| (பெண்) | திருமதி. ச. சிவானந்தன் |
| நாட்டிய நாடகம் : | திருமதி. தி. செல்வகுருநாதன் |

இவ்வாண்டிற்குரிய விசேட சித்திரப் பரிசில் :
திருமதி. ம இஸ்ரனிஸ்லோஸ்

இவ்வாண்டிற்குரிய விசேட சங்கீதப் பரிசில் :
திருமதி. ச. சிவானந்தன்

## சான்றிதழ் பெறுவோர்

| | | |
|---|---|---|
| **சித்திரம் :** | கருத்து வெளிப்பாடு : | செல்வி. இராசையா |
| | அலங்கார ரூபம் : | திருமதி. நீற்ரு பிறெட்றிக் |
| **கைவேலை :** | பனம்பொருள்கள் : | திருமதி. ம. இஸ்ரனிஸ்லாஸ் |
| | தெங்குப்பொருள்கள் : | செல்வி. ச. இரத்தினசபாபதி |
| | கடற்பொருள்கள் : | சிஸ். மேரி. விவியன் |
| **கோலம் :** | | திருமதி. ம. இராமேஸ்வரன் |

## பொதுத் தேர்ச்சித் தராதரப் பத்திரம் பெறுவோர்

திருமதி. சௌ. விஞயகமூர்த்தி
,, ம. இராமேஸ்வரன்
,, தி செல்வகுருநாதன்
,, இ. தியாகராஜா
,, ச. சிவானந்தன்
,, நே. காசிநாதன்
செல்வி. அ. சின்னப்பு
திருமதி. சி. வரதராசா
,, அ. நல்லையா
,, அ. நாகரத்தினம்
,, ஞா. மரியதாஸ்
,, வி. ஜோ. சண்முகநாதன்
,, நொர். வி. மிராண்டா
,, மெ. அ. லெம்பேட்
,, கு. குணசிங்கம்
செல்வி. ந. பிச்சைமுத்து
திருமதி. ம.ஞானவேல்

திருமதி. எஸ்தர் ஏபல்
,, நீற்ரு பிறெட்றிக்
,, லூ. மே. செல்வநாயகம்
,, வி. எ. பெர்ணண்டோ
,, ஜெ. கனகரத்தினம்
,, கி. அ. அகஸ்ரீன்
,, ம. இஸ்ரனிஸ்லோஸ்
செல்வி. கு. கணபதிப்பிள்ளை
திருமதி. பே. வி. பெரேரா
,, சி. திருஞானசுந்தரம்
,, மே. அ. துரம்
,, சு. ஏகாம்பரம்
,, தனலெட்சுமி இரத்தினதுரை
,, மே. புளோரு குரூஸ்
,, ச. தங்கராஜா
சிஸ். விவியன் மேரி.
திருமதி. மே. அ. அ. குரூஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவையூர் உவந்தளித்த ஆசிரியத் திலகங்கள்

1. கைப்பணிப் பாடமென்றால் களிப்புடனே கற்றிடும்
காரிகை தரங்கணி விடுதித்தலைவி அக்னெஸ்

—போளவத்தை

2. ஆண்குரலெடுப்புடன் அரசனாய் நடித்து வண்ணக் கோலங்கள்
வகை வகையாய் அமைத்திடும் சுவர்ண இல்லத்தலைவி அழகம்மா

—திருநெல்வேலி

3. மௌனமே உருவாகி மற்றோருடன் மரியாதையாய் நடந்திடும்
அமிர்தாம்பிகை அம்மாள்

—நாவற்குழி

4. எடுத்த கருமத்தை ஏற்றமுறச் செய்துமுடிக்கும் திறனுடைய
அன்னம்மா. — வங்காலை

5 பிறர்க்குதவி செய்யப் பிறந்தோமென எண்ணிக் கண்ணியமாய்
மற்றோர்க்குக் கடமைகள் புரிவதில் களிப்படையும் நீலாம்பரி
விடுதித்தலைவி அந்தோனியாப்பிள்ளை.

— கொழும்பு

6. உண்டி கொடுப்போர் உயிர்காப்போர் என்பதற்கொப்ப
வகைவகையாம் உண்டிகளை வருவோர்க்குப் பரிமாறும் அரியமலர்.

—நல்லூர்

7. சாந்தமே உருவாகிச் சங்கீதபூஷணமாம் சிலை உருவெடுத்துச்
சிறப்புடன் மேடையில் சித்திரப்பாவைபோல் நின்ற அருமைராணி

—மானிப்பாய்

8. கடமையிற் கண்ணியமாய் நேர்மையும் நீதியும் நிலைத்திட வேண்டுமென
எல்லோருக்கும் தோழியாய் விளங்கும் வகுப்பு மாணவ உப தலைவி
பிலீசியா

—நீர்கொழும்பு

9. கைவேலை செய்வதிற் கரிசனைகொண்டு சலிப்படையாது
எடுத்த முயற்சியை எழிலுடன் செய்யும் செல்லம்மா

—கோப்பாய்

10 துக்கித்தோர் மனதின் துன்பம் துடைத்துக் கலகலவென்று
களிப்புடன் எந்நாளும் சிலேடைக்கதை கூறி ஈசியாய்ச் சிரிக்கவைக்
கும் எலிசபெத் —கொச்சிக்கடை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈராண்டுப் பயிற்சிபெற்று ஏகும் மாணவியர் அதிபர், பேராசிரியர்களுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈராண்டுப் பயிற்சிபெற்று ஏகும் மாணவியர் அதிபர், பேராசிரியர்களுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கல்வியே கருந்தனமென்று கருத்தூன்றிக் கற்றிடும் காரிகை ஜீவராணி

—கோப்பாய்

12. கடுகடென்று கதைத்தாலும் கடுகைப்போல் காரியமாய் கடமையிற் கண்ணியமாய் எல்லோர்க்கும் போக்குவரத்து வசதிகளை அமைத்துத் தரும் சரோஜா

—மன்னார்

13. உடல் நலம் அற்றாலும் படிப்பென்றால், நடிப்பென்றால் துடிப்புற்றுக் கருத்தாய்க் கற்றிடும் காரிகை பிரான்சிஸ்கா.

—கட்டைக்காடு

14. ரோசாச் செடிகளைச் சோராமல் வைத்து சீராகக் காப்பாற்றி கடவுள் பாதம் களிப்புடன் சேர்க்கும் கத்தோலிக்க மன்றத் தலைவி ஞானதீபம்

—கற்றன்

15. கொடுத்த வேலையை மலர்ந்த முகத்துடன் தடுக்காது செய்து முடிக்கும் கிறேஸ்.

—சுன்னுகம்

16. இறைபக்தியும் சாந்தமும் பொறுமையும் பொற்பு டன் அமைந்த கிறேஸ் செல்வராணி

—ஏழாலை

17. விளையாட்டுப் போட்டிகளில் வீரமுடன் பங்குகொண்டு பாங்காய் நடிப்புகளில் பங்குகளும் பற்றிடும் ஜெயமலர் ஊர்

—அச்சுவேலி

18. நாரதராய் நடித்து, ஔவையாராய்ப் பா இசைத்து நங்கையரைக் குலுங்க வைத்த குலசிந்தாமணி

—யாழ்ப்பாணம்

19. கற்பக தருவின் கழிவுப் பொருட்களில் கண்ணைக்கவரும் காட்சிப் பொருட்கள் அமைக்கும் கனகம்மா

—சுன்னுகம்

20. கும்மி கோலாட்டம், குதூகலத்துடன் செய்து கோதையரை மகிழ்விக்கும் விளையாட்டுத்தலைவி எல்சி

—நீர்கொழும்பு

21. வில்லனுக்கோர் இலக்கணம் விநோத விகடக் கதைகளினுல் மற்றவரை மகிழவைக்கும் வசதிக்கட்டணக் குழுத்தலைவி லில்லி ஜோர்ஜினு

—ஏழாலை

22. விடாமுயற்சியும் கடமையிற் கண்ணியமும் எடுத்த கருமத்தைத் தொடர்ந்து முடிக்கும் ஆற்றலுமுடைய நங்கை லூர்து நாயகி

—குருநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. சாந்தமே உருவாகிச் சாமார்த்தியமாய்க் கடமைசெய்து எல்லோரையும் நல்லோராய் மதித்து மகிழச்செய்யும் லூட்ஸ் மேரி

—கொழும்பு

24. கும்மி கோலாட்டமெனின் உள்ளத்தைக் குதூகலிக்க வைக்கும் கட்டழகி மகேஸ்வரி

—வல்வெட்டித்துறை

25. மாலையும் கோலமும் மகிழ்வுடன் செய்து கணித, விஞ்ஞான பாடமென்றால் துடிப்புற்றுக் கருத்தாய்க் கற்றிடும் மகேஸ்வரி

—யாழ்ப்பாணம்

26. மௌனமே காலத்தைப் பொன் செய்யும் மருந்தெனக் கொண்ட மனோன்

—யாழ்ப்பாணம்

27. அமைதியுடனிருந்து ஆறுதலாய்க் கைவேலைகளை அழகாகச் சித்திரிக்கும் கனகாங்கி விடுதித் தலைவி மரியமதலேனு

—கட்டைக்காடு

28. கடுகு சிறிதாயினும் காரம் பெரிதென்பதுபோல சித்திரத்தில் வல்லாளாம் கைப்பணியிற் கையாளாம் எத்திறத்தாரோடும் இயைந்த இயல்பினளாம் மரியம்மா

—சில்லாலை

29. குழந்தை உள்ளம் குலுங்குநடை நகைச்சுவையால் நங்கையரைச் சிரிக்கவைக்கும் கிறீஸ்தவ மன்றத் தலைவி ஏபல்

—கொழும்பு

30. அமைதியுடன் அமர்ந்து ஆர்வமாய்க் கல்விகற்று அன்பாகப் பழகும் இரத்தினராணி

— இருபாலை

31. இங்கிருந்த ஈராண்டில் இலைமறைகாயாக தனிமையில் இனிமைஎன வாழ்ந்த மேரி அலிஸ்

—போளவத்தை

32. மினிர்கின்ற விளக்கேற்றும் மின்சார மந்திரியாம் படக்கென ஒளி நிற்கும்போது வெடுக்கென விளக்கீடு செய்துவைக்கும் கிறேஸ்

— புதுக்குடியிருப்பு

33. கூட்டுறவுப் பணியைக் குதூகலத்துடன் ஏற்று வாட்டமின்றி நடாத்திவந்த மேரி ஜோசபீன்

—புதுக்குடியிருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. மெய்வருத்தம் பாராது மேற்கொண்ட காரியத்தைக் கண்ணியமாய்
நடத்திக் கடமை புரிந்து வந்த உணவுக்குழுத் தலைவி மேரிமலர்

— மன்னார்

35. அடக்கம் மிகக் கொண்டு அமைதியாய்ச் செயல்புரிவாள்
தேனுகா விடுதித் தலைவி மேரி மெற்றில்டா — மன்னார்

36. மாணவ உபதலைவியாய் மாண்புடன் பணிபுரிந்த
நங்கையாள் நோயல் வினிப்பிறீடா

— நீர்கொழும்பு

37. பொதுப்பணி புரிவதே பூவுலகில் நம்கடனென மதித்து
அழையாத இடத்தும் சளையாது பணிபுரியும் அறிபுதமணி

— கொழும்பு

38. பந்தாடும் பாவையாய்ப் பல விளையாட்டுகளில் பங்குபற்றி
சிந்தை மகிழ்விக்கும் சிறப்புடையாள் மேரிதிரேசா

— நீர்கொழும்பு

39. சமயத்துக்கேற்ற சாதுரியக் கதைகளாற் கண்ணனையும் வென்றிடும்
கலங்கா உளம் படைத்த மேரி றீற்று

— சிலாபம்

40. இறைபக்தியும் இடையறாது கடமையில் கண்ணியமும் கொண்டு
வாழும் றீற்று

— நீர்கொழும்பு

41. படிப்பில் முன்னேறின் பாரினில் முன்னேற்றமுண்டென்று
துடிப்புடன் படிக்கும் மேரி திரேசா

— கொழும்பு

42. ஒயிலான நடையும் கிண்டலான கதையும், கடமையிற்
கண்ணும் கொண்ட செலின்

— நீர்கொழும்பு

43. சிப்பியைச் சித்தரித்து சிலைகளாக்கிச் சிறப்புடன் மேடை
அலங்காரம் செய்திடும் சகோதரி மேரி விவியன்

— நீர்கொழும்பு

44. நெஞ்சிலே துணிவுகொண்டு நேர்மையைக் கண்டறிந்து
வஞ்சகமின்றி வகைவகையாய் உணவுகளை வாய்க்கினிமையாய்
அளித்த உணவுக்குழுத்தலைவி மெற்றிலம்மா

— வங்காலை

45. விளையாட்டில் வித்தகியாய் வெற்றிபல ஈட்டி களையாது
ஊக்கமுடன் பழகிடுவாள் மங்கை மொணிக்கா — வங்காலை

46 கவலைவந்த போதிலும் கலங்கா நெஞ்சுடையாள் அன்னநடை போட்டு
அசைந்தசைந்து ஆடிவரும் அணங்கு நசரேத்தம்மா

—நெடுங்கண்டல்

47. கடமையிற் கண்ணியமாய் எல்லோரையும் நல்லோராய்
மதித்து மாண்புடன் பழகும் வகுப்புத் தலைமை மாணவி நேசமணி

—கற்றன்

48. இறை பக்தியும் இடைவிடா வழிபாடும் கொண்டு
பாக்கியமாய் வாழும் பாக்கியலெட்சுமி

—வேலணை

49. சாந்தமே உருவாகி பொறுமையே நிறைவெனப் போற்றி
வரும் நல்லாள் பரஞ்சோதி

—காரைநகர்

50. கலையே உருவெடுத்துக் கண்குளிரக் காட்சிதரும்
பார்வதி —கரணவாய்

51. எடுப்பான தோற்றமும், பேச்சு வன்மையும், கருமமே
கண்ணாய் நடந்துவரும் பத்மாவதி

—மானிப்பாய்

52. கருணையே உருவாகிக் கலங்கி நிற்போரின் கண்ணீர் துடைத்துக்
கவலை போக்கிடும் காரிகையாம் பவுலீனம்மா

—விடத்தல்தீவு

53. குயிலெனவே பாடிடுவாள் நாடகம், நாட்டியமென்றால்
நலமுடனே சென்றிடுவாள் தமிழ் மன்றக் காரியதரிசி பிலோமினா

—புத்தளம்

54. குலுங்கச் சிரிப்பதற்குக் கூத்தாடிக் காட்டிடுவாள்
விகடமாய்ப் பேசி வியப்புப் பெறச் செய்திடுவாள் நங்கை பிலோமினா

—போளவத்தை

55. அடக்கம் மிகக்கொண்டு அமைதியாய் நடந்திடுவாள்
அன்புடனே பழகும் அரிவை பொன்னச்சி

—கிளிநொச்சி

56. அமைதியே உருவாகக் கல்வியில் கருத்தாகக்
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள முனையும் இராசேஸ்வரி

—கந்தர்மடம்

57. சிங்களமொழிதனைச் சீராய்ப்பேசி வரவேற்றிடுவாள்
காரியக் கதையழகி மேரி ஜோசப்பீன்

—கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. நாளாந்த வழிபாட்டில் கருணையுடன் கழகத்தாரை வழிநடத்தும்
இந்துமன்றத் தலைவி இராசம்மா

—கொழும்பு

59. சிவனொளி பாதமலையைச் சீராய்த் தரிசிக்கத் திடங்கொண்டு
நடந்தாள் இராமாமிர்தம்

—யாழ்ப்பாணம்

60. கடமையே கண்ணாய்க் கருத்தொருமித்துக் கண்ணியமாய்
வழிநடத்தும் வகுப்பு மாணவ தலைவி ரூத்மேரி

—கண்டி

61. விதம் விதமாய் விந்தைக் கதைகள் கூறும்
மெல்லிடையாள் இராசமுத்து

—உடுப்பிட்டி

62. சாந்தமும் அடக்கமும் தன்னிடமே உண்டெனச்
சான்று பகரும் நல்லாள் சரோஜினி

—உடுவில்

63. வேடன் உருவெடுத்து விறலியரை விரட்டியடித்துக்
கண்ணுங் கதைபேசும் காரிகை நீற்ரு

—யாழ்ப்பாணம்

64. விடாமுயற்சியும் கருமத்திற் கண்ணும் கொண்ட
வசதிக் கட்டணக் குழுக் காரியதரிசி சின்னப்பிள்ளை

—புலோலி

65. படிப்பினில் முன்னேறின் பாரினில் முன்னேற்றமுண்டென்று
துடிப்புடன் படிக்கும் சரஸ்வதி

—நெடுந்தீவு

66. பொதுப்பணிகள் அனைத்திலும் தன் பொழுதினை அர்ப்பணித்துக்
கல்வியில் முதன்மைபெற்ற தமிழ்மன்றத் தலைவி சௌந்தரம்

—சரவணை

67. இன்னல் இருந்தாலும் ஈசன்செயல் எனக்கவலைப்படையாது
கல்விகற்கும் செங்கோல் மரியை

—மன்னர்

68. பின்னற்கலையுடன் மனையியற் கலையையும் மகிழ்வுடன்
போற்றிடும் தனலட்சுமி

—நல்லூர்

69. முத்தன்ன புன்சிரிப்பால் உள்ளங்களைக் கவரும்
காரிகை சோதிப்பிள்ளை

—யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. பொறுமையின் சின்னமாய் சற்குணமுடையாள்
திரேசம்மா

—சிலாபம்

71. இறைபக்தியும் சாந்தமும் பொறுமையும் நிறைந்த
சகோதரி கிளமென்ற்

—புத்தளம்

72. மெதுவான நடையும் கனிவான மொழியும்
கடமையுணர்வும் நிறைந்த திரேசம்மா

—ஹற்றன்

73. துடுக்கான நடையுடன் எடுப்பாகக் கும்மியடிக்கும்
விளையாட்டு மங்கை தங்கம்மா

—கோப்பாய்

74. பனைஓலையிற் பல்வேறு சோடனைகள்
பகட்டாய்ச் செய்திடுவார் உமையம்மா

—மீசாலை

75. மனையியல் மன்றத் தலைவியாக
மாண்புடன் பணிபுரிந்த மங்கை திரேசம்மா

—கொழும்பு

76. தன்னலமற்ற தையல் தயங்காமல் இரத்ததானம்
இனிது வழங்கினள் டல்சி

—சிலாபம்

77. ஆங்கில மொழியை அழகாகப் பேசி அனைவரையும் அன்பால்
ஆளும் ஆங்கில மன்றத் தலைவி உலகநாயகி

—கோப்பாய்

78. தென்றல் வீசத் துவண்டு விழும் உடலுடையாள்
சுகாதார மந்திரி நாட்டியராணி புளோரா

—நீர்கொழும்பு

79. சைவப் பணியை இன்புடன் ஏற்று நடத்தும்
அமைதியான குணமிக்க உத்தமிப்பிள்ளை

—நாரந்தனை

80. மெய் வருத்தம் பாராது மென்மையுடன் பழகும்
மெல்லியலாள் கொலிற்று

—நீர்கொழும்பு

81. அமைதியாக அயராது உழைத்திடுவாள்
சமயப் பணியைச் சாந்தமாய் ஏற்ற மார்கிறட்

—மன்னார்

82. துன்பம் வந்தாலும் துயரத்தை மறைத்துஇன்பந்துலங்க
இனிமையாகப் பழகும் தொங்கித் தலைவி அன்னலட்சுமி

—ஓமந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. நிமிர்ந்த நடையுடன் கடமையிற் கண்ணாய் இருப்பார்
கலைமலர் இதழ் ஆசிரியை சிவயோகமலர் —சுன்னாகம்

84. கிரமமாகக் கலாசாலைக்கு வருகைதந்து
பெருமைதேடிய பதுமை பாலாம்பிகை —துணுக்காய்

85. அன்பும் பொறுமையும் அருங்குணம் அனைத்தும் பூண்டாள்
சமூகவியல் மன்றத் தலைவி பத்மாவதியம்மா
—புலோலி

86. பட்டெனப்பேசி சிட்டெனச் சிரிக்கும்
மங்கை எலிசபெத்
—கோப்பாய்

87. துடுக்காக நடந்து வெடுக்காகக் கதைத்து
சடுகுடு காரியங்கள்தான் புரிவார் அந்தோனியாப்பிள்ளை
—நெடுந்தீவு

88. அடக்கம் அமைதி மிகக்கொண்டார்
அன்புடன் பணிபுரியும் சிவஞானம்
—கோப்பாய்

89. அமைதிமிகக் கொண்டு இயன்றளவு பயின்று
உயர்ந்தமனங் கொண்டாள் மரியம்மா
—நெடுந்தீவு

90 இசை, நடனம், நாடகத்தால் ஏற்றமிகும் புகழ்படைத்துப்
பல்திறன் படைத்த நங்கை சந்திரமதி
—கல்வியங்காடு

91. ஏற்ற பணியாவும் எழில்பெறச் செய்திடுவாள்
யாவரும் போற்றும் சரஸ்வதி
—நுவரேலியா

92. வாய் திறந்தால் முத்துதிர்ந்து தாய்போல் ஆதரவாய்ப்
பழகிடுவாள் பகிடிபல பகரும் தனபூபதி
—யாழ்ப்பாணம்

93. துள்ளுநடை நடந்து சுறு சுறுப்பாகக் கதைத்து
அனைவரையும் கலகலப்பாக்கிடுவாள் மனோன்மணியம்மா
—முள்ளிப்பொத்தானை

94. பேச்சு, நடிப்பு விநோதஉடை கல்வி கொண்டு
பல்திறன் பரிசு பெற்ற பாவை நல்லாள் தியானதேவி
—யாழ்ப்பாணம்

95. அன்பும் பண்பும் சுவை கூட்டப் பேசிடுவாள்
பொறுப்புடன் பணிபுரியும் பண்டகசாலைத் தலைவி புவனேஸ்வரி
—கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. குறும்புமொழி பேசிக் குதூகலமாகச் சிரித்து
எண்ணமுடன் சாப்பாட்டறைப் பொறுப்பை ஏற்றார் ருக்மணி

—மாம்புரி

97. பகட்டாகப் பேசி இயன்ற பணிபுரியும்
அன்புளங் கொண்ட அணங்கு வசந்தா

—உடுவில்

98. அமைதியுடன் இருந்து ஆர்வமாய்ப் பணிபுரியும்
நுண்கலை மன்றத் தலைவியாம் சரோஜினி

—கொழும்பு

99. பாட்டு நடிப்பென்றால் பண்புடன் பங்கெடுப்பாள்
முத்தான சிரிப்பினில் பித்தாக்கிவிடும் பாசமலர்
இராதா இல்லத் தலைவி கிளாடிஸ்

—பருத்தித்துறை

100. தகுதிசால் தலைமைபெற்றுத் தமர்பிறரென்றெண்ணுத் தலைவியாகி
வீரமுடன் வேந்தனைய் நடித்த தையல் நல்லாள் சுதர்சாம்பிகை

—திருகோணமலை

101 கண்ணியமும் கடமையுமே கருத்தாய் நின்று கடமை
புரிந்த அருணை இல்லத் தலைவி பிலோமினை

—வத்தளை

102. கண்காட்டிக் கதைபேசிக் காரியத்தைச் சாதிப்பாள்
எண்ணமுடன் நடனத்தில் பங்கெடுப்பாள் மதலேனை

—மன்னர்

103. நிமிர்ந்த நடையுடன் நேர்கொண்ட பார்வையும்
அடக்கமுடன் பணிபுரியும் குணமும் கொண்டார் குணதேவி

—காரம்பொன்

104. எண்ணமதில் யாவர்க்கும் எழில் நடைகாட்டும்
தையற் கலைமிக்காள் கனகபூரணம்

—அல்வாய்

105. நாட்டிய நாடகத்தில் நடனமேதை, ஆங்கில மொழியில்
அறிவுக்கோதை அனைத்தையும் பண்புடன் ஏற்கும் பதுமை நவோமி

—அவிசாவலை

106. அமைதியுடன் ஆற்றலைக்காட்டிப் பந்தாடும்
பண்புப்பெண் கனகாம்பிகை

—ஆனைக்கோட்டை

107. அமைதியாயிருந்து அயராது அனைத்தையும்
தனது கொப்பியில் தவறாது வடிக்கும் பாவை புவனேஸ்வரி

—கோப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

108. குழந்தை மனங்கொண்டாள் குறைவின்றிப் பணிகள்
புரியும் பூவை கமலாம்பிகை

—மீசாலை

109. அடக்கம் மிகக் கொண்டு பாடலில் நாட்டங்கொண்டு
புன்னகை பூக்கும் பூவை புவனேஸ்வரி —கொடிகாமம்

110. மெல்லெனப் பேசிடுவார் மெதுவாய் நடந்திடுவார் மல்லிமலர்

—எழுதுமட்டுவாள்

111. கடமையிற் கண்ணுடையாள் கருத்தரங்கில் கற்சிதமாகப்
புகழ் அடைந்த திறமைசாலி திரவியம்

—கோப்பாய்

112 தித்திக்கப் பேசிச் சிட்டாய்ப் பறக்கும்
பொற்குணப் பூவை யோகேஸ்வரி

—பருத்தித்துறை

113. பந்தை எறிந்தாடி விந்தை மொழி பேசி
சிந்தை மகிழ ஆடும் மங்கை சபீனு

—கல்கமுவா

"வாழ்க்கையில் பற்பல படிகளில் நமக்கு வழிகாட்டிச் செல்வது கல்வி. ஆனல், அபாயமும் சோதனையும் நேரும் போது அது அடியோடு பயனற்றுப் போகிறது. அப்போது தெய்வ நம்பிக்கைதான் நம்மைக் காக்கும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டிலே

## முதலாம் பருவம்

8-1-73 விடுகை வருட மாணவிகள் பல்கலை பயிற்ற பயிற்சிக்கழகம் ஏகுகின்றனர்.

10-1-73 முதலாம் வருட மாணவ சகோதரிகளின் குதூகல கலாசாலை நுழைவு.

15-1-73 உடற்பயிற்சிப் பேராசிரியையின் தந்தையின் இறுதி யாத்திரைச் சடங்கில் எங்கலாசாலையும் சமுகமளித்தது.

17-1-73 வடமாகிலக் கல்வி வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள் வருகை தந்து சிறப்புச் சொற்பொழிவாற்றினர். முதலாம் வருட மாணவியர் கலாசாலைக் கொடியேற்றிக் கீதம் பாடிக் கரத்தினில் ஒளி ஏந்திக் கண்ணியத்துடன் சத்தியப் பிரமாணம் செய்தனர். தொடர்ந்து முதலாம் இரண்டாம் வருட மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

24-1-73 2-ம் வருட மாணவிகள் சமூக அறிவியல் சம்பந்தமாகக் கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்கட்குச் சுற்றுலாவை மேற்கொண்டனர்.

29-1-73 முதலாம் இரண்டாம் வருட மாணவிகள் படிப்பித்தற் பயிற்சிக்காகச் சாதனை பாடசாலைக்குச் சென்ரேம்.

13-2-73 இல்லங்களுக் கிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டி இடம் பெற்றது.

15-2-73 தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. சி. குமாரசாமி அவர்களின் தனிமைக் கவலையைப் போக்கத் திரு. துரைராஜா, திரு. சந்திரசேகரம் ஆகிய இரு பேராசிரியர்கள் எங்கலாசாலையில் கடமை ஏற்றனர்.

27-2-73 இல்லங்கட்கிடையேயான கதைப்போட்டி, பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன.

1-3-73 இல்லங்கட்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டி இடம் பெற்றது.

3-3-73 எம் கலாசாலை இந்துமாமன்றம் மகா சிவராத்திரி விழாவைக் கொண்டாடியது.

7-3-73 வண. சதானந்த ஜீ சுவாமி அவர்களின் இனிய உருக்கமான பக்திப்பாடல்களையும், சொற்பொழிவையும் கேட்டுப் பரவசமானேம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15-3-73 ஸ்ரீ சிதானந்த யோகியாரின் யோகாசனமும், சொற்பொழிவும் இடம் பெற்றது.

16-3-73 இல்லங்கட்கிடையேயான கைவேலைப் போட்டி இடம் பெற்றது.

28-3-73 இல்ல நாடகப் போட்டி இனிதே நடைபெற்றது.

2-4-73 இரண்டாம் வருட மாணவிகள் இலங்கைக் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டனர்.

3-4-73 முன்னாள் அதிபர் செல்வி ஞானம் முருகேசு அம்மையாரின் ஞாபகார்த்த தினம் நடைபெற்றது.

4-4-73 போளவளான ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர்களும், ஆசிரிய மாணவர்களும் இங்கு வருகை தந்தனர்.

5-4-73 }
6-4-73 } முதலாம் வருட மாணவிகள் யாழ். குடாநாட்டுச் சுற்றுலாவை மேற்கொண்டனர்.

7-4-73 முதலாம் பருவ முடிவு. மாணவிகள் களிப்பு மிகக் கொண்டு வீடுநோக்கி விரைகின்றனர்.

## இரண்டாம் பருவம்

2-5-73 நீண்ட நாள் விடுதலையின் பின் கழக ஆரம்பநாள்.

3-5-73 மியூசியஸ் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர்களும், ஆசிரிய மாணவிகளும் எம் கலாசாலைக்கு வருகை தந்தனர்.

22-5-73 இலங்கையின் 1-வது: குடியரசுத் தினத்தை உரிமையுடன் கொண்டாடினோம்.

23-5-73 இல்லங்கட்கிடையே இசைப்போட்டி இனிதே நடைபெற்றது.

26-5-73 கத்தோலிக்க ஆசிரிய மாணவிகள் மருதமடுத் திருப்பதியில் நிகழ்ந்த திருமறைத் தியானச் சடங்குகளில் பங்குகொள்ள மறை ஆசிரியை சங். சகோதரி டானியேலா துணையுடன் சென்றனர்.

6-6-73 இல்லங்களுக்கிடையிலான நாட்டிய நாடகப் போட்டி இரசிக்கத்தக்க முறையில் நடந்தேறியது.

11-6-73 கிறீஸ்தவ மன்றம் கிறீஸ்தவ தினத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடியது. யாழ் / மறை ஆயர் வங். B. தியோகுப்பிள்ளை அவர்கள் வருகை தந்தார்கள்.

13-6-73 எங்கள் கலாசாலையில் முதன் முதலாக இவ்வாண்டு ஆங்கில தினத்தைக் கொண்டாடினோம்.

4-7-73 மாணிக்கவாசகப் பெருந்தகையின் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6-7-73 இல்லங்களுக்கிடையிலான பூக்கோல, மாக்கோல போட்டிகள் இடம் பெற்றன.

7-7-73 செந்தமிழ் அன்னைக்கு முத்தமிழ் விழா எடுத்து மகிழ்ந்தோம். இவ்விழாவிற்கு வடமாநில கல்வி வித்தியாதிபதி திரு.தி. மாணிக்க வாசகர் அவர்கள் வருகை தந்து முத்தமிழ்கொடி ஏற்றி விழா வைத் தொடங்கி வைத்தார்கள்.

21-7-73 இல்லங்களுக்கிடையிலான மெய் வல்லுனர் போட்டியில் உறுதி யுடன் இறங்கினர் ஆசிரிய மாணவியர்.

6-8-73 நடு ஆண்டுத் தேர்வு நடந்தேறியது.

11-8-73 2-ந் தவணை விடுமுறை ஆரம்பம்.

## மூன்றும் தவணை

4-9-73 எம் நினைவில் நீங்காது நிறைந்து நிற்கும் எங்கள் உடன் மாணவி திருமதி இ. நாகலிங்கத்தின் பிரிவுத் துயரைத் தாங்காது துக்கம் அனுட்டித்து அனுதாபக் கூட்டம் நடாத்தினோம்.

27-9-73 நவராத்திரி விழா ஆரம்பம்.

6-10-73 விஜயதசமி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

10-10-73 எம் கலாசாலை பரிசளிப்பு விழா வெகு சிறப்பாகக் கொண் டாடப்பட்டது.

7-11-73 'கிறீஸ்து ஜனன விழா', கிறீஸ்தவ மன்றத்தினரால் கொண் டாடப்பட்டது.

3-12-73 மூன்றாந்தவணை முடிவு. ஈராண்டாக ஒன்று கூடி முதலாம் வருட மாணவியர் இரண்டாம் வருட மாணவியரிடம் விடை பெறுகின்றனர்

6-12-73 இரண்டாம் வருட மாணவியர் தாம் பெற்ற பயிற்சியைத் துணைக் கொண்டு உற்ற பணிபுரிய உளநிறைவுடன் வீடேகுகின்றனர்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசாலை ஆளுமன்ற உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலை ஆளுமன்றம்

ஆள்பதி

திருமதி. இ. ஆனந்தக் குமாரசாமி அவர்கள்

முதலமைச்சர்

திருமதி. சுதர்சம்பிகை ஏகாம்பரம்

உதவி அமைச்சர்

திருமதி. நொயலின் மிராண்டா

பொது நிருவாக அமைச்சர்

திருமதி. அற்புதமணி குரூஸ்

போக்கு வரத்து அமைச்சர்

திருமதி. சரோஜா ஜெயசீலன்

மின்சார அமைச்சர்

திருமதி. மேரி கிறேஸ் கணேச பூபன்

சுகாதார அமைச்சர்

திருமதி. புளோரு குரூஸ்

உணவமைச்சர்கள்

| | |
|---|---|
| 1-ம் பருவம் | திருமதி. மெற்றில்டா லெம்பேட் |
| 2-ம் பருவம் | திருமதி. மலர் துரம். |
| 3-ம் பருவம் | திருமதி. மீனாட்சி சிங்கராசா |

வகுப்புத் தலைமை மாணவிகள்

| | | |
|---|---|---|
| 2-ம் வருடம் | A : | திருமதி நேசமணி காசிநாதன் |
| 2-ம் வருடம் | B : | திருமதி றூத்மேரி அலெக்சாந்தர் |
| 1-ம் வருடம் | A : | சாந்தபவானி சோமாஸ்கந்தர் |
| 1-ம் வருடம் | B : | திருமதி. மேரி ஸ்டெலா பெர்னாண்டோ |
| 1-ம் வருடம் | AB : | செல்வி யோகேஸ்வரி வைத்திலிங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகம் போன்று பல்துறைக் கலைகள் விளங்க ஈழத்தின் திருமுடியாம் யாழ்நகரில் வனிதையர்க்கென இலங்குவது எங்கள் கோப்பாய்—பயிற்சிக் கலாசாலை. சொல்லொண்ணுச் சிறப்புகளில் ஆசிரிய குழாம் துலங்கக் கலைத்திறன் வளர்ப்பது எங்கள் கலாசாலை. ஈழத்தின் அட்டதிக்கிலும் ஒளிவீச எம்மை உருவாக்கி வெளியேற்றும் சக்தி வாய்ந்தது எமது கூடம்.

இம்மா பெரும் கலாசாலையில் அமைதியும் ஒழுங்கும் செவ்வென நிலைநாட்டும் அரிய சேவை புரிவது எம் ஆளுமன்றம். கலை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கற்பொழுங்கு என்னும் அரிய மணிகளைச் சிரமேற்கொண்டு கலாசாலையில் பல்துறை விழாக்களையும் செவ்வனே நிர்வகிப்பது எம் ஆளுமன்றம்.

எம் மனங்கனிந்த அன்னையாக—எம்மன்றத் தலைவராக, ஆள்பதியாக அரும்பணி புரியும் அறிவுசால் மேன்மை தாங்கிய அதிபர் அவர்களின் அரும் பெரும் உரைகளாலும், சிறந்த ஆசிகளாலும், மாணவரின் முன்னேற்றமே தம் கருத்தாய்க் கொண்ட விரிவுரையாளர்களின் அரிய சேவையினுலும், 'கடமையே கண்ணுயினர்' என்னும் அரிய சகோதரிகளின் உழைப்பினுலும் ஒற்றுமையினுலுமே கலாசாலையின் கடமைகள் கண்ணியம் சிறப்புற்றதன்றோ. அனைவர்க்கும் எம் மன்றத்தின் அளவிலா அன்புசால் நன்றி உரித்தாகுக.


சு. ஏகாம்பரம்,
மாணவர் தலைவி.

"அதிகம் படித்து விட்டோம் என்று கர்வம் கொள்ளாதே. பிறப்பு முதல் கற்றல் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. நீ இன்னும் கற்கவேண்டியவை எவ்வளவோ உள."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1



2



1. வடமாநில வித்தியாதிபதி உயர்திரு. தி. மாணிக்கவாசகர் முத்தமிழ் விழாவின்போது மங்கல விளக்கேற்றி வைக்கிறார்.
2. வடமாநில வித்தியாதிபதி உயர்திரு. தி. மாணிக்கவாசகர் தலைமை யுரை யாற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்தமிழ் விழாவில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்றம்

காப்பாளர்கள் : திருவாளர் சி. குமாரசாமி

திருமதி ம. திருச்சிற்றம்பலம்

தலைவர் : திருமதி சௌ. விநாயகமூர்த்தி

செயலாளர் : திருமதி தானியேல் பிலோமினா

பொருளாளர் : திருமதி அ. அல்பிறெட்

மலயத்தோங்கி மதுரையில் வளர்ந்து புலவர் நாவிற் பொருந்திய தென்றல் எனப் புலவோரால் புகழ்ந்துரைக்கப் பெற்ற நம் தமிழ் மொழியின் சீரிய திறம் போற்றி வருகிறது எம் தமிழ் மன்றம். ஆண்டு தோறும் பல அறிஞர்களை அழைத்து அவர்தம் கருத்துக் குவியலில் மூழ்கி நன் முத்துக்களை எல்லாம் ஆசிரிய மாணவியர் பெற வழி வகுத்து வருகிறது.

முத்தமிழின் முறை விளம்ப ஆண்டு தோறும் எம் நங்கையர் எடுக்கும் தமிழ் விழா தமிழர் தம் பண்பைப் பறை சாற்றி வருகின்றது. மேலும் கதை சொல்லற் போட்டி, பேச்சுப் போட்டி, நாடகப்போட்டி ஆகிய நிகழ்ச்சிகளை நடாத்திச் சிறந்த ஆசிரிய குழாத்தை உருவாக்கி வருகின்றது. எம் மன்றத்தின் முயற்சியால் தமிழ்ப்பண்பு பூண்ட, முத்தமிழிற் றோய்ந்த கலைக்கோலம் கொண்ட ஆசிரியமகளிர் ஆண்டாண்டு தோறும் ஆசிரிய உலகில் அடியெடுத்து வைக்கின்றனர்.

எம் மன்றம் செம்மையுறு பணியாற்ற வேண்டும் உதவி நல்கி வரும் எங்கள் அதிபர், எம்மன்றக் காப்பாளர்கள், பேராசிரியர்கள், மன்ற உறுப்பினர்கள், ஆசிரிய சகோதரிகள் அனைவர்க்கும் நன்றி கூறுகின்றோம். இம் மன்றம் மேன்மேலும் மேன்மை மிகு பணியாற்றி மிளிர வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

திருமதி தானியேல் பிலோமினா,
செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்றம்

காப்பாளர் : பேராசிரியர் திரு சி. குமாரசாமி
பேராசிரியை திருமதி ம. திருச்சிற்றம்பலம்
தலைவர் : திருமதி இராசம்மா செல்வராசா
செயலாளர் : திருமதி பாக்கியலட்சுமி திருநீலகண்டன்
பொருளாளர் : திருமதி உத்தமிப்பிள்ளை விசுவலிங்கம்

மனிதன் வாழ்க்கை சிறப்புற அமைவதற்குச் சமயம் இன்றியமையாதது. சமயம் மக்கள் வாழ்க்கையை நெறிப்படுத்துகின்றது. இறைவழிபாட்டைப் பற்றியும் ஆலயதரிசனம் பற்றியும் சமயகுரவர்கள் எமக்கு வழிகாட்டியுள்ளனர். எங்கலாசாலையிலே சமயவளர்ச்சிக்காக இந்துமன்றம் பல அரிய பணிகளைச் செய்துவருகின்றது.

காலை மாலை இறைவழிபாட்டில் ஈடுபடவும், சரியைத் தொண்டுகள் பலவற்றை முறையாக மேற்கொள்ளவும், சமய முக்கியத்துவம் வாய்ந்த விசேட தினங்களைச் சிறப்பாகக் கொண்டாடவும், சமயச் சொற்பொழிவுகள் முதலியவற்றைக் கேட்டுப் பயனடையவும் பல பணிகளை இந்தமன்றம் கடந்தகாலம் ஆற்றியுள்ளது.

இறைவனைப் பூசித்த தினமாகிய சிவராத்திரியை நான்கு யாமங்களிலும் பூசனை புரிந்து வழிபாடாற்றினோம். மாணிக்கவாசகர் குருபூசை தினத்தன்று திரு. விநாயகமூர்த்தி அவர்களின் திருவாசகம் என்னும் பொருள்பற்றிய சிறப்புச் சொற்பொழிவைக் கேட்டுப் பயனடைந்தோம்.

இசையை விரும்பும் இறைவனைப் பண்ணென்றப் பாடிப் பரவப் பயிற்றிய முன்னைநாட் பேராசிரியை செல்வி. சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு அவர்களை நாம் என்றும் போற்றுவோமாக.

தமிழகத்திலிருந்து ஈழநாட்டிற்கு வருகைதந்த சுவாமிஜி சாந்தானந்தஜி அவர்களின் அருள் நிறைந்த இன்னிசைப் பக்திப் பாடல்களைக் கேட்டு இன்புறும் வாய்ப்பை ஆக்கித் தந்தது எம்மன்றம்.

வைத்திய கலாநிதி திரு. சிவஞானரத்தினம் அவர்களும், செல்வி. இரஞ்ஜினி இராசா அவர்களும், திருமதி. சந்திரமதி சிவானந்தன் அவர்களும் இன்னிசை விருந்தளித்து நவராத்திரி விழாவினைச் சிறப்பித்தனர்.

அன்பும் அறிவும் கொண்டு அறநெறிவழி ஒழுகும் எங்கள் அன்னையாம் அதிபர் அவர்கட்கும், இம்மன்ற வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு அயராதுழைத்த மன்றக் காப்பாளர்கட்கும், ஆக்கமும் ஊக்கமும் அளித்த ஏனைய பேராசிரியர்கட்கும், எம்மோடிணைந்து இனிதுழைத்த சோதரிகட்கும் எமது நன்றி.

வணக்கம்.

திருமதி. பாக்கியலட்சுமி•திருநீலகண்டன்,
செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ மன்றம்

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திருமதி R. H. ஹூல் |
| | | சங். சகோதரி டானியலா |
| தலைவர் | : | திருமதி ஞானதீபம் மரியதாஸ் |
| செயலாளர் | : | திருமதி மாகிறெற் அந்தோனிப்பிள்ளை |
| பொருளாளர் | : | திருமதி ம. எ. செ. ஏபல் |

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக விஞ்ஞானம் முன்னேறி வரும் இவ்விருபதாம் நூற்றாண்டிலே, அவ்வாறு முன்னேறி வரும் விஞ்ஞானத்துடன் கைகோர்த்து வீறு நடை போடும் நவநாகரிக யுகத்திலே, இறைவன் என்று ஒருவன் இருக்கின்றானா? என்று வினாத் தொடுக்கும் உள்ளங்களுக்கு ஒரு சவாலாக அமைந்து யாவரையும் அறப்பணிக்கும், நெறிப் பணிக்கும், இட்டுச் செல்லும் ஓர் அரிய சாதனமாக விளங்குவது மறை நெறி பாடாகும். இம்மறை வழிபாட்டை நன் முறையில் ஆற்றவும், மறை வழிகளை மனத்திற் பதித்து வாழ்வாங்கு வாழவும் வழிப்படுத்துகின்ற, தூயபணியிலே எம் கிறிஸ்தவ மாமன்றம் புரிந்து வரும் சிறுபங்கினை இவ்வாண்டறிக்கையின் மூலம் சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி யடைகின்றேன்.

ஆண்டுத் தொடக்கத்திலேயே புதிதாக நாற்பத்தாறு அங்கத்தவர்கள் வந்து சேர்ந்தனர். இதனால் இம் மன்ற அங்கத்தவர் தொகை நூற்றுப் பன்னிரெண்டு ஆகி என்றுமில்லாதவாறு பொலிவுற்றுத் திகழ்கின்றது. மறைக் கல்வி கற்பதற்கும் கிறிஸ்தவ தினம், கிறிஸ்து ஜயந்தி விழா போன்ற விழாக்களை ஏனைய சகோதரிகளுடன் சேர்ந்து சிறப்புடன் நடாத்தவும் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

எங்கள் அதிபர் அவர்களின் விருப்பத்துடனும் சங். சகோ. டானியலா அவர்களின் தூண்டுதலினாலும், இவ்வாண்டு என்றுமில்லா எழுச்சியுடனும் மகிழ்ச்சியுடனும், இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்திலும், அமல அன்னையின் யாத்திரைத்தலமான மருதமடுத் திருப்பதியிலும், நடந்தேறிய ஞானவொடுக்கங்களில் எமது மன்ற அங்கத்தவர்கள் முதல் தடவையாகப் பங்குபற்றினர். கிறிஸ்தவ தினம் தலைவர் கனம் R. H. R. ஹூல் அவர்களின் தலைமையில், யாழ் மறை ஆயர் அதிவந். வ. தியோகுப்பிள்ளை, ஆண்டகை அவர்களதும் அருட் தந்தையர் இருவர்களதும் கூட்டுப்பலியுடன், நடந்தேறியமையும் பலியின் போது அப்பமும் இரசமும் வழங்கப்பட்டமையும், மிகவும் அருட்சிக்குரியதா யிருந்தது. அவ்வாறே கிறிஸ்து ஒளி விழாவும் விவிலிய வழிபாட்டுடனும் பல நிகழ்ச்சிகளுடனும் நடந்தேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பணிகளைச் செவ்வனே செய்திடப் பேரூக்கம் தருவதோடு எங்கள் மன்றத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அவ்வப்போது பெருந்துணை யாக விருந்து ஆக்கமும் ஊக்கமுமளிக்கும் எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கு முரிய அதிபரை நாம் பாராட்டுவதுடன் எம்மன்றத்தின் சார்பில் உளங் கனிந்த நன்றியையும் சமர்ப்பித்துக் கொள்ளுகின்றோம். இம்மன்றம் வளர்ச்சி பெற அயராதுழைக்கும் எமது சமய விரிவுரையாளர்கட்கும், பேராசிரியர்களுக்கும், எமது பணிகளில் எமக்குத் தோள் கொடுத்துதவிவரும் கலாசாலைச் சகோ தரிகள் அனைவருக்கும் மனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

எம்பணிகளை உற்று நோக்கி இனிமேல் வரும் எமது மன்ற உறுப் பினர்களும் அரும்பணியாற்றிட எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலித் திட அன்புடன் வேண்டுகின்றோம்.

திருமதி மா. அந்தோனிப்பிள்ளை,
செயலாளர்.

''எத்தனை நாடுகளை வென்றாலும் எவ்வளவு அரசர்களை அடிப்படுத்தினாலும், எத்துணை செல்வத்தைத் திரட்டினாலும் அலெக்சாந்தர் இவ்வுலகை விட்டுச் செல்லும்போது எதையும் கொண்டு செல்லவில்லை. வெறுங்கையனாகவே சென்றான் என் பதை உலகு உணரும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய மன்றம்

காப்பாளர்: திருமதி மி. சிவசுப்பிரதாஸ்
தலைவர்: திருமதி தியானதேவி செல்வகுருநாதர்
செயலாளர்: திருமதி கிறேஸ் அரியநாயகம் அகஸ்ரீன்
பொருளாளர்: செல்வி அரியமலர் சின்னப்பு.

தற்போது எம் நாட்டில் முன்னேறி வரும் அபிவிருத்தித் திட்டங்களில் விவசாய அபிவிருத்தியும் முக்கியமானது என்று கருதப்படும் இவ்வேளையில் நாமும் விழித்தெழ வேண்டும்.

எமது கலாசாலையில் விவசாய மன்றத்தை ஏற்படுத்தி, எல்லோரும் ஒன்று சேர்ந்து நிலத்தைப் பண்படுத்தி வெங்காயம், கீரை, வெண்டி, கத்தரி, மரவள்ளி, வாழை முதலியன பயிரிட்டு வருகின்றோம். பலன் கண்டு மகிழ்ந்தோம். இன்னும் பலனை எதிர்பார்க்கின்றோம்.

எம்மன்ற அழைப்பின் பேரில் வருகை தந்த செல்வி திலகவதி பெரியதம்பி, வட்டார விவசாய அதிகாரி விவசாய அபிவிருத்தியைப் பற்றிய அறிவுரைகளைக் கூறி விவசாயத்தில் ஆக்கமும் ஊக்கமும் பெறக்கூடிய அரிய பெரிய சொற்பொழிவை ஆற்றியதோடு, தொழில் முன்னிலை பாடநெறியைப் பற்றிய விளக்கத்தைத் தந்துள்ளார். இவருக்கு நாம் என்றென்றும் கடமைப்பாடுள்ளோம்.

எமது கலாசாலை அதிபரும், மன்றக் காப்பாளர்களும் எமக்களித்த ஆர்வத்திற்கும் ஊக்கத்திற்கும் நாம் நன்றி நவில்கின்றோம்.

"தன்கையே தனக்குதவி" என்று நம்மிடையே ஏற்பட்டுள்ள பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்துவதற்கு நாட்டில் நல்வளம் பெற்று முன்னேற ஒத்துழைப்போமாக.

திருமதி கி. அ. அகஸ்ரீன்,
செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித- விஞ்ஞான மன்றம்

| | |
|---|---|
| காப்பாளர் : | செல்வி த. முத்தையா<br>திருவாளர் க. துரைராசா. |
| தலைவர்: | திருமதி மகேஸ்வரி இராமேஸ்வரன். |
| செயலாளர் : | திருமதி நீற்ரு விறெட்.றிக். |
| பொருளாளர்: | திருமதி பூமலர் பிலிப் |

விஞ்ஞானத்துறையில் பரந்த அறிவையும் ஆர்வத்தையும் முன்னேற்றத்தையும் அடையச் செய்வதே நமது விஞ்ஞான மன்றத்தின் நோக்கமாகும். மனிதன் இயற்கையாகவே கற்றலை விரும்புகின்முன். இவ்விஞ்ஞான உலகத்தில் மனிதன் கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் தொடர்புள்ளவனுகக் காணப்படுகின்ருன். விஞ்ஞானத்தையும் புதுமுறைக் கணிதத்தையும் கற்பதனுல் அவற்றிலுள்ள கலா இரசனையையும் இன்பங்களையும் அவனுல் அனுபவிக்க முடியும். வருங்கால மாணவ சமுதாயத்தை உருவாக்கும் ஆசிரிய குலம் சூழலிலுள்ள விடயங்களை விஞ்ஞான முறையில் கற்று விஞ்ஞான ரீதியில் பிரச்சினைகளை ஆராய்ந்து, விஞ்ஞான மனப்பான்மையையும் விஞ்ஞானத்திற்குத் தேவையான அடிப்படைத் திறமைகளையும் விருத்தி செய்தற்குரிய பயிற்சி பெற்றுத் திகழும் நோக்கமாக விஞ்ஞானத் துறையில் பரந்த அறிவும் ஆற்றலும் படைத்த புதிய விரிவுரையாளர் ஒருவர் நமக்கு கிடைத்தது எமது மன்றத்தின் கிடைத்தற்கரிய ஒரு பெரும் பேருகும். அத்துடன் விஞ்ஞானத் துறையைத் துலங்கச் செய்யும் நோக்குடன் அதற்கு வேண்டிய இரசாயன விஞ்ஞானப் பரிசோதனைப் பொருட்களை உதவிய அரசாங்கத்தாருக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எம்மன்றமானது இடையிடையே ஆசிரிய மாணவிகள் மூலம் வகுப்புகள் ஒழுங்கு செய்து பரிசோதனைகள் மூலம் பல விடயங்களைச் செய்து காட்டி ஆசிரிய சமுதாயம் விஞ்ஞானத் துறையில், மேல் நோக்கிச் செல்லப் பெருமுயற்சி எடுத்து வருகின்றது.

மேலும் இம்மன்றம் சிறப்புறச் செயலாற்ற சாதனங்களை அமைத்துக் கொடுத்த எம் மதிப்புக்குரிய அதிபர் அவர்கட்கும், எமது மன்றக் காப்பாளர்களுக்கும், எமக்கு அரிய உதவிகள் புரிந்து எம்மை ஊக்குவிக்கும் கணித விஞ்ஞானப் பேராசிரியர்கட்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேம். இம்மன்றம் என்றும் வளர்ச்சி பெற்றுச் சிறப்புற்றுச் சேவையாற்ற வேண்டுமென இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றேம்.

திருமதி நீற்ரு விறெட்றிக்,
செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையியல் மன்றம்

| | |
|---|---|
| காப்பாளர் : | பேராசிரியர் திருமதி ஓ. செ. தர்மானந்தன் |
| தலைவர்: | திருமதி தி. மரியநாயகம் |
| செயலாளர் : | செல்வி கு. கணபதிப்பிள்ளை |
| பொருளாளர்: | திருமதி ம மரியாம்பிள்ளை |

பூவுலகில் மக்களின் அன்றாட வாழ்வில் பெரும் பயன் விளைவிப்பது மனையியல். ஏழை முதற் குபேரன் வரை எல்லோரது வாழ்வையும் துலங்கச் செய்ய வல்லது மனையியல். மக்களிடையே புத்துணர்ச்சி யூட்டி அவர்கள் பழமையோடு புதுமையையும் அனுபவித்து வாழ வழி வகுப்பது மனையியல்.

இதுவரை நாம் பிறநாட்டுப் பண்டங்களைக் கொண்டு பல வகையான சிற்றுண்டிகளைச் செய்தோம். ஆனால் இன்று இறக்குமதித் தடை ஏற்பட்டும் மனம் சோர்ந்திலேம். எம் மனையியல் மன்றம் தன்கையே தனக்குதவி யென நம் நாட்டு விளைபொருள்களில் அறு சுவை பொருந்திய வாய்க்கினிய சிற்றுண்டிகளைச் செய்து தேடிவந்தோரை நாடி விருந்தளித்து மகிழ்விக்க வழி யாது என ஆராய்கிறது. எங் கலாசாலையில் நிகழ்ந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் விழாக்களிலும் விருந்தினரை உபசரிக்கும் பொறுப்பை மன்றம் ஏற்று அனைவரும் திருப்தியுறும் வண்ணம் அரும் பணி புரிந்தது.

சென்ற ஆண்டு போலவே இவ்வாண்டும் தொடர்ந்து மாக் கோலப் பூக்கோலப் போட்டியையும் எமது மன்றம் நடாத்திப் பெருமையுற்றது.

என்றும் மனந்தளராது மலையின் மேலிட்ட தீபம் போன்று எமது மன்றம் சிறப்புற்று இலங்க உதவியளிக்கும் மாட்சிமை மிக்க அதிபர், பேராசிரியர்கள் அனைவருக்கும் விசேடமாக மன்றக் காப்பாளர் அவர்கட்கும் மன்றம் தனது மனமுவந்த நன்றியை மிக்க பணிவோடு நவில்கின்றது.

வாழ்க மனையியல் மன்றம்!

செல்வி குணதேவி கணபதிப்பிள்ளை,
செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சி மன்றம்

| | |
|---|---|
| காப்பாளர் : | திருமதி D. தர்மராசா |
| விளையாட்டுத் தலைவர் : | திருமதி L. E. பெர்னண்டோ |
| விளையாட்டு உபதலைவர் : | செல்வி R. ராக்கப்பன் |
| செயலாளர் : | திருமதி தி. செல்வகுருநாதன் |
| பொருளாளர் : | திருமதி B. F. பெரேரா |

அகில உலக சமுதாயத்தில் விளையாட்டு முக்கியமான ஓர் இடத்தைப் பெறுகின்றது. அது மனிதப்பண்புகளையும், சமூகப் பண்புகளையும், திடகாத்திரமான உடலையும் தந்து ஒவ்வொருவரையும் உற்சாகத்துடன் முழு மனிதனாகத் திகழச் செய்கின்றது. சிறப்பான சீரிய வாழ்விற்கு வேண்டிய நற்பண்புகளையும், நல்லொழுக்கத்தையும் பயிற்றிப் பயன்படுத்தி ஆற்றலும், அறிவுமுடையோராக விளங்க எங்கழகம் உதவி புரிகின்றது.

இன்னும் ஆண்டுதோறும் இல்லங்களிடையே வலைப்பந்தாட்டப் போட்டி, மெய்வல்லுநர்ப் போட்டி, விளையாட்டுப்போட்டி முதலியவற்றையும் திறம்பட நடாத்துகின்றது. தனி ஒரு நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற இல்லத்திற்கும், முழுமையாகத் திறமைமிக்க இல்லத்திற்கும் கலாசாலை, வீரரமணிகளுக்கும் முறையே வெற்றிக் கிண்ணமும், கேடயமும், வீரரமணிக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் அளித்து எங்கழகம் களிபேருவகை அடைகின்றது.

இவ்வாண்டும் வியக்கத்தக்க முறையில் எங்கழகம் வெகுசிறப்பாக தனது விளையாட்டுப் போட்டியை நடாத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். இப்போட்டியில் பிரதம அதிதியாக சமூகசேவைத் திணைக்கள உதவி அதிகாரியும், யாழ் மாவட்ட சாரணர் இயக்க ஆணையாளருமாகிய மதிப்பிற்குரிய ஏ. சி. நாகராசா அவர்கள் கலந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தார். ஆண்டுதோறும் நிகழும் இப்போட்டி இம்முறை சீரும் சிறப்பும் பொருந்த செவ்வனே நடாத்த உதவிய அதிபர், பேராசிரியர்கள் அளித்த ஊக்கம் எம்மை உற்சாகமாகச் செயற்பட வைத்தது. எங்கழக அதிபர், பேராசிரியர்களுக்கும் சிறப்பாக உடற்பயிற்சிப் பேராசிரியருக்கும் எம் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக. எம்மன்றம் உயர்ச்சி பெற்று மென்மேலும் வளர்ந்து பெருமையுற்றுத் திகழ மனமார வாழ்த்துவோமாக.

திருமதி தி. செல்வகுருநாதன்,
மன்றச் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கலை மன்றம்

மன்றக் காப்பாளர் : திருமதி பொ. பத்மநாதன்

தலைவர் : ,, சரோஜினி கதிரவேலு

செயலாளர் : ,, மரியம்மா இஸ்ரனிஸ்லாஸ்

பொருளாளர் : ,, சந்திரமதி சிவானந்தன்

கலை உயிருக்கு இன்பம் பயப்பது. முன்னாளில் முடியுடை மூவேந்தர் கலைகளை வளர்த்தார்கள். இந் நாளில் எல்லோரும் மன்னர். எனவே நாம் தான் கலைகளைப் பேணிப் பாதுகாத்துப் போற்றி வளர்க்க வேண்டும்.

இதனைக் குறிக்கோளாகக் கொண்டே ஆரம்பத்திலிருந்து இன்று வரை ஆர்வம் குன்றுமல் வளர்ந்து வருகிறது எம் நுண்கலை மன்றம். இம் மன்றம் ஆசிரிய மாணவியர், சங்கீதம், நடனம், ஓவியம் ஆகிய கலைகளில் தமக்குள்ள திறமைகளை வெளிப்படுத்தி மேலும் அக்கலையில் முன்னேற வாய்ப்பை அளிக்கின்றது.

இவ்வாண்டு சங்கீதம், நடனம், பஜனை, சித்திரம், கைவேலை ஆகியவற்றில் இல்லங்களுக்கிடையே போட்டிகள் நடாத்தப்பட்டமையும், புகழ் பெற்ற ஓவிய நிபுணர் திரு. பெனடிக்ற் அவர்கள் இரு முறை வருகை தந்து ஓவியக் கலை பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றியமையும், சுவாமி ஸ்ரீமத் சாந்தானந்தஜி அவர்கள் இன்னிசை விருந்து அளித்தமையும் மகிழ்ச்சிக் குரியதாகும்.

மேலும் இம்மன்றம் சிறப்புறச் செயலாற்ற நாம் வேண்டும் போதெல்லாம் முகமலர்ந்து உதவியளித்த எமது அன்னையாம் அதிபர் அவர்கட்கும், அரிய உதவிகள் புரிந்து எம்மை ஊக்குவித்த மன்றக் காப்பாளரான சங்கீத விரிவுரையாளர் அவர்கட்கும், அல்லும் பகலும் நடனக்கலையில் எமக்கு ஆர்வத்தை யூட்டி வளர்ச்சியுற உதவிய நடன விரிவுரையாளர் அவர்கட்கும், சித்திரக் கலையைச் சிறப்புடன் பயில ஊக்கமளித்த சித்திர விரிவுரையாளர் அவர்கட்கும், எமக்கு வேண்டிய ஆலோசனைகள் பல புரிந்த பேராசிரியர்கள் அனைவர்க்கும், கட்புல, செவிப்புல, சாதன உதவியாளர் அவர்கட்கும், ஒத்துழைப்பு நல்கிய ஆசிரிய மாணவிகள் அனைவர்க்கும் எம் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி. மரியம்மா இஸ்ரனிஸ்லாஸ்,
நுண்கலை மன்றச் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *English Literary Association*

*Patron:* Miss G. R. Chellappah

*President:* Mrs. U. Sivapragasam

*Secretary:* Mrs. B. Ratnam

*Treasurer:* Miss A. Sinnappu

It is with great pleasure that I present the report of the English Literary Association. We should be proud indeed to have inaugurated the above association at our Training College. This is our maiden attempt and is surely a bold attempt as we are supposed to be Tamil medium trainees. We had the courage and determination to organise such an association to give English its proper place in our society. We know pretty well that English language has become an international link and it is the universal tongue.

We had the proud privilege of inviting Mrs. G. T. Chelliah, Principal Chundikuli Girls' College as our chief guest at the inaugural meeting she delivered a lecture on "The Importance of English." The trainees too participated in that meeting and presented various items. We hold our meetings once a month and the members entertain us with items like action songs, speech, recitation, plays etc.

It is our earnest wish that this association should grow from strength to strength in the years to come and I am sure our successors will try their utmost to keep it alive and carry it forward. We express our sincere gratitude to our principal, to our patron and to the members of the staff for their valuable guidance and advice. Finally I thank our members who have co-operated whole-heartedly to make all our activities a success.

**B. Ratnam,**
*Secretary.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளையாட்டுப் போட்டியில் வெற்றிக்கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்ட அருண இல்ல அரிவையர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளையாட்டுப் போட்டியில் வெற்றிக்கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்ட அருணா இல்ல அரிவையர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணா இல்லம்

இல்லத் தாய்மார்கள் : திருமதி சு. செல்லத்துரை
திருமதி ஓ. செ. தர்மானந்தன்

இல்லத் தலைவி : திருமதி எம். பி. எட்வேட்

உப தலைவி : திருமதி அ. அ. குரூஸ்

அண்ட சராசரத்தையும் மிளிரச் செய்ய ஒளி வீசுகிறான் அருணன். அருணனின் திரு நாமம் கொண்ட எமது அருணா இல்லம் கோப்பாய் ஆசிரிய மகளிர் கலாசாலையில் ஒளி வீசுகின்றது.

ஆசிரிய குழாம் பேரொளி வீச பல கலைகளையும் பயிற்று முகமாக இவ்வருடம் நடாத்திய போட்டிகளில் முதலாமிடம் வகித்துள்ளது எமது இல்லம். நாடகம், நாட்டிய நாடகம், அணி நடை, விளையாட்டு, உடல் நலப் பயிற்சி, மாக்கோலம், கைவேலை, கதை சொல்லல், இசைத்தல் ஆகிய இவற்றில் முதலாம் இடத்தையும், வலைப்பந்தாட்டம், பேச்சுப் போட்டி இவற்றில் இரண்டாம் இடத்தையும் பெற்ற பெருமை உடைத்து எமது இல்லம்.

இப்பெரும் வெற்றிக்குக் காரணம் எமது இல்லத் தாயர் திருமதி சு. செல்லத்துரை அவர்களினதும், திருமதி. ஓ. செ. தர்மானந்தன் அவர்களினதும் சலியாத உழைப்பும், திடமான ஊக்கமுமாம். ஓய்வு ஒழிவு இன்றி வெற்றியே நமது இலக்கு என்று நமக்கு எடுத்துரைத்து எம்மை இயக்குவித்த அன்னாரின் தன்னம்பிக்கையே வெற்றிக் கிலக்கணமாகும். அருணா இல்லத்தவர் ஏழுபத்துடன் ஐந்து அரிவையர் ஆவோம். தாயார் ஊக்குவிக்க நாமும் ஒத்துழைத்தோம். பயன் கண்டு பெருமிதம் அடைகின்றோம்

எங்கள் இல்லம் சிறப்பெய்தக் காரணமாக இருந்த இல்லத்தவர் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றி. எங்கள் இல்லம் என்றும் போல் எதிர்வரும் காலத்திலும் ஒளி வீச வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

திருமதி எம். பி. எட்வேட்,
இல்லத் தலைவி.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராதா இல்லம்

| | | |
|---|---|---|
| இல்லத் தாய்மார்கள் | : | திருமதி ம. திருச்சிற்றம்பலம் |
| | | திருமதி R. H. R. ஹால் |
| இல்லத் தலைவி | : | செல்வி ச. ஈ. கி. சின்னப்பா |
| உப தலைவி | : | செல்வி ந. பிச்சமுத்து |

உலகிற்கு ஒளியையும், சக்தியையும் வழங்கி வருகின்ற ஆதவனைச் சின்னமாகக் கொண்டும் வனிதையரின் திருப்பெயரைத் தன் நாமமாகக் கொண்டும் விளங்கி வருகிறது எம் இராதா இல்லம்.

தம் இல்ல முன்னேற்றத்துக்காக அரும் பெரும் பணி புரிந்து அயராது உழைக்கும் அரிவையர் எழுபத்தைவரைக் கொண்டது எம் இல்லம். கலா சாலையில் நடைபெறும் சகல நிகழ்ச்சிகளிலும் மகிழ்வுடன் கலந்து கொண்டு செயலாற்றி வருகின்றது.

சித்திரப் போட்டியிலும், இல்ல அலங்காரப் போட்டியிலும், விநோத உடைப் போட்டியிலும் முதல் இடத்தைப் பெற்று வெற்றிவாகை சூடியது. அணிநடைப் போட்டியிலும் இரண்டாம் இடத்தைப் பெற்று அதற்கான வெள்ளிக் கிண்ணத்தையும் ஏற்றுப் பேருவகை எய்தியது. பிற நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றும் பெருமை கொண்டது.

ஏனைய நிகழ்ச்சிகளில் முதலிடம் பெற வாய்ப்பின்றிப் போயினும், பெருமை மிகு அதிபர், பேராசிரியர்கள், மற்றும் பலரின் பாராட்டுதல்களையும் பெற்றுத் திருப்தி கண்டது.

எம் இல்லம் ஈட்டிய வெற்றிகள் அனைத்திற்கும், அதன் முன்னேற்றத்திற்கும் சுடர் விளக்கென ஒளி தந்து வெற்றிப் பாதையில் வழி நடாத்தி ஊக்கமும் உற்சாகமும் நல்கிய எமது இல்லத் தாய்மார்களுக்கு எமது இதயங் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் பேருவகை கொள்ளுகின்றோம்.

இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் நன்கு நிகழ்ந்தேற எமக்குப் பேருதவி புரிந்த மாண்பு மிக்க அதிபர் அவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், அயரா ஊக்கங் கொண்டுழைத்த எம் இல்ல அரிவையர் குழாத்திற்கும் எம் மனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இராதா இல்லம் வாழ்க, வளர்க.

செல்வி ச. ஈ. கி. சின்னப்பா,
இல்லத்தலைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராதா இல்லம்



அருணா இல்லம்



சுவர்ணா இல்லம்







விளையாட்டு வீரரமணி
செல்வி. க. செபஸ்தியாம்பிள்ளை

இரண்டாவது வீரரமணி
செல்வி. வி. கணபதிப்பிள்ளை

ஆகியோர்
திருமதி. நாகராசாவிடம் வெற்றிக்கிண்ணத்தைப் பெறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர்ணு இல்லம்

| | | |
|---|---|---|
| இல்லத் தந்தை: | திருவாளர் | க. துரைராஜா |
| இல்லத் தாய்: | செல்வி | த. முத்தையா |
| இல்லத் தலைவி: | திருமதி | அ. நல்லையா |
| உப தலைவி: | திருமதி | ம. மரியாம்பிள்ளை |

இனிய பண்பும் பயனும் உடையது சுவர்ணம். அன்றியும் அது செல்வமுமாம்.

இவ்வகை உயர்வுடைமை காரணமாகவே நமது இல்லம் "சுவர்ணு இல்லம்" எனப் பெயர் பெற்றது. அதற்கமைய எல்லாப் பயனுந்தரும் பூலோக கற்பகதருவான பனை அதன் சின்னமாக விளங்குகின்றது.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்னும் ஆன்றோர் கூற்றுக்கு ஒப்ப பல்வேறு இடங்களில் பல்வேறு சமூகங்களில் இருந்து வந்தாலும், எமது இல்ல ஆசிரிய மாணவர்கள் உள்ளத்தால் ஒன்றுபட்டுக் கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்னும் உயரிய இலட்சியங்களால் பின்னப்பட்டு அயராது உழைத்து வருவதால் கலாசாலை நிகழ்ச்சிகளில் வெற்றி வாகை சூடி மிளிர்கின்றது எமது இல்லம்.

அடுத்தடுத்து வந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் எமது இல்லம் ஈட்டிய வெற்றியைச் சொல்லாமல் விட முடியாது. வலைப்பந்தாட்டப் போட்டி, பேச்சுப் போட்டி பூக்கோலப் போட்டிகளில் 1-ம் இடத்தைப் பெற்றுப் பலரின் பாராட்டையும் பெற்றது. கதைப் போட்டி, மெய்வல்லுநர்ப் போட்டி, நாடகப் போட்டிகளில் 2-ம் இடத்தையும் பெற்றுள்ளது.

இவ்வெற்றிகள் அனைத்திற்கும் காரணமாய் விளங்கிய எமது இல்லத் தந்தை திருவாளர் க துரைராஜா அவர்களுக்கும், இல்லத் தாய் செல்வி அ. முத்தையா அவர்களுக்கும் எமது உளங் கனிந்த நன்றிகள் உரித்தாகும்.

இந் நிகழ்ச்சிகளை நாம் திறம்பட நடாத்த எமக்குப் பேருதவிகள் புரிந்த பெருமைமிக்க அதிபர் அவர்கட்கும், நிகழ்ச்சிகளில் ஆக்கமும் ஊக்கமுமளித்த ஏனைய பேராசிரியர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாழ்க சுவர்ணு !**
**வளர்க சுவர்ணு !!**

திருமதி அ. நல்லையா,
இல்லத் தலைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க பல்லாண்டென வாழ்த்துகிறோம்

## இவ்வாண்டு புதுமண வாழ்க்கை பூண்டோர்

| மணமகன் | | மணமகள் | | திகதி |
|---|---|---|---|---|
| மாக்ஸ் | — | எலிசபேத் | — | 10—11—1973 |
| கிருஷ்ணமூர்த்தி | — | மங்களம் | — | 10— 9—1973 |
| சிறில் ஜோசப் | — | மேரி மாகிறட் | — | 27 — 1—1973 |
| கமலேஸ்வரன் | — | பரமேஸ்வரி | — | 2— 6—1973 |
| ஜெயரட்ணராஜா | — | மங்கயர்க்கரசி | — | 25— 5 —1973 |
| அழகரத்தினம் | — | இரட்ணரஞ்சினி | — | 24— 4—1973 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லப் போட்டிகளும் முடிவுகளும்

நாடகம் :-

முதலாமிடம் : அருணு இல்லம்
இரண்டாமிடம் : சுவர்ணு இல்லம்

பேச்சு :-

முதலாமிடம் : சுவர்ணு இல்வம்
இரண்டாமிடம் : சுவர்ணு இல்லம்

கதை சொல்லுதல் :-

முதலாமிடம் : சுவர்ணு இல்லம்
இரண்டாமிடம் : அருணு இல்லம்

பா ஓதல் :-

முதலாமிடம் : அருணு இல்லம்
இரண்டாமிடம் : சுவர்ணு இல்லம்

நாட்டிய நாடகம் :-

முதலாமிடம் : அருணு இல்லம்
இரண்டாமிடம் : சுவர்ணு இல்லம்

உடற் பயிற்சி :-

முதலாமிடம் : அருணு இல்லம்
இரண்டாமிடம் : இராதா இல்லம்

விளையாட்டு :-

முதலாமிடம் : அருணு இல்லம்
இரண்டாமிடம் : சுவர்ணு இல்லம்

பூக்கோலம் :-

முதலாமிடம் : சுவர்ணு இல்லம்
இரண்டாமிடம் : இராதர் இல்லம்

மாக்கோலம் :-

முதலாமிடம் : அருணு இல்லம்
இரண்டாமிடம் : சுவர்ணு இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை வேலை :-

முதலாமிடம் : அருணா இல்லம்
இரண்டாமிடம் : இராதா இல்லம்

கதை சொல்லுதல் :

**ஆரம்ப பிரிவு**

முதலாமிடம் : திருமதி ச. சிவானந்தன்
இரண்டாமிடம் : " சி. சிவசுப்பிரமணியம்

**மத்திய பிரிவு**

முதலாமிடம் : திருமதி ப. இரத்தினசிங்கம்
இரண்டாமிடம் : " மேரி அலெக்சாந்தர்

**மேற் பிரிவு**

முதலாமிடம் : செல்வி செ. சுப்பையா
இரண்டாமிடம் : திருமதி க. செல்வராஜ்

பேச்சு :-

முதலாமிடம் : செல்வி அ. விசுவலிங்கம்
இரண்டாமிடம் : சங். சகோதரி மேரி பொஸ்கோ

வீரமணி :-

முதலாமிடம் : செல்வி சு. செபஸ்தியாம்பிள்ளை
இரண்டாமிடம் : " வி. கணபதிப்பிள்ளை

" முதலில் உன்னைக் காப்பாற்று. பின் பிறரைக் காப்பாற்று. ஏனெனில் உன்னைக் காப்பாற்றுவிட்டால் பிறரைக் காப்பாற்ற முடியாது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூருவோம்

ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஆன்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

இவ்வாண்டு இவ்வுலக வாழ்வை நீத்தோர்.

திருமதி இரத்தினபூபதி — நாகலிங்கம்
செல்வி திலகராணி — சரவணமுத்து

அதிபர், பேராசிரியர்கள்
ஆசிரிய மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமுதவாக்கு

பிரம்பும் தடியும் உபயோகியாமல், கோபமும் குறையும் இல்லாமல், சம்பளத்தையும் வெகுமதியையும் எதிர்பாராமல் நமக்குக் கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே. நூல்களைச் சென்றடைந்தால், உறங்காமல் சோர்வு கொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிக்கும். நீங்கள் தேடும்போது எதையும் மறைக்காமல் அளிக்கும். நீங்கள் பெருந்தீங்கு செய்தாலும் வசைமொழி கூறாமல் உங்கள் அறியாமையைக் கண்டு நகைக்காமல், கற்பிப்பனவும் நூல்களே.

— றிச்சேட் — டி. பியூறி.

அன்பளிப்பு: மில்க்வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. இல. இல. 77. யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233.

*மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி*
*அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்;*

நீங்களும்
உங்கள் செல்வக் குழந்தைகளும்
கவர்ச்சியுடன் தோற்றமளிக்க

※ உயர்தர ஜவுளி வகைகளுக்கும்,

※ றெடிமேட் உடைகளுக்கும்,

ஈடிணையற்ற ஸ்தாபனம்

"ராஜ் கோபால்ஸ்"

47 பெரியகடை — யாழ்ப்பாணம்.

உங்கள் திருப்தியே
எங்கள் திருப்தி!!!

உங்கள் ஆடைகள்
எதுவானாலும் சரி

நவீனமுறையில் சலவை செய்து
கொடுப்பவர்கள்

"யாழ் சென்றல்
றை கிளினேஸ்"

நம்பர் 11, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கையர் விரும்பும்
நவநாகரிகமான
பலவிதமான புடைவைத் தினிசுகள்
கூறைச் சேலை வகைகள்
ஆடவர் விரும்பும் அழகிய
சேட்டிங் சூட்டிங் வகைகள்
அழகு சாதனப் பொருட்கள்
பாத அணிகள்

யாவற்றிற்கும் பிரசித்தி பெற்ற
ஸ்தாபனம்

↓

## "மீரு புடைவை மாளிகை"

28, கஸ்தூரியார் வீதி,—யாழ்ப்பாணம்.

மக்களின்
நன்மதிப்பைப் பெற்ற
உத்தரவாதமுள்ள
தங்க நகைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்

## லக்கி ஜுவலர்ஸ்

இல. 131, 133 பிரதானவீதி,
நீர்கொழும்பு.

உங்கள் தேவைக்கேற்ற
சேலை ரகங்கட்கும்
மற்றும் புடைவை ரகங்கட்கும்
சிறந்த ஸ்தாபனம்

## கணேசன் ஸ்ரோர்ஸ்

63, 78 K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான
புடைவைகளுக்கு
முதன்மை
ஸ்தாபனம்

## த. குமாரசாமி
## ரெக்ஸ்ரைல்ஸ்

42, 44, பெரியகடை,
யாழ்ப்பாணம். போன் : 7034

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் அரசினர் மகளிர் கலாசாலை உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், 20 ஆம் இலக்க 5-ம் குறுக்கு வீதியில் வதியும் நிக்கலஸ் ஜேம்ஸ் அவர்களால் யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்று 20-12-73 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org